1 பக்கங்கள் : கல்விச்சுடர் +14

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 31 சனிக்கிழமை (15.07.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 229

# புலிகள் பகுதிக்குள் முன்னேறித் தாக்கிய

# 12 படையினர் பலி! 4 போராளிகள் சாவு!!

## இராணுவ கோப்ரல் உயிருடன் பிடிப்பு சிப்பாய்களின் சடலம் புலிகள் வசம் மட்டக்களப்பு வாகனேரியில் சம்பவம்



மட்டக்களப்பு,ஜூலை15.

மட்டக்களப்பு வாகனேரியில் - விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரதேசத்தினுள் முன்னேறிச் சென்று தாக்குதல் நடத்திய இராணுவ அணியைச் சேர்ந்த பன்னிரண்டு பேர் புலிகள் தொடுத்த பதிலடித் தாக்குதலில் உயிரிழந்திருக்கின்றனர்.

அப்பகுதியில் நேற்று அதிகாலை சுமார் ஒரு மணிநேரம் இடம் பெற்ற மோதலில் கொல்லப்பட்ட படையினரில் பன்னிரெண்டு பேரின் உடல்களை - இராணுவச் சீருடையுடன் - தாங்கள் மீட்டிருக்கின்றனர் என்றும், கோப்ரல் தர படைஅதிகாரி ஒருவர் உயிருடன் கைது செய்யப்பட்டிருக்கிறார் எனவும் விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர். இந்த மோதலில் தமது தரப்பில் நான்கு போராளிகள் உயிரிழந்தும் ஆறுபேர் படுகாயமடைந்தும் உள்ளனர் என்றும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மட்டக்களப்பு நகரிலிருந்து சுமார் 37 கிலோமீற்றர் தொலைவில் உள்ள வாகனேரி பிரதேசம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. நேற்று அதிகாலை 6 மணியளவில் இந்தப் பிரதேசத்தினுள் முன்னேறிய இராணுவத்தின் அணி ஒன்று சுமார் 5 கிலோமீற்றர் தூரம் முன்னேறி வந்து தாக்குதல் தொடுத்தது என்று விடுதலைப்புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

வாழைச்சேனை காகித ஆலைப் பகுதியில் முகாமிட்டிருக்கும் - ராணுவத்தின் 23-3

(14ஆம் பக்கம் பார்க்க)



## 12 சடலங்களையும் இன்று அரசிடம் கையளிக்க ஏற்பாடு

மட்டக்களப்பு,ஜூலை15

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வாகனேரி பிரதேசத்தினுள் முன்னேறிச் சென்று தாக்குதல் நடத்திய இராணுவத்தினரில் 12 பேரின் சடலங்கள் இன்று அரசிடம் கையளிக்கப்படவுள்ளன.

இன்று சனிக்கிழமை காலை இலுப்பையடிச்சேனையில் உள்ள புலிகளின் முகாம் ஒன்றில் வைத்து பன்னிரு சடலங்களும் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் ஒப்படைக்கப்படும் என்று விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் தெரிவித்தார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## பதிலடி கொடுக்கப் போகிறோம் என்ற தகவலை இரு மணிநேரம் முன்னரே தெரியப்படுத்தினோம்!

### வாகனேரி மோதல் குறித்து புலிகள் பிரமுகர் தயாமோகன் விளக்கம்

மட்டக்களப்பு,ஜூலை15

எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் முன்னேறி போராளிகள் மீது தாக்குதல் நடத்திய படையினரைத் திருப்பித் தாக்கப்போகிறோம் என்ற தகவலை, பதில் தாக்குதல் தொடுப்பதற்கு இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்பாகவே போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குத் தெரியப்படுத்திவிட்டோம்.

புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

வாகனேரியில் படையினர் மீது புலிகளின் அணிகள் நடத்திய பதிலடி தொடர்பாக விளக்கமளிக்கையில் அவர் இப்படிக் கூறியிருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இராணுவத்தினர் பெரும் எண்ணிக்கையில் கடந்த வியாழக்கிழமை இரவு எங்களுடைய கட்டுப்பாட்டுப் பகுதியான வாகனேரி, குளத்து மடு கிராமங்களை நோக்கி முன்னேறி வலிந்து தாக்குதலை நடத்தினர். அதில் எங்கள் போராளிகள் நான்கு பேர் வீரச்சாவடைந்துவிட்டனர்.

"எங்கள் போராளிகளைத் தாக்கியிருக்கிறார்கள். அவர்களைப் பின்வாங்கச் சொல்லுங்கள் அல்லது திருப்பித் தாக்குவோம்" என்று இரு மணித்தியாலங்களுக்கு முன்னரே கண்காணிப்புக் குழுவுக்குத் தெரிவித்தோம்.

இத்தகவலை இராணுவத் தரப்பினருக்கு கண்காணிப்புக்குழு தெரிவித்தது. ஆனால்

(14ஆம் பக்கம் பார்க்க)

## உயிரிழந்த போராளிகளின் விவரம்

மட்டக்களப்பு, ஜூலை15

மட்டக்களப்பு, வாகனேரிப் பகுதியில் நேற்று இராணுவத்தினர் முன்னேறி நடத்திய தாக்குதலில் உயிரிழந்த விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களின் பெயர் விவரங்களைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அவை வருமாறு:-

* கப்டன் நவலோஜிதன் (நாகராசா குகன் - முறிப்பு, முள்ளியவளை, முல்லைத்தீவு)

(14ஆம் பக்கம் பார்க்க)

## தயா மாஸ்டரைக் கைது செய்யக்கோரி அப்பலோவுக்கு வெளியே ஆர்ப்பாட்டம்!

### உள்ளே நுழையவும் முயற்சி! பொலீஸார் தடுத்தனர்!!

கொழும்பு,ஜூலை15

அப்பலோ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் விடுதலைப்புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்டரை கைது செய்யக்கோரி பயங்கரவாத த்திற்கெதிரான தேசிய இயக்கம் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியது.

நாரஹேன்பிட்டியிலுள்ள அப்பலோ மருத்துவமனைக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நேற்று நண்பகல் இடம்பெற்றது. விடுதலைப் புலிகளுக்கு எதிராக கோஷங்களை எழுப்பிய ஆர்ப்பாட்டக்காரர்கள், தயா மாஸ்டருக்கு சிகிச்சை வழங்குவதற்கு ஏற்பாடு செய்த அரசாங்கத்தையும் கடுமையாகச் சாடினர். 'தயா மாஸ்டருக்கு சிகிச்சை, படையினருக்கு சாவா,' 'தயா மாஸ்டர் புலியை கைது செய்' என்றவாறான கோஷங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் எழுப்பினர். அத்துடன் விடுதலைப் புலிகளுக்கு எதிரான வாசகங்களையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திடீரெனக் கேட்ட வேட்டுக்களால் நெல்லியடியில் நேற்றிரவு பதற்றம்

கரவெட்டி,ஜூலை15

நெல்லியடி சந்திப் பகுதியில் நேற்று முன்னிரவு 7.10 மணியளவில் கேட்ட துப்பாக்கி வேட்டுக்களை அடுத்து அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

திடீரெனக் கேட்ட வேட்டுச் சத்தங்களை அடுத்து அப்பகுதியில் காவல் கடமையிலிருந்த படையினர் சிதறி நாலாபுறமும் ஓடினர் என்றும் -

படையினர் ஓடியதைக் கண்ட பொது மக்களும் பீதியடைந்த நிலையில் கடைகள், பொது இடங்களுள் மறைந்துகொண்டதை அவதானிக்க முடிந்தது. (70)

## மின் விநியோகம் இன்று தடைசெய்யப்படும் பகுதிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை15

திருத்தவேலை காரணமாக குறிப்பிட்ட சில பிரதேசங்களில் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின்பொறியிலாளர் தெரிவித்துள்ளார்.

கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் ஆகிய பிரதேசங்களிலும் உரும்பிராய், கோண்டாவில், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ். மாநகர சபைப் பகுதி ஆகிய பிரதேசங்களிலும் இன்று மின் தடைப்பட்டிருக்கும் என்று பிரதேச மின்பொறியிலாளர் தெரிவித்துள்ளார். (202)

## முன்னோடிப் பரீட்சை

வட்டக்கச்சி,ஜூலை15

கிளிநொச்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை இன்று அந்தந்தப் பாடசாலைகளில் நடைபெறவுள்ளன.

கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி அபிவிருத்திக்கும் தேர்வுக்குமான சபையினர் இப்பரீட்சையினை நடத்தவுள்ளனர்.

உரிய கோட்டக் கல்வி அலுவலகங்கள் இப்பரீட்சையின் இணைப்பு நிலையங்களாகச் செயற்படும். (1-405)

## கவிதை நூல் வெளியீடு

வட்டக்கச்சி,ஜூலை15

அநாமிகனின் 'எலும்புக் கூட்டின் வாக்குமூலம்' எனும் கவிதை நூலின் வெளியீட்டு நிகழ்வு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வு கிளிநொச்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.ம.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தொடக்கவுரையினை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகமும் சிறப்புரையினை விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரனும் நிகழ்த்துவர். கவிதை நூலினை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் வெளியிட்டு வைக்க முதற்பிரதியினை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் பெறவுள்ளார். (1-405)

## சிறுவனைக் காணவில்லையாம்

யாழ்ப்பாணம்,ஜூலை15

சிறுவன் ஒருவனைக் காணவில்லையென மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மருதடி வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த சுப்பிரமணியம் பிரான்ஸிஸ் தீபன்(வயது 16) என்ற சிறுவனே காணாமற்போனார் என அவரது பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த 12ஆம் திகதி வீட்டில் இருந்து தனியார் கல்வி நிலையம் ஒன்றுக்குச் சென்ற இவர் இதுவரை வீடு திரும்பவில்லையென முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-8)

## இணுவில் லயன்ஸ் கழக பதவியேற்பு வைபவம்

இணுவில் லயன்ஸ் கழகத்தின் 2006/2007 நிர்வாக ஆண்டிற்கான நிர்வாக உறுப்பினர் பதவியேற்பு வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இணுவில் பொதுநூலகத்தில் இடம்பெறும்.

இவ்வாண்டிற்கான தலைவராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி க.தேவராஜாவும் செயலாளராக யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி இடைவரவு விரிவுரையாளர் க.கணேசலிங்கமும் பொருளராக பிரபல வர்த்தகர் சிவராஜாவும் பொறுப்பேற்க உள்ளனர்.

இப்பதவியேற்பு நிகழ்வை சிரேஷ்ட லயன்ஸ் கழக உறுப்பினர் எஸ்.பத்மநாதன் நிகழ்த்திவைப்பார். (1)

# நகரில் சன நெரிசலை தவிர்க்க முனியப்பர் வீதி ஒருவழிப் பாதை

வலி.வடக்கு,ஜூலை15

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் வாகன நெரிசலைத் தவிர்ப்பதற்காக முனியப்பர் கோயில் வீதி ஒரு வழிப் பாதையாக மாற்றப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் தற்போது போருந்து நிலையம், தனியார் சிற்றூர்திகள் தரிப்பு நிலையம் ஆகியன அமைந் துள்ளன. இதன் காரணமாக போக்குவரத்துச் செய்வதில் பாதசாரிகளும் வாகனங்கனச் சாரதிகளும் பெரும் நெருக்கடிகளுக்கு உள்ளாகின்றனர்.

தனியார் பேருந்து நிலையம் முற்றவெளிப் பகுதியில் பல லட்சம் ரூபா செலவில் யாழ்ப்பாணம் மாநகர சபையால் நிர்மாணிக்கப்பட்ட போதிலும் அதனை தனியார் சிற்றூர்திச் சங்கத்தினர் பயன்படுத்துவதில் இழுத்தடித்து வருகின்றனர்.

தற்போது யாழ்ப்பாணம் முனியப்பர் வீதியில் உடைந்துள்ள வெற்று வாய்க்கால் பகுதி மாநகர சபையினரால் மீள புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இப்பணி முடிவடைந்ததும் முனியப்பர் வீதி ஒரு வழிப் பாதையாக்கப்பட்டு தனியார் சிற்றூர்திச் சேவையும் யாழ்ப்பாணம் முற்றவெளிப் பகுதிக்கு மாற்றப்படவுள்ளதாக மாநகர சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (1-68)

# நவோதயா வாரம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை15

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி நவோதயா திட்டத்துள் உள்வாங்கப்பட்டுள்ளது. அதனைஒட்டி இன்று சனிக்கிழமை முதல் 7 தினங்கள் நவோதயா வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

'பாடசாலையிலிருந்து சமூகத்துக்கு - சமூகத்திலிருந்து பாடசாலைக்கு' என்னும் தொனிப்பொருளில் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பெற்றோர், மாணவர்கள், ஆசிரியர்கள் பங்குபற்றும் சிரமதான நிகழ்வு இன்றும் நாளையும் பாடசாலை அதிபர் ச.இராமலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

பாடசாலையின் நூலகம், ஆய்வுகூடம் வகுப்பறைகள் என்பன சுத்தம் செய்யப்பட்டு சீரின்றி இருக்கும் நீர்விநியோகத் திருத்தமும் செய்யப்படும்.

பாடசாலையின் ஏனைய செயற்பாடுகளாக சமயம், கணித விஞ்ஞான தொழில்நுட்பம், விளையாட்டு, உடல் நலம் ஆக்க வெளிப்பாடு போன்ற செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவிருக்கின்றன.

இச்செயற்றிட்டங்களுக்கென கல்வித் திணைக்களத்தால் 60 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

* * *

கல்வியமைச்சினால் வருடந்தோறும் நடத்தப்படும் நவோதயா பாடசாலை வாரம் 2006 இம்முறை யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் இன்று முதல் அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது.

நவோதயா பாடசாலை வாரத்தினையொட்டி இன்றும் நாளையும் பாடசாலையில் மாபெரும் சிரமதானப் பணிகள் நடைபெறவுள்ளன.

நாளைமறுதினம் திங்கட்கிழமை சமய விழுமிய தினம் கொண்டாடப்படவுள்ளது. அன்றைய தினம் காலை 7.45 மணி முதல் நடைபெறும் நிகழ்வில் சர்வமதப் பிரார்த்தனை, ஆன்மீக சொற்பொழிவு,விசேடமாக அன்று ஆடிப்பிறப்பையொட்டிய 'ஆடிக்கூழ்' வழங்கும் நிகழ்ச்சி ஆகியன இடம்பெறவுள்ளன. (1-204)

# அனலைதீவு செல்லும் பயணிகள் படகுகளில் மதுபோதையில் பயணிப்பவர்களால் சிரமம்

அனலைதீவு செல்லும் படகுகளில் மதுபோதையுடன் பயணம் செய்பவர்களால் அந்தப் படகில் பயணிக்கும் ஏனைய பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

கரம்பன் கண்ணகை அம்மன் துறையிலிருந்து அனலைதீவு நோக்கிப் பயணிக்கும் பயணிகள் படகுகளில் அடிக்கடி இந்தச் சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மதுபோதையுடன் படகில் பயணிப்பவர்கள் ஏனைய பயணிகளுக்கு இடையூறு விளைவிப்பதுடன் தகாத வார்த்தைகளைப் பிரயோகிப்பதாகவும் -

இதனால் இத்தகைய படகுகளில் குழந்தைகள், பெண்கள் பயணிக்கமுடியாதிருப்பதாகவும் - தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - அனலைதீவில் சட்டவிரோத மதுபாவனை விற்பனையில் ஈடுபடுவோர் பயணிகள் படகுகளிலேயே விற்பனைக்குத் தேவையான மதுபானங்களை எடுத்துச் செல்வதாகவும் கூறப்படுகிறது.

# அமைச்சரவைக் கூட்டங்களுக்கு இனி கண்டபடி ஆடை அணிந்துவரத் தடை!

கொழும்பு,ஜூலை 15

வாராந்த அமைச்சரவைக் கூட்டத்திற்கு வரும் அமைச்சர்கள் கோல உடைகளுடனேயே சமுகமளிக்க வேண்டுமென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணித்திருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்தவாரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது ஜனாதிபதி இந்த உத்தரவைப் பிறப்பதித்தார் என்று தெரிகிறது.

அமைச்சரவைக் கூட்டங்களுக்கு வரும் அமைச்சர்கள் ஆளுக்கு ஆள் வெவ்வேறு விதமான ஆடைகளுடன் வருவதால் அமைச்சரவையின் அந்தஸ்து பாதிக்கப்படுவதாகக் கருதியே ஜனாதிபதி இந்த பணிப்புரையினை விடுத்திருக்கிறார் என அறியமுடிகின்றது.

ஜனாதிபதியின் இந்தப் பணிப்புரை எதிர்வரும் புதன்கிழமை முதல் அமுலுக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# ஹற்றனில் பெரும் மண்சரிவு போக்குவரத்துகள் பாதிப்பு!

பொகவந்தலாவை, ஜூலை 15

ஹற்றன் நகரில் இடம்பெற்ற பாரிய மண்சரிவினால் வாகனப் போக்குவரத்துகள் நேற்றுக்காலை முதல் தடைப்பட்டன.

ஹற்றன் பிரதான நகரில் - ஸ்ரீமாணிக்கப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் - இடம்பெற்ற இந்த மண்சரிவினால் ஹற்றன் நகரிலிருந்து கொழும்பு, தலவாக்கலை பிரதேசத்துக்குச் செல்லும் பிரதான பாதை மூடப்பட்டது.

இந்தப் பாரிய மண்சரிவினால் அட்டன் - டிக்கோயா பலநோக்கு கூட்டுறவு சங்கக் கடையும் வீடொன்றும் பலத்த சேதமடைந்தன.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்த மண்சரிவை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளில் ஹற்றன் பொலீஸாரும், வீதி அபிவிருத்தி அதிகார சபையினரும், அட்டன் - டிக்கோயா நகரசபையினரும் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை - ஹற்றன் நகரிலிருந்து கொழும்பு, கண்டி, தலவாக்கலை பிரதேசத்துக்கான சகல வாகனப் போக்குவரத்துகளும் ஹற்றன் பொலீஸ் நிலையப் பாதையூடாகவே இடம்பெற்றது.

கட்டட நிர்மாணப்பணிகளுக்காக மண் திட்டு ஒன்றை வெட்டி அகழ்ந்ததன் காரணமாகவே இந்த மண்சரிவு ஏற்பட்டது என்று கூறப்படுகிறது. (ஐ)

# யாழ்.வீரருக்கு தென்னாசிய விளையாட்டில் பங்குபற்றும் வாய்ப்பு கிட்டியது

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த வீரர் ஒருவர் 'சாவ்' தென்னாசிய விளையாட்டுகளில் பங்குபற்றும் வாய்ப்பினைப் பெற்றுள்ளார்.

எம்.பிரதீப்குமார் என்பவரே இந்த வாய்ப்பினைப் பெற்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

சிரேஷ்ட தடகளப் போட்டிகள் நேற்றையதினம் கொழும்பில் நடைபெற்றன. இந்தப் போட்டிகளில் யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் குண்டெறிதலில் பங்குகொண்ட எம்.பிரதீப்குமார் 13.14 மீற்றர் தூரம் எறிந்து 3ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.

இதன் மூலம் அண்மையில் நடைபெறவுள்ள 'சாவ்' தென்னாசிய விளையாட்டுக்களில் பங்குபற்றும் வாய்ப்பினை அவர் பெற்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

நீண்டகாலத்துக்குப் பின்னர் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வீரர் ஒருவர் இந்த வாய்ப்பினைப் பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொழித்திறன் அரங்கும் நூல் வெளியீட்டு விழாவும்

யாழ்ப்பாணம்,ஜூலை15

வவுனியா ஆங்கில மன்றத்தின் ஏற்பாட்டில் மொழித்திறன் விருத்திக்கான வகுப்பறை அரங்கும் 'வகுப்பறை அரங்க எழுத்துருக்கள்' என்னும் நூல் வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி வி.ஆர்.ஏ.ஒஸ்வோல்ட் கலந்துகொள்வார்.

விசேட விருந்தினராக பலாலி ஆசிரிய கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளர் எஸ்.அருள்பிரகாசம் கலந்துகொள்வார்.

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக விரிவுரையாளரின் தொகுப்பில் உருவான 'வகுப்பறை அரங்க எழுத்துருக்கள்' நூல் வெளியீட்டை தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் மொழித்திறன் விருத்தி அரங்க படைப்புகளும் இடம்பெறும். (204)

## வணிகபீட விரிவுரைகள் திங்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை15

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்திற்கு 2005/2006 கல்வியாண்டுக்கான அனுமதியைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகளும் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டமும் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வுக்கு அனைத்து புகுமுக மாணவர்களும் கலந்துகொள்ளுமாறு முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடாதிபதி க.தேவராஜா கேட்டுள்ளார். (1)

## காணாமற்போன சிறுவன் பெற்றோரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை15

சங்கானைப் பகுதியில் உள்ள தனது வீட்டில் இருந்து கடந்த 13ஆம் திகதி காணாமற்போன 13 வயதுச் சிறுவன் கண்டுபிடிக்கப்பட்டு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பதிகாரி தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி பயிலும் அராலி வீதி, சங்கானையைச் சேர்ந்த ஜீவராசா சதீஸ்ராசா(வயது 13) என்ற சிறுவன் காணாமற்போயுள்ளார் என்று மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து குறித்த சிறுவன் தொடர்பாகத் தகவல் தெரிந்தவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.

நீர்வேலிப் பகுதியில் சிறுவன் அநாதரவாகத் திரிந்த நிலையில் அப்பகுதியில் உள்ள ஒரு குடும்பத்தினர் சிறுவனைத் தமது பாதுகாப்பில் வைத்திருந்தனர். இதனையடுத்து இச்சிறுவனை அவர்கள் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஒப்படைத்தனர். பின்னர் சிறுவன் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டான். (1-829)

## சமய சந்நிதிகளில்

தென்மராட்சி,ஜூலை15

சாவகச்சேரி கோயில் குடியிருப்பு சந்தன முதலிச்சிபுலம் முருகமூர்த்தி ஆலய பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 23ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் ஆடி அமாவாசை தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204-117)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை15

நவாலி தேவர்கட்டு இருதய ஆண்டவன் தேவாலய வருடாந்த திருவிழா கடந்த 7ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று சனிக்கிழமை மாலை 5மணிக்கு திருப்பலி நற்கருணை வழிபாடு என்பன இடம்பெறும்

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு திருநாள் திருப்பலி, திருச்சொரூப பவனி என்பன நடைபெறும். (204)

* * *

அரியாலை,ஜூலை15

நீர்வேலி மேற்கு மாலை வைரவர் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா நேற்று வெள்ளிக்கிழமை விசேட பூசையுடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு விசேட பூசை வழிபாடு, பொங்கல் உற்சவத்துடன் நிறைவுபெறும். (204-17)

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# தமிழரைத் தடுமாற வைக்க பொய்ப் பிரசார எத்தனம்

சட்டரீதியாகப் பதில்சொல்லவேண்டிய - அல்லது தமது செய்திகளுக்கு சட்டப் பொறுப்பு ஏற்கவேண்டிய - கடப்பாடு, அநாமதேயமாக இயங்கும் இணையத்தளங்கள் பலவற்றுக்கு இருப்பதில்லை. இந்த வசதியைப் பயன் படுத்திக்கொண்டு எந்த விஷத்தையும் - விஷயத்தையும்- எப்படியும் விதைக்கலாம் என்ற கணக்கில் சில இணையத் தளங்கள் செயற்படுகின்றன.

ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தைக் காட் டிக் கொடுக்கும் கைங்கரியத்தில் முன்னணியில் நிற்கும் சில இணையத்தளங்கள் அவற்றுக்கே உரிய இந்த வாய்ப் பான வசதியைப் பயன்படுத்திக் கொண்டு கண்மண் தெரி யாமல் வதந்திகளைப் பரப்பி, தமது கைவரிசையைக் காட்டி வருகின்றன.

அண்மைக்காலத்தில் அத்தகைய செய்திகள் தாராள மாக- கண், காது, மூக்கு வைத்து - பரப்பப்படுவதை அவ தானிக்க முடிகின்றது.

தலைவர் பிரபாகரன் என்ற ஒரு தனி மனிதரைச் சுற்றி நிற்கின்றது விடுதலைப் புலிகள் இயக்கம், அதன் தலை வரின் உடல் நிலையோ மிக மோசமாக உள்ளது, அள வுக்கு அதிகமாக - வரைமுறையற்ற விதத்தில் - உணவு உட்கொண்டுள்ளதால் அவரின் தேகாரோக்கியம் கெட்டு விட்டது, அதனால் அவர் இல்லாத நிலைமையைப் புலி கள் இயக்கம் விரைவில் எதிர்கொள்ள நேரிடும் என்ற கருத்தை உருவாக்கும் விதத்தில் சுமார் பத்து நாள்களுக்கு முன்னர் இணையத் தளம் ஒன்றில் செய்தி வெளியிடப்பட்டது. தலை வர் பிரபாகரனின் தேகாரோக்கியம் தொடர்பான உண்மை யான மருத்துவ அறிக்கையைக் கையில் வைத்துக் கொண்டு அதனடிப்படையில் உறுதிப்படுத்தப்பட்ட செய்தியை வெளி யிடுவதுபோல பாவனை செய்து அதைப் பிரசுரித்தது.

அதேபாணியில் இரண்டொரு தினங்களுக்கு முன்னர் பிறிதொரு செய்தி அதே இணையத்தளத்தில் வெளியானது.

இலங்கைப் படைகளை அழிப்பதற்காக இரசாயன ஆயுதங்களைப் புலிகள் பெருமளவில் உற்பத்திசெய்து தாக்கு தலுக்குத் தயாராக இருக்கின்றனர் என்று அந்தச் செய்தி தெரிவித்தது.

வன்னியிலிருந்து கசியும் செய்திகளின்படி, மேற்படி 'இர கசிய ஆயுதத்தின்' தரத்தையும் வலுவையும் புலிகள் நன்கு விருத்திசெய்து, தெரிவு செய்யப்பட்ட இலக்கு களைத்தாக்கி அழிப்பதற்கான முறைகளையும் மேம்படுத் தித் தயாராக இருக்கின்றனர் என்றும் அந்த இணையத் தளம் குறிப்பிட்டிருக் கின்றது.

''விஷத்தன்மையான இரசாயன ஆயுதங்களைத் தயா ரிக்கும் ஆய்வுகூடங்கள் வன்னியில் உள்ளன, தங்களின் அடுத்த தாக்குதலுக்குத் தேவையான அளவுக்கு இரசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்து, அவற்றைப் பயன்படுத்தப் புலிகள் தயாராக உள்ளனர், புலிகள் மீதான அரச துருப்பு களின் தாக்குதல் தொடங்குமுன்னர்,புலிகள் இந்த ஆயுதங் களைப் பயன்படுத்துவதன்மூலம் அரச துருப்புகளைச் செய லிழக்கச் செய்யவும் தங்களின் இழப்புக்களைக் குறைக் கவும் திட்டமிட்டுள்ளனர்.''- என்றெல்லாம் அந்த இணை யத்தளம் தெரிவித்துள்ளது.

சில தென்னிலங்கை ஊடகங்கள் இந்தச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவற்றை மறுபிரசுரம் செய்து வருகின்றன.

தீய உள்நோக்கத்தோடு பிரசுரமாகும் இத்தகைய செய்தி களைப் பார்த்து, ஏற்கனவே தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் உண்மைநிலை அறியாமல், தவறாக வழி நடத்தப்பட்டு,அதனால் பின்னடைவுகளைச் சந்தித்து அல் லாடும் தென்னிலங்கை, இன்னும் மேலும் தவறாக வழி நடத்தப்படப் போகின்றது.

மனித குலத்துக்குப் பேரழிவு தரும் ஆயுதங்களை ஈராக் அதிபர் சதாம் தயாரித்து வைத்திருக்கின்றார் என்ற வதந் திக் கதையைப் பரப்பி, அதன் அடிப்படையில் சர்வதேச சமூகத்தின் உணர்வலையை மழுங்கடித்து, ஈராக் மீது படை யெடுத்தன அமெரிக்காவும் அதன் நேசநாட்டுப் படைகளும்.

ஈராக் அதிபர் சதாம் அப்படி எந்த ஆயுதத்தையும் தயா ரித்து வைத்திருக்கவேயில்லை என்ற உண்மை இப்போது அம்பலமாகி வருவதை அடுத்து சர்வதேசத்தின் முன்னால் தனது தாக்குதல் நடவடிக்கைக்காகத் தலைகுனிந்து நிற் கிறது அமெரிக்கா.

ஈராக் மீதும் சதாம் மீதும் போர்தொடுக்க அமெரிக்கா பயன்படுத்திய அதே பொய்க் குற்றச்சாட்டை - பிரசா ரத்தை - ஈழத்தமிழர் தாயகத்தின் மீதும் பிரபாகரன் மீதும் சர்வதேச ஆதரவோடு இலங்கை அரசு போர்தொடுக்க வைப்பதற்கு பயன்படுத்தினால் என்ன என்ற குயுக்தித் திட்டத்தின் வெளிப்பாடே மேற்படி விஷ ஆயுதங்கள் பற் றிய விஷமப் பிரசார முயற்சியாகும்.

தலைவர் பிரபாகரனின் தேகாரோக்கியம் குறித்து சந்தேக நிலையை ஏற்படுத்துவதன் மூலம் விடுதலைக்கான போராட்டத்தில் அவரின் பின்னால் ஒரு தேசமாக - தேசியமாக- எழுச்சி கொண்டிருக்கும் தமிழர்களின் உள் ளத்தைக் குழப்பி, ஸ்திரத்தை உடைக்கலாம் என்று திட்ட மிடப்படுகின்றது.

'பிரபாகரன் செத்துவிட்டார்', 'தமிழ்ச்செல்வன் இறந்து விட்டார்' என்பன போன்ற பெரும் எடுப்பிலான பொய்ப் பிரசாரங்களை ஏற்கனவே பல தடவைகள் சந்தித்து, அவற்றை உதாசீனப்படுத்திவிட்டுத் தங்கள் கடமையிலும் செயற் பாட்டிலும் உறுதியாக இருந்த ஈழத் தமிழ் இனத்தை இது போன்ற வதந்திப் பிரசாரங்களினால் அசைக்க முடியாது என்பதுதான் உண்மை.

# போராட்டத்தில் பங்கேற்கவில்லை; தமிழர் ஆசிரியர் சங்கத்தில் அதிருப்தி

ஆசிரியர்,அதிபர் ஒன்றியத்தின் ஏற் பாட்டில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற தொழிச்சங்கப் போராட்டத்தில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதி நிதிகள் கலந்துகொள்ளவில்லை. இது குறித்து அச்சங்கத்தின் உறுப்பினர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

மேற்படி ஒன்றியத்தினால் வெளியி டப்பட்ட போராட்டம் தொடர்பான அறிவிப்புகளில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பெயர் இடம்பெ றவில்லை. ஆர்ப்பாட்டப் போராட்டத் திலும் சங்கத்தின் சார்பில் பிரதிநிதிகள் எவரும் கலந்துகொள்ளவில்லை.

அதிபர்,ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை உட்பட முக்கியமான கோரிக்கைகளை முன்வைத்து இலங் கையில் உள்ள முன்னணித் தொழிற் சங்கங்கள் நடத்திய இப்போராட்டத் தில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் பங்கு கொள்ளாமல் ஒதுங்கிக் கொண் டது பற்றி உறுப்பினர்கள் கவலை தெரி வித்தனர்.

இதற்கிடையில் ஆசிரியர்-அதிபர் ஒன்றியம் சம்பள நிர்ணய ஆணைக்குழு அலுவலகத்திற்கு முன்பாக கடந்த வியா ழக்கிழமை நடத்திய போராட்டம் பயன் அளித்திருப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் அறிவித்துள்ளார்.

போராட்டத்தின் பின்னர் சம்பள நிர் ணய ஆணைக்குழு, தமது பிரதிநிதி களை அழைத்து பேச்சு நடத்தியதோடு, கோரிக்கைகள் தொடர்பாக விரிவான பேச்சு நடத்துவதற்கு எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சந்தர்ப்பம் வழங்கியிருப்பதாகவும் அவர் தெரி வித்தார். (11)

# சட்டவிரோத மின் இணைப்பை தடுத்த மின்சார சபை ஊழியர் மீது தாக்குதல்!

தென்மராட்சி,ஜூலை15

சட்டவிரோத மின்சார இணைப்பைப் பெற்றவர்கள்,அதனைக் கண்டுபிடித்த மின்சார சபை ஊழியரைத் தாக்கினர்.

இச்சம்பவம் கடந்த இரண்டாம் திகதி வரணி வடக்கு, தம்பான் பகுதியில் இடம் பெற்றது.

சாவகச்சேரி மின்சார சபையின் மின்கட்டணப் பட்டியல் விநியோகிக்கும் ஊழியரே தாக்குதலுக்கு இலக்கானவ ராவார்.

சம்பவ தினத்தன்று இவர் வீடு வீடாகச் சென்று மின் கட்டணப் பட்டி யலை விநியோகித்துக் கொண்டிருந்தார். அப்போது ஒரு வீட்டுக்குச் சட்டவிரோ தமாக மின்சார இணைப்பு பெறப்பட் டிருந்ததை அவர் அவதானித்தார். அந்த இணைப்பிற்கு பயன்படுத்தப் பட்டிருந்த மின்சார வயர்களை கைப் பற்றவும் முனைந்தார்.

இதனையடுத்து சிலரால் அவர் கடு மையாக தாக்கப்பட்டார்.இத்தாக்குத லில் படுகாயமடைந்த மின்சார சபை ஊழியர் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாகக் கிடைத்த முறைப்பாட்டையடுத்து கொடிகாமம் பொலீஸார் தாக்கியவர்களைத் தேடி வருகின்றனர்.தாக்கியவர்கள் தலை மறைவாகியுள்ளனர் என்றுகூறப்படுகி றது. (117-122)

# தொழில்நுட்பக் கல்லூரிப் பரீட்சை ஓகஸ்டில்: விடைத்தாள் திருத்தும் பணி அம்பாறையில்

யாழ். தொழில்நுட்பக் கல்லூரிப் பரீட்சை விடைத்தாள்கள் மதிப்பிடும் பணிகள் வழமைபோல் கொழும்பில் அன்றி இவ்வருடம் அம்பாறையில் நடைபெறவுள்ளதாக தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் ந.யோகராஜன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் நடைபெறவிருந்த யாழ்.தொழில்நுட் பக் கல்லூரியின் இறுதிப்பரீட்சைகள் யாவும் நெருக்கடியான சூழ்நிலைகளால் நடைபெறவில்லை.

அப்பரீட்சைகளை இவ்வருடம் ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி தொடக் கம் 10 நாள்களுக்கு நடத்த விசேட அனுமதிகள் பெறப்பட்டுள்ளது.

விடைத்தாள்கள் மதிப்பிடும் பணி கொழும்பு தலைமைத் திணைக்களத்தி னால் இம்முறை நடத்தப்படாது அவை யாழ்ப்பாணத்தில் நடைபெறவேண் டும் எனவும் -

தமிழ்ப் பகுதிகளைச் சேர்ந்த விரிவு ரையாளர்களினாலேயே விடைத்தாள் கள் மதிப்பிடும் பணி மேற்கொள்ளப் பட வேண்டும் என்றும் - கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

ஆனால்,விடைத்தாள்கள் திருத்தும் பணி அம்பாறை தொழில்நுட்பக் கல் லூரியில் நடைபெறுவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. இதனால் பரீட்சை கள் முடிவடைந்தவுடன் விடைத்தாள்க ளுடன் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி யின் ஒரு தொகுதி விரிவுரையாளர்கள் அம்பாறைக்குச் செல்லவுள்ளனர்.

மதிப்பீட்டுப் பணி முடிவடைந்து இரு வாரங்களில் பரீட்சைப் பெறுபேறு களை பார்வையிட முடியும். - என்று அதிபர் தெரிவித்தார். (ரி)

# குடிதண்ணீர் பெற ஒரு கி.மீற்றர் செல்லும் அல்வாய் பாடசாலை மாணவர்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை15

வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த அல்வாய் றோமன் கத்தோ லிக்க தமிழ் கலவன் பாடசாலை மாண வர்கள் குடி தண்ணீருக்காக சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை செல்ல வேண்டியுள்ளது.

பாடசாலை வளவில் உள்ள கிணற்று நீர் உவராக உள்ளது. இதனால் மாண வர்கள் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத் தில் உள்ள சக்கோட்டைப் பிள்ளை யார் கோயில் கிணற்றில் குடிதண்ணீர் எடுத்து வருகின்றனர். மாணவர்கள் குடி தண்ணீருக்காக செல்லும் வேளை யில் தமது கற்றல் நடவடிக்கையினை கைவிட வேண்டியுள்ளனர்.

பாடசாலையில் காலை உணவு வழங்கப்படும் வேளையில் குடி தண் ணீர் பற்றாக்குறை ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (117)

# மாநகர சபை ஊழியர் ஊதிய நிதி அரசால் 35 வீதம் குறைக்கப்பட்டது

யாழ். மாநகரசபையில் கடமையாற் றும் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கு வதற்கென அரசினால் ஒதுக்கப்பட்டு வந்த நிதியில் 35 வீதம் குறைக்கப்பட் டுள்ளதாக மாநகர சபையின் ஆணை யாளர் சீ.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

இதனால் மாதாந்தம் 40 லட்சம் ரூபா குறைவடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

யாழ்.மாநகர சபையின் செயற்பாடு கள் தற்போது எதுவித பிரச்சினைகளும் இல்லாமல் நடைபெற்று வருகின்றன. ஊழியர்களின் நலன்களும் கவனிக்கப் படுவதால்அவர்களும்முழு ஈடுபாட்டுடன் தமது பணியைச் செய்து வருகின்றனர்.

அத்துடன் மாநகரசபையின் எல் லைக்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி மற்றும் சுகதாரப் பணிகளும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றை யாழ். மாநகரசபை நிர்வாகம் சிறப்பாகக் கவனித்து வருகின்றது.

ஆயினும் மாநகர சபையில் பணி யாற்றும் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கென அரசினால் ஒதுக் கப்படும் நிதி குறைக்கப்பட்டுள்ளது. இதுவரை வழங்கப்பட்டு வந்த நிதியில் இருந்து 35 வீதம் குறைக்கப்பட்டுள் ளது. இதனால் ஊழியர்களுக்கான சம் பளத்தை வழங்குவதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது. மாதாந்தம் ஊழியர் களுக்கான சம்பளத்தில் 40 லட்சம் ரூபா குறைக்கப்பட்டுள்ளது. இதனால் நாம் மாநகர சபையின் வேறு வருமானங் களில் இருந்தும், நிலையான வைப்பு களில் இருந்தும் பணத்தை பெற்றே ஊழியர்களுக்கான சம்பளத்தை வழங்கி வருகின்றோம். தொடர்ந்து இவ்வாறு நாம் எமது நிதியிலிருந்து சம்பளத்தை வழங்கமுடியாது. இது தொடர்பாக நாம் வடக்கு- கிழக்கு மாகாண அமைச்சின் பிரதம செயலாளர் ஆர்.ரங்கராஜனுக்குத் தெளிவுபடுத்தியுள்ளோம். இதனைச் சாதகமாகப் பரிசீலித்து அந்த நிதி முழு மையாகக்கிடைப்பதற்கான நடவடிக் கை களைத் தாம் மேற்கொள்வதாகப் பிரதம செயலாளர் எமக்கு உறுதியளித் துள்ளார். எனவே இந்தச் சிக்கல் விரை வில் தீர்க் கப்படும் - என்றார் சிவஞானம். (111)

## நாளை

ஆனி - 32
ஞாயிற்றுக்கிழமை
16.07.2006
திதி : சஷ்டி
முன்னிரவு: 08.17
நட்சத்திரம் : உத்தரட்டாதி
பின்னிரவு : 04.35
சுபநேரம் : 09.00 - 10.30
ராகுகாலம் : 04.30 - 06.00

# நயினையில் தண்ணீருக்குத் தட்டுப்பாடு; மருத்துவமனை நிலைமை மோசம்

நயினாதீவில் குடிதண்ணீருக்கு பலத்த பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அதிலும் மருத்துவமனையில் நிலைமை படு மோசமாக உள்ளது.

நயினாதீவில் குடிதண்ணீருக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். ஐந்தாம் வட்டாரத்தில் உள்ள ஒரு கிணற்றி லேயே தற்சமயம் மக்கள் குடிதண்ணீர் பெறுகின்றனர். இக்கிணற்றிலிருந்து குடி தண்ணீர் விநியோகத்திற்காக உழவு இயந்திர தண்ணீர் தாங்கியில் நீரை நிறைக் கும் போது தண்ணீர் வற்றுகின்றது. மீண் டும் தண்ணீர் ஊறும் வரை காத்திருந்தே தண்ணீரைப்பெற வேண்டியுள்ளது.

சில வயல்களில் நல்ல தண்ணீர் பெறக் கூடிய வாய்ப்பு இருப்பதாகவும்-

அவ்விடங்களில் கிணறுகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என் றும் - பொதுமக்கள் கூறுகின்றனர்.

இதேசமயம் நயினாதீவு மருத்துவ மனையில் குடிதண்ணீர் தட்டுப்பாடுகாரண மாக பலத்த சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அங்கு குடிதண்ணீர் விநியோகத் தேவை தனியார் ஒருவரின் உதவியுடனேயே சிறிதளவு பூர்த்தி செய் யப்படுகிறது. மருத்துவ மனைக்கு உரிய முறையில் போதியளவு தண்ணீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என வைத்திய அதிகாரி டாக்டர் கு. சண் முகரத்தினம் கோரியுள்ளார். (111)

## உதயவாக்கு

கூர்மையான கருவியால் உடலைத் தாங்குவதுகூட பாவமல்ல. கொடுமை யான வார்த்தைகளால் உள்ளத்தை நோக டிப்பதென்பது மன்னிக்கமுடியாத பாவம்.

- டால்ஸ்டாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

12 அடி கடை ஒன்றிற்கு போடக்கூடிய சுருக்குக்கேற், 7சதுர அடி கொண்ட பெரிய இரும்புக்கூடு, 2 மாதம் நிரம்பிய பூச்சி நீக்கப்பட்ட பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.57, K.K.S. வீதி, கொக்குவில். (கொக்குவில் சந்திக்கும் பூநாறிமரச்சந்திக்குமிடையில்) T.P.: 077 6701461 (52224)

Poomeranian, Greatdane X Dobberman நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. German Shepperd, Greatdane நாய்கள் குறைந்த கட்டணத்தில் Crossing விடப்படும். தொடர்பு Pet Club (Pragash) 95, Palaly Road, Jaffna. (அம்மன் றோட்டுக்கும் இலுப்பையடிச் சந்திக்கும் இடையில்) (52234)

நல்ல நிலையிலுள்ள லிஸ்ரர் இஞ்சின் டைனமோ, Honda MD 70 மோட்டார், சைக்கிள், அலுமினியம் பொடி 14' டெலிக்கா டீசல் வான், கொறிலா K E 20 கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.372, பிரதான வீதி, பஸ்தியன் சந்தி, யாழ்ப்பாணம். (52253)

Sony Digital Vidio Camara 990, Digital 200m, Samsony Camara Digimasc, A4/Ceytav 40, D.C 3.3V என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 234, K.K.S வீதி,யாழ்ப்பாணம். T.P.No.021 222 2573 (சி-50205)

இலக்கம் 250-xxxx, GL மொடல் டொல்பின் வான் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: T. சுதன், உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். T.P.No.0776728381, 0776281654 (52250)

சொந்தப் பாவனையில் உள்ள Ford Prefect 105E மொடல் கார் (5கியர்) மிகவும் உன்னத நிலையில் உள்ளது. நம்பர் 4 Sri உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. 0776078809, 0779203380 (52247)

## வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளிப் பகுதியில் 2 பரப்புக் காணியுடன் கூடிய 4 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. நேரடித் தொடர்பிற்கு செ.புஸ்பதனராஜன் (ராஜன்), 12, மூளாய் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P. 0776181216. (52084)

சுதுமலை அம்மன் ஆலயப் பகுதிக்கு அருகில் ஒரு பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 0776070824, 0776623935 (52244)

பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கில் 4 பரப்புக் காணியில் அமைந்த சகல வசதியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. மற்றும் 4 பரப்பு வெறுங்காணியும் விற்பனைக்குண்டு. பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். தொடர்பு: S..சிறி T.P. 0777111400 (52251)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

32 நாள் நிறைந்த ஜேர்மன் செப்பேட் அல்ஷேசன் நாய்க்குட்டிகள் மற்றும் 4 மாதம் நிறைந்த தடுப்பு ஊசி போடப்பட்ட டல்மேசன் ஆண் நாய் குட்டியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ம.மார்க்கண்டு, M.S. வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் T.P. 0776258115 Note: ஞாயிற்றுக்கிழமை பார்வையிடலாம். (52258)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் தேவையான அளவில் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/50183)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 17.07.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டிபாம் - வட்டுக்கோட்டை, கரன் - ஆலடி, உடுவில், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, நல்லூர் பாம் சென்ரர் - இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-49993)

பகிரா புறொயிலர் குஞ்சுகள் 19.07.06 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். றாஜீவ் - ஆனைக்கோட்டைச்சந்தி, தாரகை - பருத்தித்துறை, P.ரவி - சாவகச்சேரி, றாஜீவ் கால்நடைத் தீவன விற்பனை நிலையம் - மாதகல் வீதி, பண்டத்தரிப்பு, நாகம்ஸ் பாம் - வட்டுக்கோட்டை, மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், சுன்னாகம், கோண்டாவில், கோப்பாய் ஆகிய கால்நடைச் சங்கக் கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். T.P. 222 3529, 222 2867. (52000)

## வாடகைக்கு உண்டு

யாழ்.புகையிரத நிலையத்திற்கு அருகில் ஸ்ரேசன் வீதியில் நான்கு அறைகளை உடைய மாடி வீடு வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு: R.S.யோன் T.P. 9210 (52248)

## வாகனங்கள் வாடகைக்கு

கார், வான், மோட்டார் சைக்கிள் என்பன Self Drive வாடகைக்கு வழங்கப்படும். அத்துடன் சாரதி அனுமதிப் பரீட்சைக்கான மோட்டார் சைக்கிள், திருமணக்கார் சேவைகளையும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 360, பிரதான வீதி, (பஸ்தியன் சந்திக்கு அருகில்) T.P. 021 - 222 9154, 0777593722 (52249)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம்,1972 ரேவதி, 8இல் செவ்வாய், கிரகபாவம் 43, அரச திணைக்களமொன்றில் உயர் பதவி வகிக்கும் B.A. (Special) மணமகளுக்கு அரச உத்தியோகம் பார்க்கும் மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல: 2911, மே/பா, உதயன். T.P. 0773715652 (52045)

## தவறிவிட்டது

0776136209 இலக்க நொக்கியா (6610 i) கையடக்கத் தொலைபேசி கோண்டாவில் பாடசாலை ஒழுங்கைக்கும், கொக்குவில் அச்சக ஒழுங்கைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சோதிமடம் அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (52117)

## Organ/Violin Notes

வீணை, Guitar, புல்லாங்குழல் போன்ற இசைக்கருவிக்கான 200 சினிமாப் பாடல்களுக்கான இசைக்குறிப்புகள், கேள்வி ஞானம் Theory, Key Board Exersice ஆகியன விற்பனைக்குண்டு.

**கரவீணா இசைமன்றம்**
131, கோயில் வீதி, நல்லூர்.
T.P.:0713055991,
(நல்லூர் ஆலயத்திலிருந்து 500 M தெற்கே)
(21.19.14) (51885)

## இசுசு லொறி உடற்கோப்பு விற்பனைக்குண்டு

எமது சங்கத்தின் இசுசு லொறியின் நல்ல நிலையிலுள்ள உடற்கோப்பு அண்மையில் கழற்றப்பட்டு விற்பனைக்காக உள்ளது. பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் சங்கத்தில் ரூபா 500 (மீளளிப்புப் பணமாக) செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்திசெய்து எதிர்வரும் 27.072006ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும். உடற்கோப்பை சங்க வேலை நாள்களில் புத்தூர் மொத்த நிலையத்தில் பார்வையிடலாம்.

- பொதுமுகாமையாளர்.

வலி.கிழக்கு வடபகுதி
பல நோ.கூ. சங்கம்,
அச்சுவேலி. (சி-50219)(21.14.19)

## தேவை

பற்சிகிச்சை நிலையத்தில் உதவியாளராகப் பயிற்சி பெற்று வேலை செய்வதற்கு 30 வயதிற்கு உட்பட்ட பெண் ஒருவர் தேவை. கந்தர்மடம் சுற்றாடலில் A .Level வரை படித்தவர் விரும்பப்படுவர்.
தொடர்பு: 198, அரசடி வீதி, கந்தர்மடம். (52204) (21.14.19)

8 வது புதிய பிரிவு...

## ஒரு வார கால முழுநேர Computer Hardware இலவச கற்கைநெறி

உங்களுக்காக 100% செய்முறைப் பயிற்சியினுடனான ஒரு வார குறுகிய கால Hardware கற்கைநெறி ஆரம்பமாகின்றது.

**ஆரம்பம்: 17.07.2006 காலை 9.00 மணி**

- Assembling
- Upgrading
- Troubleshooting
- Repairing
- Software Installation

அனுமதிக் கட்டணம் மட்டும்!

இவற்றுடன் மேலும் பல புதிய தொழில்நுட்பங்களுடன் கூடியதாக இக்கற்கைநெறி அமைகின்றது.

நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஆய்வு கூடத்தில் அதிநவீன P4 கணினிகளில் செய்முறைகள் வழங்கப்படும்.

இக்கற்கைநெறி முடிவில் 100% பூரணமான அறிவினைப் பெற்றுக்கொள்ளும் உத்தரவாதம்!

இதில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கு எமது நிறுவனத்திலேயே தொழில்சார் வசதிகள் வழங்கப்படும்.

**CICS Computer Technologies**
# 87, Palaly Road, Thirunelvely, Jaffna.
E-mail: cicsjaffna@gmail.com

CICS யாழ். நகரில் Computer Hardware
பயிற்சிக்கான ...
பதிவு... முந்துங்கள்!

## தென்மராட்சி ஆசிரியர்களுக்கு

தென்மராட்சி கல்வி வலயத்தில் புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இன்றும், நாளையும் நடத்தப்படவிருந்த பயிற்சிநெறி பிற்போடப்பட்டுள்ளதாகவும்- இப்பயிற்சி நடைபெறும் தினங்கள் குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என்றும் - வலயக் கல்வி அலுவலகம் தெரிவித்துள்ளது.

## கல்லூரித் தினவிழா

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரித் தினவிழா இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு திருப்பலியுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் காலை விருந்து, ஒன்றுகூடல் என்பன இடம்பெறவுள்ளன. (202)

## விளையாட்டு விழா

அச்செழு அபிவிருத்திச் சங்க முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை பிற்பகல் 2.30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அச்செழு கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் ம.பிரபாகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கோப்பாய்ப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

யாழ். இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம், அச்செழு முன்னாள் கிராம அலுவலர் இ.வசந்தகுமார், கிராம அலுவலர் எஸ். கே.நாகேந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (204)

## கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள், கேள்விச் சபைத் தலைவரும் யாழ்ப்பாண பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராகிய என்னால் கோரப்படுகின்றன

| வேலையின் பெயர் | இக்ராட் தரம் | கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கக் கூடியது (ரூபாவில்) | கேள்விப் பத்திரப் பணம் (ரூபாவில்) | வேலை முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| 1. அம்புலன்ஸ் தரிப்பிடமும் சாரதிகள் கடமை அறையும் அமைத்தல், மத்திய மருந்தகம், கொடிகாமம் | எம்.09 | 16596.00 | 800.00 | 03 மாதம் |
| 2. மகளிர் விடுதியை மீளத் திருத்தி அமைத்தல் (Refurbishment) வேலணை கிராமிய வைத்தியசாலை | எம்.09 | 5793.00 | 800.00 | 03 மாதம் |

1. கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளும் விவரம்
   17.07.2006 - 28.07.2006 பிற்பகல் 2.00 மணி வரை
2. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளல்
   17.07.2006 - 31.07.2006 பிற்பகல் 2 மணி வரை
3. கேள்விச்சபையால் கேள்விகள் திறந்து பரிசீலித்தல்
   31.07.2006 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு

மேற்படி வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்களை இவ் அலுவலகத்தில் உரிய வேளையில் மேற்குறிப்பிட்ட விவரப்படி பணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் உறையிலிட்டு அரக்கு முத்திரையிடப்பட்டு **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகக் கேள்விப்பெட்டியிலோ 31.07.2006 பிற்பகல் 2 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாகப் போடப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களை இவ் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். குறித்த நேரத்திற்கு பிந்திக் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப் பட மாட்டாது.

கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் தொடர்பாக கேள்விச் சபையின் தீர்மானமே இறுதி முடிவாகும்.

திருமதி ம.வசந்தகுமார்,
பிராந்திய உள்ளூராட்சி
உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

பிராந்திய உள்ளூராட்சி
உதவி ஆணையாளர்
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
13.07.2006

(சி-50224)(21.19.14)

## 15 ஆம் ஆண்டு நினைவலைகள்

15-07-2006



**நெல்லை க.பேரன் குடும்பத்தினர்**

*மறைவு: 15-07-1991*

வருடங்கள் பதினைந்து உருண்டோடியதோ?
ஈரவிழிகள் இன்னும் காயவில்லையே!

கந்தசாமி பறுவதம்
(தாய்)

பொன் கந்தையா வீதி,
நெல்லியடி. (52255)(21.19.14)

## அந்தியேட்டி வீட்டுக்கிரியை அழைப்பு

*18-06-2006 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்*

*அமரர்*

**இராமுப்பிள்ளை ஆறுமுகம்**

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியை நாளை(16.07.2006)ஞாயிற்றுக்கிழமை வவுனியா கல்லாறு தீர்த்தக் கரையிலும், சபீண்டீகரணம் 18.07.2006 செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு, தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

- குடும்பத்தினர்.

ஆலய விடுதி,
சிந்தாமணி விநாயகர் ஆலயம்,
வெளிவட்ட வீதி, வவுனியா. (52254)(21.14.19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸ்திரேலியாவில் மனித உரிமை மாநாடு; வவுனியா மாவட்ட நீதிபதி பங்கேற்பு

யாழ்ப்பாணம்,ஜூலை15

வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் ஆஸ்திரேலியா மெல்போர்ண் நகரில் நடைபெறவுள்ள சர்வதேச மாநாட்டில் இலங்கையின் பிரதிநிதியாகக் கலந்துகொள்ளவுள்ளார்.

மெல்போர்ண் பல்கலைக்கழக 'சட்ட பீட அரசியல் அமைப்பு சட்ட கற்கை நெறியின் ஏற்பாட்டில் இந்த மாநாடு எதிர்வரும் 18ஆம் திகதி முதல் இரு வாரங்களுக்கு மெல்போர்ண் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, இந்தோனேசியா, நியூஸிலாந்து, இலங்கை போன்ற நாடுகளில் இருந்து மனித உரிமைகள் சட்டம் தொடர்பாக உரை நிகழ்த்துவதற்கு விசேட பேச்சாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையின் பிரதிநிதியாகக் கலந்து கொள்ளும் வவுனியா மாவட்ட நீதிபதி இளஞ்செழியன் மனித உரிமைகள் தொடர்பாக கருத்துரை வழங்குவார்.

(204)

# 'முதியோரைக் காப்போம்' நூலுக்கு ஆக்கங்கள் அனுப்ப வேண்டுகோள்

கரவெட்டி,ஜூலை15

ஒக்ரோபர் மாதம் கொண்டாடப்படவுள்ள முதியோர் தினத்தை முன்னிட்டு சமூக சேவைத் திணைக்களம் 'முதியோரைக் காப்போம்' என்னும் பொருளில் அமைந்த நூல் ஒன்றை வெளியிடவுள்ளது.

இந்த நூலுக்கு ஆக்கங்கள் எழுதுபவர்களிடமிருந்து எழுத்துப் படைப்புகளை சமூக சேவை திணைக்களம் கோரியுள்ளது.

ஆக்கங்கள் முதியோர் பெருமை பேசும் கவிதை, கட்டுரைகளாவும், ஆக்கபூர்வமான செய்திகளை இளையவர்களுக்கு சொல்கின்ற விவரணக் கட்டுரைகளாகவும், கருத்துள்ள சித்திரங்கள், ஓவியங்கள், முதியோர் நாட்டின் சொத்து என்பதனை புரிய வைக்கும் குறுநாடகங்களாவும் இருக்கவேண்டும்.

ஆக்கப் படைப்புகளை வழங்க விரும்புவோர் 500 சொற்களுக்கு மேற்படாது தமது ஆக்கங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் தத்தமது பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினரிடம் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(203-70)

# யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் ஆங்கில ஆசிரியர்களுக்குப் பயிற்சி

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் பணியாற்றும் பயிற்சி பெறாத ஆங்கில ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகின்றது என்று யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரத்தினம் தெரிவித்தார்.

'நிகொட்' திட்டத்தின் கீழ் ஐந்து கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகளில் பணிபுரியும் பயிற்சிபெறாத ஆங்கில ஆசிரியர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்படுகிறது. இதற்கென 50 லட்சம் ரூபா நிதி உதவியை நிகொட் நிறுவனம் வழங்கியுள்ளது. இதன் கீழ் மாதம் இருமுறை பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

இதேவேளை, ஆங்கில ஆசிரியர் அல்லாத ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு யுனிசெவ் செயற்றிட்டத்தின் கீழ் செயலமர்வுகள் இடம்பெறுவதாகவும் வலயக் கல்விப் பணிப்பாளர் மேலும் கூறினார்.

# எரிபொருள் கடத்த முயன்ற சாரதிகள் மூவருக்கு அபராதம்

தென்மராட்சி,ஜூலை15

முகமாலை இராணுவச் சோதனைச் சாவடியூடாக வன்னிப் பகுதிக்கு எரிபொருளை கடத்த முயன்றார்கள் என்ற குற்றத்தின் பேரில் வாகனச் சாரதிகள் மூவருக்கு சாவகச்சேரி நீதிமன்றம் அபராதம் விதித்தது.

வாகனத்தின் எரிபொருள் தாங்கிக்கு மேலதிகமாக மற்றொரு தாங்கியைப் பொருத்தி அதில் எரிபொருள் கடத்த முயற்சித்ததாக மூன்று வாகனங்களை பொலீஸார் கைப்பற்றினர். அவற்றின் சாரதிகளும் கைதுசெய்யப்பட்டனர்.

சாரதிகள் மூவரையும் கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி நீதிமன்றத்தில் பொலீஸார் ஆஜர் செய்தனர்.

விசாரணையின் பின்னர் சாரதிகளுக்கு முறையே 23 ஆயிரம் ரூபா, 17 ஆயிரம் ரூபா மற்றும் 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

(117)

# கல்வி டிப்ளோமா பரீட்சார்த்திகளுக்கு

யாழ்ப்பாணம்,ஜூலை15

திறந்த பல்கலைக்கழகப் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பரீட்சையில் அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத பரீட்சார்த்திகளும் பங்குபற்றலாம் என்று யாழ்.திறந்த பல்கலைக்கழக பிராந்திய இயக்குநர் ச.ஆ.ஞானேந்திரன் தெரிவித்தார்.

மேற்படி கல்வி டிப்ளோமா பரீட்சை இன்று சனிக்கிழமை முதல் ஆரம்பமாகிறது.

பரீட்சார்த்திகள் சிலருக்கு அனுமதி அட்டைகள் இதுவரை கிடைக்கப் பெறவில்லை.

எனவே இவ்வாறான பரீட்சார்த்திகள் பரீட்சைகளில் பங்குகொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

(185)

# ஈழத்து இசை மரபுக்கு சிறப்புச் சேர்த்த கலைஞர்



ஈழத்தில் பயிலப்படும் கர்நாடக இசை மரபுக்கு ஓர் அடையாளத்தினை ஏற்படுத்திக் கொடுத்தவர்களுள் நாதஸ்வர கலாநிதி, கலாசூரி என்.கே. பத்மநாதன் பிரதானமானவர்.

19.09.1931 ஆண்டு அளவெட்டியில் இசைப் பாரம்பரியம் மிக்க குடும்பத்தில் பிறந்த இவர், குருகுலக் கல்வி வழியாக நாதஸ்வர இசையினை தமதாக்கிக் கொண்டார்.

ஆரம்பத்தில் பிரபல வித்துவான்களுக்கு தாளக் காரராகவும் பின்பு 1955 இல் கலைஞர் பி.எம்.திருநாவுக்கரசு பிள்ளையுடன் இணைந்தும் வாசிக்கத் தொடங்கினார். அத்துடன் அவ்வப்போது இலங்கைக்கு வருகை தந்த வலங்கைமான் சண்முகசுந்தரம்பிள்ளை உள்ளிட்ட தென்னிந்திய நாதஸ்வர தவில் கலைஞர்கள் பலருடன் இணை சேர்ந்து வாசித்ததன் மூலம் தனது கலையை மேலும் மெருகேற்றிக் கொண்டார்.

இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா போன்ற பல நாடுகளிலும் இவரது குழு கச்சேரிகளை நடத்தியது. 1968 இல் சென்னை சங்கீத வித்வ சபையில் நிகழ்த்திய கச்சேரியின் மூலம் தென்னிந்திய கர்நாடக இசை உலகிலும் பிரபல்யம் பெற்றார்.

> ***பிரபல நாதஸ்வரக் கலைஞர் அளவை என்.கே.பத்மநாதனின் நினைவுதினம் இன்றாகும்.***

என்.கே. பத்மநாதன் அவர்கள் தனது இசை வாழ்விற்காக நாதஸ்வர கான கலாநிதி கலாசூரி போன்ற பல பட்டங்களும் கௌரவிப்புகளும் பெற்றார். அத்துடன் 2004 ஆம் ஆண்டில் யாழ்.பல்கலைக்கழகத்தினால் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். கொழும்பு நகரசபை மண்டபத்திலும் இவரது உருவப் படம் திரைநீக்கம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கர்நாடக இசையில் மனோதர்ம இசையினைப் பொறுத்தவரைக்கும் இசைக் கலைஞர்கள் எல்லோருமே இசையமைப்பாளர்கள் தான். (**Composers**) இந்த வகையில் பத்மநாதன் அவர்கள் இராகம், தாளம், பல்லவி வாசிக்கும் போது முழு சொரூபமும் வெளிப்படும். வாசிப்பில் சுருதி, லய சுத்தம், சாகித்ய தெளிவு இருக்கும் எந்த வகையான கச்சேரிகளாயினும் ஒருவித ஈடுபாட்டுடனேயே வாசிப்பார். எப்போதுமே இவரைச் சூழ இசை லயப்பட்ட ரசிகர் குழாம் தாளம் போட்டபடி லயித்திருப்பர். இவரது இசையினைக் கேட்காத தமிழ் உள்ளங்களே இல்லை எனலாம்.

இசைக் கலைஞர்களுக்கு தேகாரோக்கியம் கலைசார் பழக்கமும் பூரணத்துவமான ஒரு கலை வெளிப்பாட்டிற்கு முக்கியமானவை. இப் பண்புகள் பத்மநாதன் அவர்களின் இசை வாழ்விற்கு வலுவூட்டின.

தோடி இராகம் இவருக்கு மிகவும் வாலாயமானது. நாதஸ்வரத்துக்கே சாத்தியப்படக் கூடிய பிருக்காக்கள் முழுமையாகவும் பொருத்தமாகவும் அவரிடம் வெளிப்படும்.

ஒலி மற்றும் ஒளிப்பதிவுத் துறையில் அதியுயர் தொழில்நுட்பம் அபார வளர்ச்சி பெற்றிருக்கும் இந்த யுகத்தில் அவரது நாதஸ்வர இசையை முழுமையாகப் பதிவு செய்ய வேண்டும் தவறியமை துரதிஷ்டமே. எனினும் என்.கே. பத்மநாதன் அவர்களின் நாதஸ்வர வாசிப்பின் அதிர்வுகள் இன்னமும் எம் செவிகளில் நிறைந்துள்ளன.

**நவதர்ஷனி கருணாகரன்**

# செய்திக் கொத்து

## மருத்துவ முகாம்

தென்மராட்சி,ஜூலை15

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் கடந்த 10 ஆம் திகதி நடத்தப்பட்ட மருத்துவப் பரிசோதனை முகாமில் கண், இரத்த அழுத்தம், நீரிழிவு ஆகியவற்றினால் பீடிக்கப்பட்ட புதிய நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெற்ற இந்த பரிசோதனை முகாமில் இருநூறுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இவர்களில் 24 பேருக்கு இரத்த அழுத்தம், 5 பேருக்கு விழிவெண் படலத்தில் பூப்படர்வு, நான்கு பேருக்கு நீரிழிவு பாதிப்பு ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. (117)

## மண்டைதீவில் குடிதண்ணீர் விநியோகம்

மண்டைதீவு,ஜூலை15

கடும் வெப்பம் நிலவி வருவதால் மண்டைதீவுப் பகுதியில் உள்ள நீர் நிலைகள் வரண்டு போய் உள்ளன. இதனால் குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. வேலணை பிரதேச சபை பௌசர் மூலம் குடி தண்ணீர் வழங்கிவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே இங்கு அமைக்கப்பட்ட நீர்த் தொட்டிகளில் வாரத்தில் மூன்றுமுறை குறித்த கால இடைவெளியில் தண்ணீர் நிரப்பப்பட்டு வருகிறது.

மேலும் சமையலுக்கு நீர் எடுக்கப்படும் ஒரு சில கிணறுகளில் விலங்குக் கழிவுகள் காணப்படுவதால் அப் பகுதிகளில் உள்ளவர்கள் குடிதண்ணீர் பெற சிரமத்தை அனுபவித்து வருகின்றனர் என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது. (88)

## தளபாடங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை15

குருநகர் சனசமூக நிலையத்திற்கு ஐ.ஓ.எம். நிறுவனத்தினால் கடந்த செவ்வாய்க்கிழமை ஒரு தொகுதி தளபாடங்கள் கையளிக்கப்பட்டன.

சனசமூக நிலையத்தின் தேவைகளை நிறுவனத்தின் அதிகாரிகள் நேரடியாக அவதானித்த பின்னரே இந்தத் தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அலுவலக மேசைகள் கதிரைகள், இறாக்கைகள் போன்றவற்றையே ஐ.ஓ.எம்.நிறுவனம் சனசமூக நிலையப் பிரதிநிதிகளிடம் கையளித்துள்ளது. (ரி)

## செயற்றிறன் பயிற்சி

ஊர்காவற்றுறை,ஜூலை15

தீவுப் பகுதியில் உள்ள சுகாதார தொண்டர்களின் செயற்றிறனை அதிகரிக்கும் பொருட்டு அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

ஐந்து நாள்களைக் கொண்ட இந்த பயிற்சிநெறி தற்போது ஊர்காவற்றுறை போரூட் நிறுவன அலுவலகத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் 36 சுகாதாரத் தொண்டர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சி நிறைவில் இவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படவுள்ளதாக போரூட் நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன. (204-16)

## வடமராட்சி வலய போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை15

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான வலய மட்ட சமூகக் கல்விப் போட்டிகளும் -

பருத்தித்துறை கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கோட்ட மட்ட சிறுவர் தினப் பேச்சுப் போட்டிகளும் இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (117)

## இடமாற்றம்

வலி.தென்மேற்கு,ஜூலை15

சண்டிலிப்பாய் கால் நடை வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி ச.சுப்பிரமணியம் கடந்த மாதம் முதல் யாழ்.கால்நடை வைத்திய அலுவலகத்திற்கு வடக்கு - கிழக்கு மாகாண கால் நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளரார்.

இதேவேளை -

இவர் சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையின் பதில் கால் நடை வைத்திய அதிகாரியாகவும் கடமையாற்றி வருவதாக தெரிவிக்கப்பட்டது.

(204-135)

## ஓய்வூதியர்களுக்கு!

கரவெட்டி,ஜூலை15

அரச அலுவலகங்களில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள் அதிகரித்த ஓய்வூதியம் பெறுவதற்கு தத்தம் பகுதி பிரதேச செயலகங்களின் சமூக சேவைப் பிரிவினருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஓய்வூதியம் பெறும் ஊழியர்கள் சமூக சேவைப் பிரிவினருடன் தொடர்பு கொண்டால் ஓய்வூதியம் குறித்த பிரச்சினைகள் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(204-70)

## நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை15

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபைத் தலைவர் அமரர் கந்தையா இராமநாதனின் நினைவஞ்சலி நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபை உபதலைவர் சி.மாதவகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அஞ்சலி உரைகளை ஆலய பிரதமகுரு ச.ஸ்ரீசந்தனக்குருக்கள், வளர்மதி நிறைவாழ்வகப் போஷகர் அ.பஞ்சலிங்கம், நல்லூர் ப.நோ.கூ.ச தலைவர் பே.கனகசபாபதி, ஆலய பரிபாலன சபை உப செயலாளர் கு.சண்முகநாதன், கொக்குவில் ஜே 126 கிராம அலுவலர் கு.சாந்தமோகன், கோண்டாவில் ஸ்ரீ இராமகிருஷ்ண ம.வித்தியாலய அதிபர் ச.வாமதேவன், கோண்டாவில் மக்கள் சார்பாக அ.இ.பாலசுந்தரம், கொக்குவில் நந்தாவில் மனோன்மணி சனசமூக நிலையத்தின் ந.ஐங்கரன் ஆகியோர் நிகழ்த்துவர்.

(204)

உங்கள் விமானப் பயணத்திற்கு
Aero Lanka
In Domestic Operation
Head Office
No.500, Galle Rd.,
Colombo-6, T:2505 632/3
Fax: 2500 626
Jaffna Office:
No.86, Point Pedro Rd.
Jaffna. T: 021 222 6242
021 2223984
Fax: 021 222 5500
Trinco Office
No.47, Kandy Rd.,
Trincomalee. T: 026 222 1519
Fax: 026 2221519
Branch:
No.14, New Market Bldg.,
Chavakachcheri.T: 021 2227979
Fax: 021 2227979
New way of Flying

யாழ் - கொழும்பு விமான சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் நோய்க்கு தீர்வுகாணும் மாபெரும் மருத்துவர் பிரபாகரன்

**கடந்த 10 ஆம் திகதி கிளிநொச்சியில் பொது மருத்துவமனை திறந்து வைக்கப்பட்டது. இது தொடர்பான நிகழ்வில் கலந்துகொண்டு நாடாளு மன்ற உறுப்பினர் மா.க. ஈழவேந்தன் நிகழ்த்திய உரை இது.**

வன்னியில் எழுந்துள்ள மருத்துவமனை, வையகத்தை ஆட்கொள்ளும் மாபெரும் மருத்துவமனையாக ஒளி விடுகிறது. விடுதலைப் புலிகள் என்றால் அவர்கள் வெறும் போராளிகள்தான் அவர்களுக்குப் போரிடத் தெரியும். சில வெற்றிகளை அவர்கள் ஈட்டியுள்ளது உண்மை. ஆனால், அவர்கள் சாவை அணைத்ததுதான் பெரிது என்று விடுதலைப் புலிகளைப் பற்றி பட்டும் படாமலும் கருத்துக்கள் கூறுவோர் சிலர். ஆனால், விடுதலைப்புலிகளின் போராட்ட வரலாற்றினை உற்றுக் கவனிப்போர் தருகின்ற தீர்ப்பு முன்னைய குறிப்பைவிட முற்றிலும் மாறுபட்டது.

குறிப்பாக சட்டத்துறை, நிர்வாகத்துறை , நிதித்துறை, வருவாய்த்துறை, வைப்பகத்துறை என விரித்துக் கூறும் அளவுக்குப் புலிகளின் நிர்வாகப் பகுதியில் பல்துறை நிர்வாகம் திறம்பட செயற்படுகிறது. தரைப்படை, காவற்படை, வான் படை எனப் படைப்பிரிவுகள் காணப்படுகின்றன. உண்மையில் விடுதலைப் புலிகளின் ஆட்சி நடைமுறையில் இருக்கிறது. அதற்கு சட்டவலு ஒப்புதல்தான் எமக்குத் தேவை. (Their is a defacto goverment to the Tigers what we need is dejure recognition).

இவ்விதம், துறைகள் அனைத்திலும் துலங்குகின்ற விடுதலைப் புலிகள் மருத்துவத் துறையையும் மறக்கவில்லை. தியாக தீபம் மருத்துவமனை 18 ஆயிரம் நோயாளிகளுக்கு வைத்தியம் செய்கின்றது. கடந்த மார்ச் மாதம் வரை 18 ஆயிரத்து 534 நோயாளர்கள் மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளனர். திலீபன் மருத்துமனைகளில் வைரஸ் காச்சலுக்கு ஆளாகிய 2ஆயிரத்து 721 நோயாளர்களுக்கு வைத்தியம் செய்யப்பட்டுள்ளது. இவ்விதம் பல்வகை நோய்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு மருத்துவம் நடைபெறுகிறது. அவர்கள் நோய் தீர்க்கப்பட்டு நலம் பெற்றுள்ளார்கள். அவற்றின் விரிவினை இங்கு கூற விரும்பவில்லை.

இன்று எழுந்துள்ள கிளிநொச்சி மருத்துவமனை திலீபன் மருத்துவமனைகளுக்கு வழிகாட்டியாக விளங்கி ஆற்றப் போகும் பணி மிகப் பெரிதாக இருப்பது உறுதி. எம்மைப்பொறுத்தவரையில் ஆங்கில மருத்துவமுறை இங்கு வருவதற்கு முன்பேயே தமிழர் மருத்துவத்துறையில் தலையாய இடத்தைப் பெற்றிருந்தனர். திருவள்ளுவரின் திருக்குறளில் வருகின்ற மருந்து என்னும் அதிகாரம் நோய்களின் தன்மையை மிக நுணுக்கமாக ஆய்வு செய்கிறது.

திருவள்ளுவரை அடுத்து தோன்றிய திருமூலர் தந்துள்ள திருமந்திரம் சித்த மருத்துவ அடிப்படையில் நோய்தீர்க்க காட்டும்வழிமுறைகள் எம்மை வியப்பில் ஆழ்த் தும்.

**ஆட்கொல்லி நோயின் தாக்கத்தைக் குறைக்க தமிழ் மருத்துவம் தக்கவழி காட்டுகிறது**

திருவள்ளுவர் தனது அதிகாரம் 95 இல் மருந்தெனும் பகுதியில் 'மருந்தென வேண்டாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்' என்ற குறள் வாயிலாக உணவு செறிந்த நிலையில்தான் அடுத்த உணவினை நாம் அருந்துதல் வேண்டும் அல்லாவிடின், நோய்க்கு ஆளாகுவோம் என்று எச்சரிப்பது இங்கு ஆழ்ந்த சிந்தனைக்குரியது. அதேவள்ளுவர் ' மருத்துவ நூலகர் வாதம், பித்தம் சிலேத்துமம் என எண்ணிய மூன்றும் அளவிற்கு மிகுந்தாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும்.'' என்று தருகின்ற விளக்கம் இன்று மருத்துவ உலகையே வியப்பில் ஆழ்த்துகின்றது.

இன்று சித்தமருத்துவம் தமிழகத்தில் மிகப்பெரும் அளவில் வளர்ந்துள்ளது. ஆட்கொல்லி நோய் என்று கூறப்படும் எயிட்ஸ் நோயை முற்றாக மாற்றமுடியாத நிலையிலும் அதன் தாக்கத்தைக் குறைக்கின்ற அளவிற்கு மூலிகை மருத்துவத்தை தமிழக சித்த மருத்துவர்கள் கையாளுகின்றார்கள். மேலைநாட்டு மருத்துவத்தைப் பயின்றுள்ள மருத்துவர் தெய்வநாயகம் அவர்கள் ஆட்கொல்லி நோயின் தாக்கத்தைக் குறைப்பதற்கு ஆற்றிவரும் பணி குறிப்பிடத்தக்கது. தமிழின உணர்வு உள்ள அவரை இங்கு அழைத்து அவரின் அறிவுரையைப் பெறுவது சாலச்சிறப்புடைய பணியாகும்.

**எம் அரசியல் நோய்க்குத் தீர்வு காணும் மாபெரும் மருத்துவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களே**

இங்கு மேடையில் வீற்றிருக்கின்ற மருத்துவர்கள் பலரை நான் பெரிதும் மதிக்கின்றேன். அவர்களுடைய மருத்துவ நுண்ணாய்வு, எல்லை மீறிய பொறுமை, தியாக உணர்வு வரலாற்றில் பதியப் படும். ஆனால், இவர்களை மிஞ்சுகின்ற அளவிற்கு எம் இனத்தைப் பீடித்துள்ள நோய்க்குத் தீர்வுகாண முயல்பவர்தான் எம் மாமருத்துவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபா கரன் அவர்கள்.

எம் இனத்தைப் பீடித்துள்ள நோய்க்கு முன்பு கலவை கொடுத்தோம். பின்பு மாத்திரை கொடுத்தோம். அதன் பின்பு ஊசி போட்டோம். ஆனால், எதுவித நல் மாற்றத்தையும் நாம் காண முடியவில்லை.

எனவே, எம் இனத்தைப் பீடித்துள்ள நோய் ஒரு புற்றுநோய் என அறிந்த நிலையில் அதுவும் முற்றிய புற்றுநோய் என்று உணர்ந்த நிலையில், அறுவை வைத்தியத்தில் நாம் ஈடுபடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். எம் தலைவர் பிரபாகரன் இந்த அறுவை வைத்தியத்தி னால் தான் எம் இனத்தைக் காப்பாற்ற முடியும் என்று கூறுவது அவரின் ஆழ்ந்த சிந்தனையின் விளைவே ஆகும். ஆளும் கட்சிகள் மாறும், ஆளும் தலைவர்கள் மாறுவார்கள். ஆனால் ஆளும் இனமாக சிங் கள இனமும் ஆளப்படும் இனமாக தமிழ் இனமும் தொடர்கின்ற நிலையில் எம் இனம் அடிமைப்பட்டு அழிவதைத் தவிர வேறு வழியில்லை.

## பல்துறை நிர்வாகத்தை வழிநடத்தும் சீரியபணிகள் இதற்கு உதாரணம்

எனவேதான், ஆயுதம் தாங்கிப் போராடுகின்ற அறுவை வைத்திய முறைதான் எமக்குள்ள ஒரே ஒரு வழி என்று எங்கள் தலைவர் பிரபாகரன் கூறுவது வெறும் வெற்றுரை அல்ல, வீர உரையல்ல, மாறாக பொருள் பொதிந்த பொன்னுரையாகும்.

எம் தந்தை செல்வாவும் எம் இனத்திற்கு ஏற்பட்டுள்ள அரசியல் புற்று நோயைத் நீக்க அறவழிப்போராட்டத்தை அன்று நடத்தினார். ஆனால், இப்போராட்டம் விரும்பிய பயனை அளிக்காத நிலையில் வெறிநாய்க்கு முன்னாள் நாம் அறவழிப்போராட்டம் நடத்தினால் அந்த வெறிநாயின் கடிக்கு நாம் ஆளாக நேரிடும். 18 ஊசிகள் போட்டாலும் வெறிநாயின் கடியினால் ஏற்படுகின்ற நீர் வெறுப்புநோயில் (Rables) இருந்தி தப்புவது கடினம். எனவேதான், ஆயுதப் போராட்டமே உகந்த வழி என்று எங்கள் தலைவர் பிரபாகரன் மொழிகின்ற கருத்து ஏற்புடையதே.

**தமிழீழம் என்ற குழந்தையை நாமே பெறவேண்டும் மருத்துவிச்சிகளாக மற்றவர்கள் துணை நிற்கட்டும்**

இறுதியில் ஒன்று நான் கூறி முடிக்க விரும்புகின்றேன். தமிழீழம் என்ற குழந்தையை ஈழத்தமிழர்தான் பெற்றெடுக்க வேண்டும். எந்த ஒரு தாயும் தான் கொஞ்சிக் குலாவ ஒரு குழந்தை வேண்டும் என்று விருப்பம் தெரிவித்துக் கொண்டு அந்தக் குழந்தையை இன்னுமொரு பெண் பெற்றுத்தர வேண்டும் என்று கூறுவாளாயின் அப்பெண்ணை நாம் தாயென்று கூறமுடியாது. மாறாகப் பேயென்றே வர்ணிக்கவேண்டும். தன் சேயைத் தான் பெறவிரும்பாத ஒரு தாய் எப்படித் தாயாக இருக்கமுடியும். ஆனால், தமிழீழம் என்ற குழந்தையை நாம் பெற முயல்கின்றபோது ஏற்படுகின்ற தொய்வை நொய்வைப் போக்க மருத்துவிச்சிகள் துணையை நாம் நாடுவது தவறல்ல.

இந்த மருத்துவிச்சிகள் இந்தியத் துணைக் கண்டமாக இருக்கலாம். இந்தியத் துணைக்கண்டத்தின் ஓர் அங்கமாக விளங்குகின்ற 55ஆயிரம் சதுரமைல் கொண்டுள்ள 7 கோடிக்கு மேற்பட்ட தமிழர்களைக் கொண்டுள்ள தமிழகமாகவும் இருக்கலாம். தமிழகத்தின் எல்லைப் பரப்பு 55 ஆயிரம் சதுர மைல். இலங்கையின் எல்லைப்பரப்பு 25 ஆயிரம் சதுர மைல்தான். அடிக்கடி கொக்கரிக்கின்ற இலங்கை அரசு இந்தக் கசப்பான உண்மையை உணர்வது நலம்.

தமிழகத்தில் இன்று எமக்காக மருத்துவிச்சிகளாகத் துணைநிற்க நின்றசீர் பழநெடுமாறன், வையம் ஏற்றும் வைகோவும், விடுதலைச் சிறுத்தைகள் திருமாவளவனும், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்களும் மற்றும் அங்குள்ள அறிஞர் உலகமும் எமக்காக எழுப்புகின்ற குரல் டில்லியை செவிசாய்க்க வைப்பது உறுதி.

எம்மைப் பொறுத்தவரையில் தமிழகம் ஒன்றாகக் குரல் எழுப்புகின்ற போது அதற்கு டில்லி செவிசாய்த்தால் தமிழீழம் தானாக மலர்வதை எவரும் தடுக்க முடியாது. இது வரலாற்றின் கட்டாயமாகும். வரலாற்றின் தீர்ப்பினை உலக சக்திகள் எவற்றாலும் தடுத்து நிறுத்த முடியாது.

எனவே, விரைவில் ஐ.நா. மன்றத்தில் தமிழீழத்தின் விடுதலைப் புலிகளின் தேசியக் கொடி பட்டொளி வீசிப் பறப்பது உறுதி. ''தாயின் மணிக்கொடி பாரீர். அதைத் தாழ்ந்து பணிந்திட வாரீர்'' என்ற நிலையில் அந்தத் தாயின் மணிக்கொடியைத் தாழ்ந்து பணிந்து பெருமிதமும் பேருவகையும் எய்துவோமாக .

# இராமேஸ்வரம் பகுதிக்கு வந்த இலங்கை மீனவர்கள் 2 பேர் கைது

இராமேஸ்வரம் கடற்பகுதிக்குள் எல்லைமீறி வந்த இலங்கை மீனவர்கள் இருவரை படகுடன் செவ்வாய்க்கிழமை இரவு 11.30 மணியளவில் கைது செய்த இந்தியக் கடற்படையினர், இராமேஸ்வரம் பொலிஸாரிடம் அவர்களை ஒப்படைத்தனர்.

மன்னார் பேசாலை கடற்கரைப் பகுதியிலிருந்து மீன்பிடிப்பதற்காக வந்தபோது கடற்கொந்தளிப்பு காரணமாக திசைமாறி இராமேஸ்வரம் கடற்பகுதிக்குள் நுழைந்தனரென கடற்படையினரின் விசாரணையின்போது அவர்கள் தெரிவித்தனர்.

இதையடுத்து, இவர்கள் இராமேஸ்வரத்தில் உள்ள கடற்படை முகாமுக்கு கொண்டு வரப்பட்டு தொடர் விசாரணை நடத்தியதில் அவர்களிடமிருந்து 14ஆயிரம் ரூபா பறிமுதல் செய்யப்பட்டது. அவர்களது 'என்ஜின்' பொருத்திய படகும் பறிமுதல் செய்யப்பட்டது.

அவர்கள் இருவரும் இலங்கை பேசாலைப் பகுதியைச் சேர்ந்த நித்தியானந்தம் (வயது-21), பாஸ்பியான்குரூஸ் (வயது-20) என்பதும் விசாரணையில் தெரியவந்தது.

பின்னர் மீனவர்கள் இருவர் மீதும் இந்திய எல்லையை மீறி வந்தனர் எனக் கூறி நகர் பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் சங்கிலி, கடவுச் சீட்டு வழக்கின் கீழ் கைது செய்து இராமேஸ்வரம் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தினார். (எ)


**NOTICE**

University of Jaffna
IRQUE Project

**Skill Enhancement in English - Final year Project**
**Intensive Course in English**

**Baseline Indicator - Placement Test**

The above test will be held on the main Campus of the University of Jaffna, Thirunelvely and on the Vavuniya campus on the 22nd July 2006 from 10.00 am to 3.00 p.m. Only those who followed their degree programme at Vavuniya Campus will be allowed to sit the test at Vavuniya Campus.

The Students who applied to follow the Intensive Course in English (the Arts, Management Studies & Commerce Students who sat their final examinations in 2005/2006) are requested to sit the above test as it is a prerequisite to follow the course. Those who have failed to apply to follow the course will also be allowed to sit the examination.

Prof.K.Kandasamy,
Director/LTS,
IRQUE Project,
University of Jaffna.

(C/'50211)


**திருத்தி வாசிக்கவும்**

நேற்றைய 'உதயன்' பத்திரிகையில் 13 ஆம் பக்கத்தில் வெளியான நினைவஞ்சலி நிகழ்வு விளம்பரத்தில் அமரர் கந்தையா இராமநாதன் (பா) என்பதற்குப் பதிலாக அமரர் கந்தையா என்று பிரசுரமாகியுள்ளது. அதனைத் திருத்தி வாசிக்கவும்.


## 45 ஆம் நாள் அஞ்சலி



தோற்றம்
09
-
01
-
1948

மறைவு
01
-
06
-
2006

**திருமதி வடிவேல் பத்மாவதி**

மங்கா ஒளியாய் குடும்பத்து குலவிளக்காய்
மண்ணில் பிரகாசித்த மாணிக்கமே!
மின்னாமல் முழங்காமல் பெய்த மழையாய்
எண்ணாமல் நாமிருக்க எங்கம்மா போனாய்!
காலத்தின் கோலமோ காலனின் வேலையோ
கண்ணீர் மல்கி கதிகலங்கி நிற்கிறோம்.

பிரிவால் துயருறும்:
வடிவேல்(கணவர்),
இராஜகுமாரன், இரஜசுதன், இராஜகுகன்,
தயானந் (பிள்ளைகள்),
கன்னிகா (மருமகள்),
கிபீசன், கிஷோத் (பேரப்பிள்ளைகள்).

சுழிபுரம்,
பறாளை.

(சி-50220)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம்; இந்தியாவிடம் டக்ளஸ் கையளித்தார்.

சென்னை,ஜூலை15

இலங்கை இனப்பிரச்சினைக்கான மூன்று அம்சத் தீர்வுத்திட்டமொன்றை இந்திய அரசின் பரிசீலனைக்கு சமூகநலத்துறை அமைச்சரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா வழங்கியுள்ளார்.

தமிழகப் பத்திரிகையான தினமணிக்கு அமைச்சர் அளித்த செவ்வியிலேயே இத்தகவலை அவர் வெளியிட்டுள்ளார்.

செவ்வியில் அமைச்சர் கூறியுள்ளதாவது:-

இலங்கையின் தற்போதைய சூழ்நிலை, அங்குள்ள தமிழர்களின் நிலை குறித்து இந்திய அதிகாரிகள் மற்றும் தலைவர்களிடம் எடுத்துரைத்தேன். இலங்கையில் எந்தநேரத்திலும் யுத்தம் வெடிக்கும் பீதியில் மக்கள் உள்ளனர். அரசு யுத்தத்தை தவிர்த்து வருவதால்தான் யுத்தம் தடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், விடுதலைப் புலிகள் யுத்தத்தைத்தான் விரும்புகிறார்கள். 'பிரபாகரன் ஜனநாயக வழிமுறைகளைப் பின்பற்ற தயக்கம் காட்டுகிறார். மக்களால் பழிவாங்கப்படுவோம் என்று அச்சப்படுகிறார்.

இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வுகாண நடைமுறைச் சாத்தியமான மூன்று அம்சத் திட்டத்தை இந்திய அரசிடம் அளித்துள்ளேன். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபடி மாகாணசபை அரசியல் தலைமைத்துவம் ஏற்படுத்துதல், கூடுதல் அதிகாரம் அளித்தல் மற்றும் சமஷ்டி நோக்கிச் செல்லுதல் ஆகிய திட்டங்கள் அதில் அடங்கும்.'

இந்தத் திட்டத்தில் தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படுத்துதல், தமிழ் மக்களுக்கு கூடுதல் அதிகாரம் அளிப்பதால் தனி நாடு ஏற்படும் சூழ்நிலை வராது என்று சிங்கள மக்களிடம் நம்பிக்கை ஏற்படுத்துதல் ஆகியவையும் அடங்கும். இறுதிக் கட்டத்தில் விடுதலைப்புலிகளும் இதில் வந்துதான் ஆகவேண்டும்.

இலங்கை அரசின் சார்பில் நான் அளித்த திட்டம் குறித்து தீவிரமாக ஆலோசிப்பதாக இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் தமிழ் மக்கள் மௌனமாக்கப்பட்டுள்ளனர். சுயமாகச் சிந்தித்துச் செயல்பட சுதந்திரமாகப் பேச, எழுத அவர்களுக்கு உரிமை இல்லை. தமிழனே தமிழர்களின் சுதந்திரத்திற்கு எதிராக நிற்கும் நிலை உள்ளது.

இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வுகாண் இந்தியா தனது நல்லெண்ணத்தைப் பயன்படுத்தவேண்டும். இலங்கை அரசுக்கு வழி காட்டவேண்டும்.

ஒரு கட்டத்தில் இந்தியா முழுப் பங்களிப்பை அளித்து வந்தது. தனது தலைவர் ஒருவரை இழந்த காரணத்தால் இப்போது தயக்கம் காட்டி வருகிறது. இந்தியா தனது அண்டை நாட்டின் பிரச்சினைக்குத் தீர்வு காண பங்களிப்பை அதிகரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கின்றோம்.

நீண்டகாலமாக தமிழ் பிரதேசங்களில் அபிவிருத்திப் பணிகள் நடைபெறவில்லை. அதனால், அங்கு வீட்டு வசதி உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு இந்தியா உதவ வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

## ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம்,ஜூலை15

இணுவில் மத்திய கல்லூரியின் ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு வைபவமும் இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கல்லூரி சரஸ்வதி கலையரங்கத்தில் நடைபெறவுள்ளன.

கல்லூரி அதிபர் அ.சதானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசும் கௌரவ விருந்தினராக மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய உதவிமுகாமையாளர் அ.குகதாசனும் கலந்து கொள்வர். (202)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் விஸ்வலிங்கம் வைரமுத்து

(ஓய்வுபெற்ற பிரதம எழுதுநர் -சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்)

அவனியில் 23-05-1938 | அவனடியில் 16-06-2006

எங்கள் குடும்பத்தின் தலைவனாய் திகழ்ந்து அன்போடும் பண்போடும் பாசத்தோடும் எம்மை வளர்த்து நாம் சிறப்போடு வாழ நல்வழிகாட்டி எங்கள் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் ஒளியூட்டி இறுதி மூச்சுவரை வாழ்வாங்கு வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! என்றுமே உங்களைச் சூழ நாம் மகிழ்ந்து இன்புற்றிருந்தோம் அப்பா! இன்று நீங்கள் விட்டுச்சென்ற நினைவுச் சுவடுகள் மாறாது அத்தனையும் நீங்கா நினைவுகளாக எம் மனங்களில் நிலைத்திருக்கும்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (15-07-2006) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.


C.C.T.M.பாடசாலை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரர், பேரப்பிள்ளைகள்.

(52226)(26.19.15)

## 31ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 01 ★ 02 ★ 1928



மறைவு 15 ★ 06 ★ 2006

அமரர் நாகமுத்து சுந்தரம்

*குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்திட்ட ஒளிச்சுடரே!*
*மாதம் ஒன்று சென்றதையா! மாறவில்லை எம் துயரம்!*
*அவனிதனில் நாம் வாழ வழிகாட்டி நின்றவரே!*
*ஆயிரம் உறவுகள் இருந்தென்ன?*
*ஐயா என்றழைக்க நீங்கள் இல்லையே!*

இன்று (15-07-2006) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னங்கை,
உரும்பிராய் மேற்கு.

-குடும்பத்தினர்.

(52227)(26.15.19)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 16 - 07 - 1959



உதிர்வு 26 - 06 - 2005

திருமதி ஜெயந்திமாலா சிவரத்தினராசா

நாள்:15-07-2006

நீங்கள் எமைவிட்டுப் பிரிந்து ஆண்டு ஒன்று மறைந்தாலும்
உங்கள் பிரிவின் துயரத்தை ஆற்ற முடியவில்லை
உங்கள் சிரித்த முகம் எங்கள்
கண்முன்னே நிழலாடிக் கொண்டே உள்ளது.

*உங்கள் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:*

*கைதடி மேற்கு,*
*கைதடி.*

தாய், தந்தை, கணவர், பிள்ளைகள், சகோதரங்கள்.

(52239)(26.19.15)

## சங்கீத சபையின் அறிமுறைப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூலை15

வட இலங்கை சங்கீத சபையினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்படும் அறிமுறைப் பரீட்சைகள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன என்று சங்கீத சபைத் தலைவரும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி.செல்வரத்தினம் தெரிவித்தார். (204)

## சப்ரகமுவ பல்கலை. புதுமுக மாணவருக்கு!

யாழ்ப்பாணம்,ஜூலை15

சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கு 2005/2006 கல்வியாண்டுக்கு அனுமதி பெற்ற மாணவர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ். நியூசயன்ஸ் ஹோலில் நடைபெறும் என்று சப்ரகமுவ பல்கலைக் கழகத் தமிழ் மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (202)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 20 - 06 - 1933



உதிர்வு 16 - 06 - 2006

திருமதி சபாபதிப்பிள்ளை மகேஸ்வரி

16-06-2006 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (15-07-2006) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


T.P.: 0041-120 16085 - சுவிஸ்
0049-2933 78252 - ஜேர்மனி
077-9229498 - பண்ணாகம்

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(52180)(26.19.15)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லும்

*அன்னை மடியில் 19 - 09 - 1919*



*ஆண்டவன் அடியில் 16 - 06 - 2006*

அமரர் தம்பையா சுப்பிரமணியம்

யாழ்.வதிரியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த காலஞ்சென்ற தம்பையா-சிவகாமி தம்பதியரின் அன்பு மகனும் செல்லம்மாவின் அன்புக் கணவருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும், தொலைபேசியில் அனு தாபம் தெரிவித்தோருக்கும், ஆறுதல் தந்து உதவியோருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதுடன், நாளை (16.07.2006) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நிகழும் அந்தியேட்டி, சபிண்டீகரண நிகழ்வுகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

தகவல்:

பிள்ளைகள்-
மகேந்திரராணி (யாழ்.விக்கினேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி)
தவனேஸ்வரன் (கனடா),
விஜயா (ஜேர்மனி),

மருமக்கள்-
இளங்கோ (PHI செம்பியன்பற்று),
சிவனேஸ்வரி (கனடா),
திருநாவுக்கரசு (ஜேர்மனி).

பேரப்பிள்ளைகள்: நிவேதனன், நவீனா (கனடா), விசாகன் (ஜேர்மனி)

கோட்டைத்தெரு, வதிரி,
கரவெட்டி.

(52288)(21.19.15.26)

## சாரணிய வழிகாட்டுநர் பயிற்சி வகுப்பு நாளை

யாழ்ப்பாணம்,ஜூலை15

யாழ். வட்ட சாரணியம் வழிகாட்டுநர்களுக்கான பயிற்சியும் சாரணிய மாணவ குழுத் தலைவிகளுக்கான தலைமைத்துவ பயிற்சியும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரையும் வேம்படி மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளன.

இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளுமாறு ஆணையாளர் கோரியுள்ளார்.

## மகாஜனாவில் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,ஜூலை15

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடலும் பொதுக்கூட்டமும் எதிர்வரும் 30 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு துரையப்பா பிள்ளை மண்டபத்தில் கல்லூரி அதிபர் [illegible] சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (202)

## மரண அறிவித்தல்

### தர்மலிங்கம் ரதீஸ்குமார்



இமையாணன், பிறவளவைப் பிறப்பிடமாகவும் சவுதி அரேபியாவை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் ரதீஸ்குமார் அவர்கள் 11.07.2006 செவ்வாய்க்கிழமை சவுதிஅரேபியாவில் அகால மரணமானார்.

அன்னார் தர்மலிங்கம் - சரசு தம்பதியரின் அன்புப் புதல்வனும் ரதீஸ்வரன், சிவதர்சினி, பிரசாந்தன், பிரதீபன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆதியாமலை,
உடுப்பிட்டி.

தகவல்:
த.தவநேசன்
(ஆருயிர்த்தோழன் - லண்டன்)

(52242)(32)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. $\frac{3}{100}$ எனும் பின்னத்தைச் தசம எண்ணாகத் தருக. ..................

07. 5 அப்பியாசக் கொப்பிகளை விலைக்கு வாங்கிய ஒருவர் கடைக்காரரிடம் ரூபா 100 ஐக் கொடுத்தார். கடைக்காரர் அவருக்கு ரூபா 37.50 ஐ மீதியாகக் கொடுத்தார் எனின், அப்பியாசக் கொப்பி ஒன்றின் விலை யாது? ரூபா .................. சதம் ..........

08.

| இல்லம் | 1ஆம் இடம் | 2ஆம் இடம் | 3ஆம் இடம் |
|---|---|---|---|
| தாமரை | 20 | 6 | 5 |
| அல்லி | 10 | 18 | 9 |
| ரோசா | 4 | 10 | 20 |

இப்போட்டியில் 1ஆம் இடம் பெற்ற ஒருவருக்கு ரூபா 100 உம் 2ஆம் இடம் பெற்ற ஒருவருக்கு ரூபா 75 உம் 3ஆம் இடம் பெற்ற ஒருவருக்கு ரூபா 50 உம் பெறுமதியான பரிசுப் பொதிகள் வழங்கப்பட்டன. எனின் ரோசா இல்லத்திற்குக் கிடைத்த பரிசுகளின் மொத்தப் பெறுமதி யாது?

............ரூபா..............சதம்

பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டியொன்றில் இல்லங்கள் பெற்றுக் கொண்ட 1ஆம் 2ஆம் 3ஆம் இடங்களின் எண்ணிக்கை அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

1ஆம் இடத்திற்கு 5 புள்ளிகளும் 2ஆம் இடத்திற்கு 3 புள்ளிகளும் 3ஆம் இடத்திற்கு 1 புள்ளியும் கொடுக்கப்பட்டது. இதன்படி ஒவ்வொரு இல்லமும் பெற்றுக் கொண்ட மொத்தப் புள்ளிகளைத் தனித்தனியே தருக

09. தாமரை ..................
10. அல்லி ..................
11. ரோசா ..................

13] பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குச் சமனான தமிழ்ச் சொற்களை எழுதுக.
01. Moon .............................. 02. Tomorrow ..............................
03. Paddy .............................. 04. Television ..............................

14] பின்வரும் தமிழ்ச் சொற்களின் சிங்களச் சொல்லை சிங்கள எழுத்தில் எழுதுக.
01. காகம் ...................... 02. கிளி ......................

15] பின்வரும் சிங்களச் சொற்கள் குறிக்கும் தமிழ்ச் சொல்லை எழுதுக
01. கொந்த ...................... 02. மல் ......................

16] கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று நான் பத்திரிகை எடுத்துப் பார்த்தேன். அப்போது....... என்னும் சம்பவத்தினைத் தொடந்து ஆறு வாக்கியங்கள் எழுதுக.
1)..............................................................................
2)..............................................................................
3)..............................................................................
4) ..............................................................................
5) ..............................................................................
6) ..............................................................................

கல்விச்சுடரில் வெளிவரும் வினாக்களிலும், விடைகளிலும் ஏதாவது தவறுகள் அல்லது சந்தேகங்கள், விளக்கமின்மைகள் ஏற்படின் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்பு கொண்டால் அல்லது விலாசத்திற்கு எழுதி அனுப்பினால் உரிய ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு உங்களது சந்தேகங்கள் தெளிவாக்கப்படும்.

தொ.பே. இல. 0714-273035, 0714-220008

**கல்விச்சுடர்**
**உதயன் பணிமனை,**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## ‘திருவருட்பயன் வசன ரூபம்’ நூல் இலவசமாக வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 15

வல்வெட்டி கவிஞர் ஆ.கதிர்காமத்தம்பியின் துணைவியார் அமரர் திருமதி மாதேவிப்பிள்ளை கதிர்காமத்தம்பி எழுதிய ‘திருவருட்பயன் வசனரூபம்’ என்னும் நூல் அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

அமரரால் எழுதப்பட்டு தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் வெளியீடான ‘ஞானச்சுடர்’ சஞ்சிகையில் தொடராக பிரசுரிக்கப்பட்டுவந்த தொகுப்பே தற்போது நூல் வடிவில் வெளியீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

‘திருவருட்பயன் வசனரூபம்’ நூலின் வெளியீட்டுவிழா கடந்த மாதம் 2ஆம் திகதி தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்றது. சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம், யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையைச் சேர்ந்த விரிவுரையாளர்களான திருமதி கலைவாணி இராமநாதன், திருமதி நாச்சியார் செல்வநாயகம் ஆகியோர் இந்த விழாவில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

ஜி.சீ.ஈ.உயர்தர மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு உதவும் வகையில் வெளியிடப்பட்டுள்ள இந்த நூலை இலவசமாகப் பெற விரும்புவோர் தபால் செலவாக ரூ.18 பெறுமதியான முத்திரைஒட்டிய தபாலுறையை ‘ஆ.கதிர்காமத்தம்பி, பிலாவடி வீதி, புலோலி மேற்கு, புலோலி’ என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

## கிராம அலுவலர் மறுப்பு

நெல்லியடி, தடங்கன் புளியடியில் கடந்த 7ஆம் திகதி 3 கிரனேட்டுகள் மீட்கப்பட்ட சம்பவத்தின் போது பொலீஸாருக்குத் தான் தகவல் தெரிவிக்கவில்லை என்று அப் பகுதி கிராம அலுவலர் சி.பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து கடந்த 10ஆம் திகதி உதயனில் வெளியான செய்தியில் வெடிக்காத நிலையில் காணப்பட்ட கிரனேட்டுகள் குறித்து தான் பொலீஸாரிடம் முறையிட்டதாகக் குறிப்பிடப்பட்டதை அவர் மறுத்துள்ளார்.


## பதினைந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 12 - 05 - 1936
இறைவன் அடியில் 15 - 07 - 1991

**அமரர் கணபதி செல்வராஜா**
(ஓய்வுபெற்ற மின் இணைப்பாளர், காங்கேசன்துறை)
எங்களிற்கு நல்வழி காட்டிய அப்பாவே!
எமக்கு இனிய வாழ்வளித்த தெய்வமே!
என்றென்றும் எங்கள் உயிர் உள்ளவரை
இந்த மண்ணில் உங்களோடு வாழ்ந்த நினைவுகள்
எம் மனதை விட்டு அகலாது!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
நீங்காத நினைவுகளுடன்:
அன்பு மனைவி,
பாசமிகு பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
‘ராஜஸ்தான்’
காளிகோயில் வீதி,
கோண்டாவில் கிழக்கு.
(52192)(26.19.45)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



15 - 07 - 2006
செல்வி சந்தியா

நவிண்டில், இராக்கியந்தோட்டத்தைச் சேர்ந்த **சதீசன் - விசித்திரா** தம்பதியரின் செல்வப்புதல்வி **சந்தியா** தனது முதலாவதுபிறந்த நாளை இன்று (15-07-2006) சனிக்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, குணசிங்கம் அப்பையா குடும்பம், விஜயன் ஐயா குடும்பம், உற்றார், உறவினர் அனைவரும் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் இறைவன் துணைகொண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
**அப்பா சதீசன்**
இராக்கியந்தோட்டம், நவிண்டில்.
(52205)(26.19.45)

## CHUNDIKULI GIRLS' COLLEGE
## OLD GIRLS' ASSOCIATION

**Our Annual General Meeting and get to - gether will be held on Saturday 22nd July 2006, in the college hall**

**AGENDA**

1. 9.00 a.m.- Thanks Giving Service at St.John the Baptist's Church, Chundikuli
2. 10.00 a.m.- Honouring the Principal Emeritus
3. Felicitating the new Principal
4. 10.30 a.m.- Tea
5. 11.00 a.m. - A.G.M.
6. 12.30 p.m.- Fellowship Lunch

Lunch Tickets can be obtained from the O.G.A. committee members
Tickets - Rs 150/=
T.P.: 222 7159 / 7753
All Old Girls are cordially invited
-The Secretary.
(52154)

## கலாலயா
**பயிற்சியகம்**
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

மகளிருக்கான துரித ஒருமாத / 3மாத பயிற்சிகள்

* கேக் ஐஸிங் * கூந்தல் அலங்காரம் * உணவு தயாரித்தல் * FABRIC PAINTING
* பூ வேலை * கைவேலை * FACIAL * சாறி பிளவுஸ், சல்வார், பஞ்சாபி தைத்தல்
* புதிதாகத் தையல் பழக விரும்புவோருக்கான தையல் வகுப்புகள்

இடைநிறுத்தப்பட்டிருந்த புதிய கிழமை நாள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புகளுக்கான அனுமதிகள் மீண்டும் வழங்கப்படுகின்றன. புதிதாகச் சேர விரும்பும் மாணவிகள் தொடர்புகொள்ளவும்.

மேலும் விவரங்களை வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பிற்பகல் 2 மணிவரை நேரில் அறிந்துகொள்ளலா.
(சி/50181) (24-19-14)
- பதிவாளர்.

## COMPUTER EXPRESS
**Institute of Information Technology**
இல.15, சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்.
021-222 8250, 0777 222422

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற
Graphic துறையில் புதிய வடிவமைப்புக்களுடன் ஒருவாரகால முழுநேர பயிற்சிநெறி

**Diploma in Graphic Designing**

*Course Contents*
* கணனி தொடர்பான அறிமுகம்
* இயக்க அமைப்பு (Windows XP)
* Internet & e-mail
* Adobe Photoshop
* CorelDRAW
* Cool 3D Studio
* Macro media Flash MX
* Introduction to 3D Albam
* Extra practical

Course fee :- 2000/=

**Diploma in Video Mixing**

*Course Contents*
* கணனி தொடர்பான அறிமுகம்
* இயக்க அமைப்பு (Windows XP)
* Internet & e-mail
* Adobe Photoshop
* Adobe Premiere
* Cool 3D Studio
* Pinnacle Studio
* VCD Cutter
* Extra practical

Free Study Pack & Photos CD
Course fee :- 3000/=

நன்மைகள்:-
* பாடநெறியின் இறுதியில் பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
* அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படுவதால் கணனி தொடர்பான முன்னறிவு அவசியமில்லை.
* தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது.
* 100% செய்முறைப் பயிற்சிகளுடனான விரிவுரைகளிற்கு உத்தரவாதம்.

வகுப்புக்கள் ஆரம்பம்:- 17/07/2006

## நீங்கா நினைவுகளோடு முதலாம் ஆண்டு...



மலர்வு 10 - 09 - 1937
உதிர்வு 26 - 06 - 2005

**அமரர் கனகசபை கணேசன்**
(ஓய்வுபெற்ற அஞ்சலக ஊழியரும், டச்சு வீதி ‘கணேசன் ஸ்ரோர்ஸ்’ உரிமையாளரும்)
திதி: அவிட்ட பஞ்சமி (15-07-2006)
அல்லும் பகலும் அயராது பாடுபட்டு
இல்லத்தை ஒளியூட்டி
வழிகாட்டி நின்றவரே
உம் அன்பு முகம் மறைந்து
ஆண்டொன்று ஆனதப்பா!
ஆறிடுமா எம் துயரம்?
மாறிடுமா எம் சோகம்?
‘ஜீவகடாட்சம்’
மடத்தடி மேற்கு, சாவகச்சேரி.
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.
(52164)(26.19.45)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் வரிசை



நூல் : தாயகம்
ஆசிரியர் : க.தணிகாசலம்
வெளியீடு : தேசிய கலை இலக்கியப் பேரவை

'தாயகம்' கலை இலக்கிய சமூக விஞ்ஞான இதழின் ஜூன் மாத வெளியீடு வெளிவந்துள்ளது.

சோ.பத்மநாதன், நிவேதன், கீரன் நிலாமகள், வேந்தன், சடகோபன், அழ.பகீரதன் ஆகியோரின் கவிதைகளும் சிவசேகரத்தின் மொழிப்பெயர்ப்புக் கவிதையும் வித்தியா ஸ்ரீ ஆகியோரின் சிறுகதைகளும் வலிகாமம் வடக்கு மண்ணின் மைந்தர்கள் பற்றிய மாவை. வரோதயனின் தொடர்நடைச் சித்திரத்தின் முதற்பகுதி, குழந்தை ம.சண்முகலிங்கம், ஏகலைவா, செங்குரலோன், சி.சிவசேகரம், புதூர் இராசவேல் ஆகியோரின் கட்டுரைகளும் மனிதர்ஷா, சிவசேகரம், மணி ஆகியோரின் விமர்சனக் கட்டுரைகளும் இந்நூலில் உள்ளடங்கியுள்ளன.

ஏகலைவாவின் கட்டுரை அரசசார்பற்ற நிறுவனம் தொடர்பான தெளிவான பார்வையினை முன்வைக்கின்றது. தி.ஞானசேகரனின் சிறுகதைகள் தொடர்பாக சிவசேகரத்தின் மதிப்பீடும் அவரது படைப்புத் தொடர்பான பல கேள்விகளை முன்வைக்கிறது. அதே போல் பிறிதொரு கட்டுரையில் முருகையனின் தனிப்பாடல்களையும் சிவசேகரம் இலக்கிய ஆய்வுக்கு உட்படுத்துகின்றார்.

- இயல்வாணன்.



நூல் : மகோற்சவ விளக்கம்
ஆசிரியர் : அச்சுவேலி சிவஸ்ரீ ச.குமாரசுவாமிக் குருக்கள்
வெளியீடு : யாழ். சைவ பரிபாலன சபை


ஆலயக்கிரியைகளில் மிகமுக்கியமானதும் மக்கள் மனங்களில் நிறைவதுமான கிரியைகள் பெருந்திருவிழாக்களிலே இடம்பெறுகின்றன. இத்திருவிழாக்களில் மேற்கொள்ளப்படும் கிரியைகள் பற்றியும் அதன் பொருள் விளக்கங்கள் பற்றியும் பலருக்குத் தெரிவதில்லை. அக்குறையை நிவர்த்திசெய்யும் பொருட்டு 'மகோற்சவ விளக்கம்' நூல் வெளிவந்துள்ளது.

இந்நூலை சைவசிகாமணி அச்சுவேலி ச.குமாரசுவாமிக் குருக்கள் 'மகோற்சவ சந்திரிகை' என்ற பெயரில் 1932இல் வெளியிட்டார்.

இந்நூலை நீண்டகால இடைவெளியின் பின் சந்திரிகையில் கூறப்பட்ட விடயங்களை விரித்தும் பல விடயங்களைச் சேர்த்தும் திருத்தியும் விளக்கியும் 2ஆம் பதிப்பாக சென்னையிலுள்ள நாவலர் பெருமான் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டு யாழ். சைவபரிபாலன சபை வெளியிட்டுள்ளது. இந்த நூலில் மகோற்சவ கிரியைகள் பற்றி ஆகமங்கள், புராணங்களில் கூறப்பட்ட விடயங்களை இலகு தமிழில் விளக்கமாகத் தரப்பட்டுள்ளது.

மகோற்சவங்கள் பற்றி வடமொழி நூல்கள், புராணங்கள், திருமுறைகள் என்பவற்றில் தேடிக் கற்று அறிய முடியாதவர்களுக்கு இந்த நூல் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. ஆன்ம ஈடேற்றத்தை அடையவிரும்பி வழிபாடாற்றும் அடியார்களுக்கும் இத்துறைசார் ஆய்வுகளில் ஈடுபடுவோருக்கும் ஆலய பூசகர்களுக்கும் இந்நூல் நல்ல வழிகாட்டியாய் அமையும்.

- எஸ்.மதி



நூல் : பால பாடம் - முதற் புத்தகம்
வெளியீடு : யாழ். சைவபரிபாலனசபை

ஆறுமுக நாவலர் பெருமான் ஆக்கி அச்சிட்டு வெளியிட்ட பால பாடம் நூலை யாழ். சைவபரிபாலன சபை மறுபதிப்பாக வெளியிட்டுள்ளது.

நாவலர் பெருமான் கையில் புத்தகத்துடன் அமர்ந்திருக்கும் அழகிய முன் அட்டைப் படத்துடன் இந்த நூல் வெளிவந்துள்ளமை சைவத்துக்கும் தமிழுக்கும் அவர் ஆற்றிய பெருமைக்கு நன்றியறிதலாக விளங்குகின்றது.

இன்றைய நாகரிக யுகத்திலே ஆங்கிலமொழி மோகம் கொண்டு நற்றமிழ் நூல்கள் பல ஆரம்பக் கல்வி மாணவருக்குக் கற்பிக்கப்படுவதில்லை. அந்த நூல்கள் கிடைக்காமையும் ஒருகாரணம். அக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு பாலபாடம் முதற்புத்தகம் வெளிவந்துள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

நூலின் உள்ளே உயிர் எழுத்து, மெய்யெழுத்து உச்சரிப்புடன், சொற்கள் அமைக்கும் முறை காட்டப்பட்டுள்ளது. சொற்றொடர்கள் அமைத்தல், எண் உச்சரிப்பு என்பவற்றை எவ்வாறு ஆரம்பக் கல்வி மாணவர்களுக்குப் புகட்டலாம் என உதாரணங்களுடன் காட்டப்பட்டுள்ளது.

குழந்தைகளின் மனங்கவரும் அட்டைப்படத்துடன் வெளிவந்துள்ள இந்நூல் அனைத்து சிறுவர்களுக்கும் பயனளிக்கும் என்பதில் ஐயமில்லை.

- பூங்கோதை



நூல் : திருவருட்பயன் வசனரூபம்
ஆசிரியர் : திருமதி மாதேவிப்பிள்ளை கதிர்காமத்தம்பி
வெளியீடு : வல்வெட்டித்துறை விநாயகர் அருள்கூர் சைவநூற்பதிப்பகம்.

சைவத்தின் அருமை பெருமைகளைப் பெரும்பாலும் படித்து அறிந்துகொண்டதைவிட செவிவழியாகத் தெரிந்துகொள்பவைதான் அதிகம். படித்து உணர்ந்து, தெரிந்து, தெளிந்து கொள்ள பண்டைய நூல்களின் மொழிநடை, யாப்பு, இலக்கணம் என்பன எமது சிற்றறிவுக்கு இடம்கொடுப்பதில்லை. அக்குறையை நீக்கும்பொருட்டு சைவத்தின் பெருமை பேசும்வகையில் திருமதி மாதேவிப்பிள்ளை கதிர்காமத்தம்பியின் 'திருவருட் பயன் வசனரூபம் நூல்' வெளிவந்துள்ளது.

சைவசித்தாந்தத்தின் பிரமாண நூல்களாக பன்னிரு திருமுறைகளும் பதினான்கு மெய்கண்ட சாஸ்திரங்களும் விளங்குகின்றன. இந்நூல்களில் சிவஞானபோதம் முதல் நூலாகவும் சிவஞானசித்தியார் வழி நூலாகவும் சிவப்பிரகாசம் திருவருட் பயன் என்பன சார்பு நூல்களாகவும் விளங்குகின்றன.

சைவசித்தாந்த சாஸ்திரத்தை விளங்கிக் கொள்வதற்குரிய அறிமுக நூலாகவும் திருவருட் பயனைக் கொள்ளலாம்.

திருவருட்பயனில் இருந்து கடைந்தெடுக்கப்பட்ட வெண்ணெய்போன்று திருவருட் பயன் வசன ரூபத்தை ஆசிரியர் வெளியிட்டுள்ளார்.

முதல் ஐந்து அதிகாரங்களும் திருவருளைப் பற்றியும் இறுதி ஐந்து அதிகாரங்களும் திருவருளின் பயனைப் பற்றியும் எளிதில் கற்றுணரக் கூடிய வகையில் இந்நூல் அளிக்கப்பட்டுள்ளது. திருவருட்பயன் பத்து அதிகாரங்களைக் கொண்டது. இறைவனது இயல்புகள், ஆன்மாக்களின் தன்மை, ஆணவமலத்தின் தன்மை, ஆணவ மலத்தைக் கெடுத்து பேரின்பத்துக்கு வழிப்படுத்தும் திருவருளின் நிலை, குருவின் தன்மை, ஆன்மா குருவருளால் திருவருளை அறிதல், ஆன்ம சுத்தி அடைதல், இன்புறுநிலை, பஞ்சாட்சர மந்திரத்தின் சிறப்பு, இறைவனோடு இணைந்த சீவன் முத்தரது நிலை என்பவற்றைத் தெளிவாக எடுத்துக்கூறுவது.

ஆசிரியர் ஒவ்வொரு அதிகாரத்தையும் இலகு தமிழில் எளிதில் விளங்கும் வகையில் படைத்துள்ளார். இறுதியில் சாராம்சக் கருத்துக்களைப் பொதித்து வைத்துள்ளார். இது இந்நூலைப் படிப்பவர்களுக்கு மேலும் விளக்கத்தைக் கொடுக்கிறது.


நூலின் இறுதியில் தத்துவ ரீதியாகவும் தர்க்கரீதியாகவும் பலவினாக்களுக்கான விடைகளை அனுபந்தமாக இணைத்துள்ளார். எம்மைப் பற்றிய ஆசிரியரின் ஆராய்ச்சி எம்மையும் நான் யார் என ஆராயத் தூண்டுவது சிறப்பாகும்.

பிறவிப்பயனைப் பெறுவதற்கு வழிகாட்டியாக அமையும் திருவருட்பயன் வசனரூபம் நூலை எழுதிய ஆசிரியர் மறைந்தபோதும் அவரது கணவர் இலவசமாக வெளியிட்டு பலரின் கைகளை அடைய வைத்துள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

இந்நூல் சைவசமயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இந்துதமிழ் பாடத்தைக் கற்பவர்களுக்கும் சமயம் தொடர்பான தேடல் உள்ளவர்களுக்கும் விருந்தளிக்கும் என்பதில் ஐயமில்லை.

- எஸ்.தூயா

# நல்லை ஆதீன ஸ்தாபகரின் பிரசங்கங்கள் ஒலிநாடா வடிவில்




நல்லூர்,ஜூலை15

இறைபதம் எய்திய நல்லை ஞானசம்பந்தர் ஆதீன ஸ்தாபகர் சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளின் கதாப்பிரசங்கங்களைத் திரட்டி ஒலிநாடாவில் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

நல்லை ஆதீன குருமணி என்றும் மணிஐயர் என்றும் பக்தர்களால் மரியாதையுடன்அழைக்கப்பட்ட பரமாசார்ய சுவாமிகள் புராண மற்றும் இதிகாச பிரசங்கங்களை நடத்துவதில் புகழ் பெற்றிருந்தார். குறிப்பாக அவர் நல்லைக்கந்தன் ஆலயத் திருவிழா நாள்களில் வைரவர் சந்நிதி முன்பாக பல வருடங்களாகக் கதாப்பிரசங்கம் செய்துவந்தார்.

அவருடைய கதாப்பிரசங்கங்களைத் திரட்டித் தொகுத்து ஒலிநாடாவடிவில் வெளியிட யாழ். மாநகராட்சி சபை ஏற்பாடு செய்துள்ளது. இதற்கான பணிகளை மாநகராட்சியின் சைவ சமய விவகாரக்குழு மேற்கொண்டு வருகின்றது.

ஆறுமுகநாவலரின் வழியில் இறையுணர்வைப் பரப்பியவர் நல்லைக்குருமணி. அவரது கதாப்பிரசங்கங்கள் தற்போதைய இளையதலைமுறையினரிடையே பக்தி மற்றும் சமய அறிவை வளர்க்க உதவும் வகையிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.



வல்வெட்டியூர் கவிஞர் ஆ.கதிர்காமத்தம்பியின் சேவையைப் பாராட்டி தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் அவருக்கு பொன்னாடை போர்த்து பரிசில் வழங்கப்பட்டது. சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் கவிஞருக்குப் பொன்னாடை போர்த்துப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# மக்கள் நலன்கருதி பணியாற்றிய பெரியார்



தமக்கென மட்டும் வாழாது பிறருக்காகவும் வாழ்ந்து மறைந்தவர்கள் செய்த அளப்பரிய சேவைகள் மக்கள் மனதில் இருந்து என்று மறைவதில்லை. அந்தவகையில்தான் ஈட்டிய செல்வத்தின் பெரும் தொகையை மக்கள் நலன் கருதி சமய, சமூக சேவைகளுக்கு அர்ப்பணித்த மறக்கமுடியாத பெரியார் தான் அண்மையில் காலமான திரு.கந்தையா இராமநாதனாவார்.

அமரர் கந்தையா இராமநாதன் 29.11.1921ஆம் நாளன்று கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயச் சூழலில் கந்தையா முத்தம்மா தம்பதியரின் மூன்றாவது புதல்வனாகப் பிறந்தார். இவர் இளமையில் யாழ்ப்பாணம் கில்னர் பாடசாலை, திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி, யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றில் கல்விகற்று பொது வேலைகள் திணைக்களத்தில் ஓவசியராக சேர்ந்து சிரேஷ்ட தொழில் நுட்ப அதிகாரியாகக் கடமையாற்றி இளைப்பாறினார்.

**கு.சண்முகநாதன் J.P.**
கொக்குவில்.

இவர் தான் பிறந்த, புகுந்த மற்றும் அரச சேவையில் சேவையாற்றிய இடங்களிலெல்லாம் குறிப்பாக பொது மக்கள் நலன்கருதி பெரும் சேவையாற்றியுள்ளார். குறிப்பாக பசறையில் கடமையாற்றிய காலத்தில் அங்கு பசறை இராமநாதன் என அழைக்கப்பட்ட அமரர் பசறையில் சிங்களப் பாடசாலை ஒன்றுடன் இயங்கிய தமிழ்ப் பாடசாலையைத் தனித்தமிழ்ப் பாடசாலையாக இயங்குவதற்கு முன்னின்று உழைத்தார். பதுளை சைவ பரிபாலன சபை, வத்தளை இந்துமாமன்றம், கொக்குவில் இந்துக் கல்லூரி அபிவிருத்திச் சபை ஆகியவற்றின் தலைவராகவும் இருந்துள்ளார். யாழ்ப்பாணத்தில் கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் நீண்டகாலத் தர்மகர்த்தாவாகவும் 1993 முதல் பரிபாலனசபையின் தலைவராகவும் கடமையாற்றிய அமரர் அவ்வாலயத்தின் வளர்ச்சிக்கு தனது குடும்பத்தினரின் சார்பில் பல லட்சங்களை வாரி வழங்கினார். கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலையத்தின் ஆரம்ப கால உறுப்பினராகவும் நீண்டகாலப் போஷகராகவும் கடமையாற்றிய அமரர் ஆரம்பகாலத்தில் வீரகேசரித் தினசரிப் பத்திரிகையையும் அதன்பின் உதயன் தினசரிப் பத்திரிகை வெளிவரத் தொடங்கியதும் அப்பத்திரிகையையும் நிலையத்திற்கு தொடர்ச்சியாக நன்கொடையாக வழங்கிவந்த வள்ளலாவார். நந்தாவில் இந்துசமய

## நீத்தார் நயப்புரை

அபிவிருத்திச் சங்கத்தின் வளர்ச்சியிலும் அமரர் பெரும் பங்காற்றியுள்ளார். மேலும் சில வருடங்களுக்கு முன் கோண்டாவில் கிழக்கு இராமகிருஷ்ண மிசன் பாடசாலை மாணவர்களின் நலன்கருதி அப்பாடசாலைக்குக் கணனி இயந்திரங்களை நன்கொடையாக வழங்கியுள்ளார். மற்றும் கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகத்தின் அனுசரணையுடன் ஏழைகள் நலன்கருதி நடத்தப்படும் வளர்மதி நிறைவாழ்வகத்தின் போஷகராகவும் விளங்கிய அமரர் அந்நிலையத்தின் வளர்ச்சிக்கு நன்கொடைகளை வழங்கிவந்தார். அண்மையில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் துயரத்தைப் போக்க அமரர் தனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் சேர்ந்து 3 லட்சம் ரூபாவை அன்பளிப்புச் செய்தார். அன்னாரின் அளப்பரிய சேவையினைப் பாராட்டி கொக்குவில், கோண்டாவில் மக்கள் 2005ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25ஆம் நாள் கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயக் கலியாண மண்டபத்தில் பாராட்டுவிழா எடுத்து மகிழ்ந்தனர். அரசாங்கமும் இவரது சேவையைப் பாராட்டி அகில இலங்கை சமாதான நீதிவான் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CARITAS – HUDEC - JAFFNA

# VACANCIES

## 1. Field Officers (Construction)

**Base Station:** Mullaitivu (3 Positions)

**Main Duties :**

- Assist in all construction activities & give regular information to the Field Coordinator and provides detailed and exhaustive news of the evolution of operations.
- In collaboration with the administration to collect all the documents needed to establish the final reports to Caritas SEDEC (Purchase Orders, Good Received Notes, Quotations, Traveling claims details…) for construction
- In case of emergency, the Field Officer can negotiate with the suppliers and found a solution about the programme supplies.
- Manage the skilled labour (masons, carpenters etc.)

**Requirements:**

- NCT in Civil Engineering or equivalent with 2 years experience in the same field
- Experience in Implementation, Monitoring and Evaluating
- Strong interpersonal and liaison skills.
- Computer literacy in WinWord, Excel and email software.
- Experience in preparing Monthly Progress Activity Report and Sites Advancement Report
- Good team player
- Fluency in Tamil & English
- Posses a valid driving license

## 2. Children Programme Assistant

**Base Station:** Kilinochchi(1 position)

**Main Duties:**

- Assist the Program Manager in conducting coordination meetings and workshops with caregivers.
- Conducting workshops with children.
- Preparing reports of workshops and meetings with caregivers and children.
- Conduct regular visits in Children's Home to monitor the implementation of activities.
- Updating regularly the data records about the children living in the Children's Homes involved in the Program.
- Monitoring and Supervise Resource Personnel employed for specific activities within the frame of the Program.
- Conducting participatory needs assessment in the Children's Homes involved in the Program.
- Supervise in cooperation with the finance department in Kilinochchi office the expenditures for monthly support cost.
- Monitoring and reporting in cooperation with the construction department in Kilinochchi office the progress of construction work in Chidlren Homes.

**Requirements:**

- Background on child care
- Experience in conducting workshop
- Knowledge in community based approach
- Experience in psycho-social activities
- Good team player
- Computer literacy
- Fluency in English, spoken and written
- Willingness to travel to Jaffna and Mullaitivu

## 3. Livelihood Field Officer -Agriculture

**Base Station:** Vadamarachchi East (1 position)

**Main Duties:**

- The Field Officer has in cooperation with Caritas - Hudec the responsibility of the daily implementation of the agriculture related projects, part of the livelihood programme, under the supervision of the livelihood programme manager.
- Project activities include rehabilitation activities ranging from distribution of material and tools (e.g. seeds, fertilizers, equipments), development of self sustainable activities for farmers (home gardening, food processing, marketing), assistance to the agriculture structures (cooperatives, societies, training centers) as well as trainings (including new practices and technologies development).
- Longer term interventions include livelihood recovery support, mobilization and development and capacity building of community groups.
- The FO is also responsible for helping to maintain a database of project activities, prepare project proposals and provide ongoing monitoring and evaluation of community projects
- S/He works closely with community-level government authorities, religious leaders of all faiths and community committees (VDF, socio-eco committee etc.)
- Provide expertise to questions related to agriculture.
- Ensure involvement of affected populations in assessment as well as in planning and implementation.

**Requirements:**

- Bachelors in social work or equivalent degree with at least two year community-based work experience
- Knowledge and experience working with participatory methods and community
- Demonstrated knowledge in agriculture and small enterprises sectors
- English language skills required
- Excellent knowledge of computer packages such as excel, access and word
- Good communication and organizational skills
- Ability to work as a team, travel extensively and work in difficult conditions
- Ability to work with religious leaders and communities regardless of own religious affiliation
- Posses a valid driving license

## 4. Livelihoods Programme Manager

**Base Station:** Mullaitivu(1 position)

***General duties:***

- In cooperation with CARITAS – HUDEC, look into different needs, approaches and possibilities. Plan and finalize the various project components in the sector of livelihood. Take into consideration the policy of the local authorities.
- Assist in the definition of a strategy with CARITAS-HUDEC as well as a time schedule for the implementation. Regularly check the time planning with the implementation.
- Liaise with the Programme Manager(s) and the Officers to ensure that implementation of the programmes are adequately planned and conducted.
- Set up, in coordination with CARITAS-HUDEC, the working structure for the implementation. Identify the needs of the livelihood staff, in terms of trainings and assist in the implementation of all capacity building activities.
- Liaise with all involved actors in the field of livelihood, be it local authorities and institutions, international organisations or other bodies. Attend the regular sectoar meetings.
- Assist CARITAS-HUDEC in getting all documents and agreements in order to start the implementation.
- Assist CARITAS-HUDEC in the decision making process (selection of projects, definition of selection criteria, target groups, strategies etc.)
- Support CARITAS-HUDEC in the project documentation.
- Provide expertise to questions related to livelihood AND/OR liaise with international OR local experts in order to provide additional expertise.
- Assure proper communication between all involved parties.
- Support CARITAS-HUDEC in formulating the reporting in the narrative interim and final report.
- Ensure involvement of affected populations in assessment as well as in planning and implementation.

**Requirements:**

- Demonstrated management experience with a special emphasis on project management related to micro-enterprise and income generating activities
- Experience using word processors, spreadsheets, and email
- Knowledge and experience working with participatory methods
- Demonstrated knowledge in agriculture, fisheries and small enterprises sectors
- Fluency in Tamil and English
- Good communication and managerial skills

Caritas-Hudec recruits qualified individuals without distinction of ethnic background, religion or gender.
If you would like to be a part of a dedicated team in a humanitarian context, Please send us your CV & motivation letter including your contacts & minimal two references to the following address, latest by
**25 July 2006**

**Director,**
**Caritas-Hudec**
**14 Mathew's Road,** or **E-mail: hudec@sltnet.lk**
**Jaffna.**

**PLEASE SPECIFY THE POST YOU APPLY FOR IN YOUR APPLICATION WITH CONTACT TELEPHONE NUMBERS**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தீவிரவாதிகளின் நிலைகளைத் தாக்குவதாகக் கூறி

# இஸ்ரேல் நடத்தும் வான் தாக்குதல்களில் லெபனானில் பொதுமக்கள் 50 பேர் பலி!

பெய்ரூட்,ஜூலை15

லெபனானில் தீவிரவாதிகளின் நிலைகளைத் தாக்குவதாகக் கூறி இஸ்ரேல் நடத்தும் வான் தாக்குதல்களில் நேற்று வரை சுமார் 50 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல்-லெபனான் எல்லைப் பகுதியில் கடந்த புதன்கிழமை ஹிஸ்புல்லா தீவிரவாதிகளுக்கும் இஸ்ரேல் இராணுவத்தினருக்கும் இடையே கடும் சண்டை நடந்தது. இச்சண்டையில் இஸ்ரேல் இராணுவ வீரர்கள் எட்டுப் பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் இருவரை தீவிரவாதிகள் பிடித்துச்சென்றனர். இதையடுத்து அவசரமாக இஸ்ரேலின் அமைச்சரவை கூட்டம் நடந்தது. அதில் ஹிஸ்புல்லா தீவிரவாதிகளுக்கு எதிராக பதிலடிகொடுக்க முடிவுசெய்யப்பட்டது. அமைச்சரவையின் இந்த முடிவை அடுத்து இஸ்ரேல் இராணுவத்தினர் விமானத் தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் உள்ள சர்வதேச விமான நிலைய ஓடுபாதைகள் மீது நேற்றும் இஸ்ரேலிய விமானங்கள் குண்டுகளை வீசின. இதனால் அங்கு தரையிறங்க வேண்டிய விமானங்கள் சைபிரஸ் நாட்டுக்குத் திசை திருப்பிவிடப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை பெய்ரூட்டின் தென்புற நகரப் பகுதிகளில் இஸ்ரேலிய விமானங்கள் குண்டுகளை வீசின. இதில் 'ஜியாஹ்' மின்சார உற்பத்தி நிலையம் சேதமடைந்தது. அங்கிருந்த எரிபொருள் தாங்கிகள் தீப்பிடித்து எரிகின்றன. லெபனான் பொலிஸார் இத்தகவல்களைத் தெரிவித்தனர்.

இதுகுறித்து இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர் கூறுகையில், லெபனானில் இருந்த ஹிஸ்புல்லா தீவிரவாதிகளின் 18 நிலைகள் அழிக்கப்பட்டன என்றும், இதில் 3 பொது மக்கள் உயிரிழந்ததுடன் 50 பேர் வரை காயமடைந்ததாகவும் தெரிவித்தார்.

இந்நிலையில் மேற்காசிய நிலைமை தொடர்பாக ஆராய ஐ.நா.பாதுகாப்புச் சபை அவசரமாகக் கூட்டப்பட்டுள்ளது. இஸ்ரேலின் தாக்குதல்களை நிறுத்துமாறு லெபனான் விடுத்துள்ள அவசர வேண்டுகோள் இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

## சீனாவிலும் வெள்ளம்

பெய்ஜிங்,ஜூலை15

சீனாவின் வடகிழக்குப் பகுதியில் கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக 4ஆயிரம் பேர் தங்கள் வீடுகளை விட்டு பாதுகாப்பான பகுதிகளுக்குச் சென்றுள்ளனர். கடந்த சில நாள்களாக சீனாவின் ஹெய்லாங்ஜியாங் மாகாணத்தில் புயலுடன் பலத்த மழை பெய்தது. இதனால் அந்த மாகாணத்திலுள்ள 3 மாவட்டங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இச்சுன் நகரத்தில் நிலச்சரிவு ஏற்பட்டது. வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் சிக்கியுள்ள 4 ஆயிரத்து 300 குடும்பங்களை மீட்கும் பணி நடைபெறுகின்றது.



தமிழர் பூமி கட்சி, தே.மு.தி.க.வுடன் இணைவதாகத் தீர்மானம் நிறைவேற்றி அத்தீர்மான நகலை அக்கட்சியின் நிறுவனத் தலைவர் கு.ப.கிருஷ்ஷ்ணன், தே.மு. தி.க. கட்சித் தலைவர் விஜயகாந்திடம் வழங்கினார்.

## மும்பை தொடர் குண்டு வெடிப்பால் ஐந்து கோடி ரூபா வரை நட்டம்

### இந்திய ரயில்வே திணைக்களம் தகவல்

மும்பை,ஜூலை15

மும்பையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தொடர்குண்டு வெடிப்புச் சம்பவத்தால் இந்திய ரயில்வே திணைக்களத்திற்கு 5 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இத் தகவலை ரயில்வே பொது மேலாளர் ராஜ்கமல் ராவ் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், ரயில் நிலையங்களில் தற்போதைய பாதுகாப்பு ஏற்பாடுகள் போதுமானதல்ல; உள்ளூர் ரயில்களில் எந்த வகையில் பாதுகாப்பை பலப்படுத்துவது என்பது பற்றிக் கருத்துகளைத் தெரிவிக்க ஆய்வுக்குழு அமைக்கப்படும். ரயில் நிலையங்களில் தொலைக்காட்சிகள் பொருத்துவதற்கு கேள்விகள் கோரப்பட்டுள்ளன. வெடிகுண்டு சம்பவம் நடந்த 16 மணி நேரத்தில் மீண்டும் ரயில் போக்குவரத்தைத் தொடக்க நடவடிக்கை மேற்கொண்டோம் என்று தெரிவித்தார். (202)

## ஆதிகாலத் தமிழருக்கு 'நெற்றிக்கண்'!

ஆதிகாலத்தில் வாழ்ந்த தமிழர்களின் மூதாதையர்கள் நெற்றிக்கண் உடைய வர்களாக இருந்திருக்கலாம் என்று தொல்பொருள் ஆய்வாளர்கள் கருதத் தொடங்கி யிருக்கிறார்கள்.

தமிழ் நாட்டில் ஆதித்த நல்லூர் என்ற இடத்தில் கிடைத்துள்ள மண்டை ஓடுகளே இந்த விதமாக ஆராயச்சியாளர்களை சிந்திக்க வைத்துள்ளது. இத்தகவலை டி.கே.வி.ராஜன் என்ற தொல்பொருள் ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

அங்கு கிடைத்த மண்டை ஓடு ஒன்றில் மட்டுமல்ல, நான்கு மண்டை ஓடுகளின் நெற்றிப்பகுதியில் கண்ணுக்குரியது போன்ற பள்ளம் இருப்பதாக அவர் தெரிவித்தார். இந்தப் பள்ளங்கள் இருப்பதற்கு ஏதும் நோய் காரணமாக இருக்க முடியாது. ஏனெனில் அப்பகுதியில் கிடைத்த நான்கு மண்டை ஓடுகளில் இப்பள்ளம் காணப்படுகிறது - என்றார் அவர்.

இந்த மண்டையோடுகளின் விவரம் மற்றும் நிழல் படங்கள் அமெரிக்க ஆய்வாளர்களுக்கு அனுப்பப்பட்டதாகவும் அவர்களும் நோய் காரணமாக இந்தப் பள்ளம் ஏற்பட்டிருக்க முடியாது என்பதை ஒப்புக்கொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஆதிகால தமிழருக்கு நெற்றியிலும் கண் இருந்திருக்கலாம் என்பது ஐதீகம் மட்டுமே. ஆராய்ச்சி முடிவல்ல என்றும் அவர் கூறினார்.

(ப)

## ஷியா முஸ்லிம்கள் 24 பேர் ஈராக்கில் கடத்திக் கொலை!

ஈராக்,ஜூலை15

ஈராக்கில் கடந்த புதன்கிழமை கடத்தப்பட்ட 26 ஷியா முஸ்லிம்களில் 24 பேர் கொலை செய்யப்பட்டு சடலங்கள் தோட்டங்களில் வீசப்பட்டுள்ளன.

ஈராக்கில் அண்மைக்காலமாக ஷியா, சன்னி முஸ்லிம் பிரிவினர்களுக்கிடையில் மோதல் அதிகரித்துள்ளது. இந்நிலையில் கடந்த புதன்கிழமை ஈராக்கின் முக்தாதியா நகரிலிருந்து ஷியாப் பிரிவைச் சேர்ந்த 26 பேர் கடத்திச் செல்லப்பட்டனர்.

அவர்களில் 24 பேர் கொலை செய்யப்பட்டு, அவர்களது சடலங்கள் அருகிலுள்ள சீஹம் என்ற கிராமத்தில் தோட்டங்களில் வீசப்பட்டுக் கிடந்துள்ளன.

ஏனைய இருவரது நிலை குறித்து தகவல் இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஈராக் வந்துள்ள அமெரிக் பாதுகாப்பு அமைச்சர் டொனால்டு ரம்ஸ்பீல்டு பாதுகாப்பு நிலைவரம் குறித்து ஈராக் பிரதமர் நூரி அல் - மாலிக்கியுடன் பேச்சு நடத்திக்கொண்டிருக்கும் நிலையில் இந்தப் படுகொலை நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (202)

# தீவிரவாதிகளைப் பிடிக்க இந்தியாவுக்கு உதவுங்கள்

### உலக நாடுகளிடம் ஐ.நா. சபை வேண்டுகோள்

நியூயோர்க்,ஜூலை15

மும்பை ரயில்களில் வெடிகுண்டுகள் வைத்த தீவிரவாதிகளைப் பிடிப்பதற்கு உலக நாடுகள் இந்தியாவிற்கு உதவவேண்டும் என்று ஐ.நா.பாதுகாப்புச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது

ஐ.நா.பாதுகாப்புச் சபையின் ஜூலை மாதத்திற்கான தலைவரும் பிரான்ஸ் நாட்டு தூதுவருமான சப்விரி நேற்றுமுன்தினம் நியூயோர்க்கில் வைத்து பாதுகாப்பு சபையின் ஒருமித்த கருத்துடன் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 11 ஆம் திகதி இந்தியாவில் மும்பை மற்றும் ஸ்ரீநகரில் நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதல்கள் வன்மையாகக் கண்டிக்கத்தக்கன.

சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்புக்கும் தீவிரவாதம் கடுமையான மிரட்டல் விடுக்கிறது. தீவிரவாத செயல்களுக்கு நோக்கம் எதுவாக இருந்தாலும் எங்கு, எப்படி நடந்தாலும் அதை நியாயப்படுத்த முடியாது.

மும்பை, ஸ்ரீநகரில் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளையும் அவர்களுக்கு நிதியுதவி செய்தவர்களையும் திட்டம் வகுத்துக் கொடுத்தவர்களையும் பிடித்து நீதிக்கு முன் நிறுத்துவது அவசியமாகும். இந்த விடயத்தில் இந்திய அரசுக்கு சகல நாடுகளும் ஒத்துழைப்பு அளித்து உதவவேண்டும் - என்றுள்ளது. (202)

## ஜப்பானுக்கு சீனா கண்டனம்

பீஜிங்,ஜூலை15

வடகொரியா ஏவுகணை சோதனை நடத்தியது தொடர்பான பிரச்சினையை ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு ஜப்பான் கொண்டுசென்றதற்கு, சீனா கண்டனம் தெரிவித்துள்ளது.

பிரச்சினையை சுமுகமாகத்தீர்ப்பதற்கு உலகநாடுகள் முயற்சிசெய்து வரும் நிலையில் அதைப்பாதிக்கும் வகையில் ஜப்பான் நடந்துகொண்டுள்ளது என்று சீனா குற்றஞ் சாட்டியுள்ளது.

இது பொறுப்பற்ற செயல். இது வட கிழக்கு ஆசியாவில் பதற்றத்தை உருவாக்கும். எரியும் நெருப்பில் எண்ணை ஊற்றிய போல் ஆகும் என்று சீன அதிகாரி ஜியாங் யூ தெரிவித்துள்ளார். (202)

## பீகாரில் தொடர் மழை ; 2 லட்சம் பேர் பாதிப்பு !





பாட்னா,ஜூலை15

இந்தியாவின் பீகார் மாநிலத்தில் கடந்த 3 நாள்களாகப் பெய்துவரும் தொடர்மழையால் 2லட்சத்துக்கும் அதிகமான பொது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாநிலத்தின் சிடாமர்ஹி, முஸாபர்பூர், பாகல்பூர், ஸியோஹர் ஆகிய மாவட்டங்களில் கடந்த 3 நாள்களாக கடும் மழை பெய்துவருகிறது. இதனால், பெரும்பாலான நதிகளில் வெள்ளப்பெருக்கு அதிகமாகியுள்ளது. பாட்னாவில் பல பகுதிகளில் வெள்ளநீர் தேங்கியுள்ளது. வீடுகளில் வெள்ளநீரும், சாக்கடை நீரும் புகுந்துள்ளன. இதனால், அப்பகுதிகளில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

வெள்ளநீர் அதிகமாகவுள்ள பகுதிகளில் மீட்புப் பணியினர், படகு மூலமாக மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். பலத்த மழை தொடர்ந்தும் பெய்து வருவதால் பாட்னா மாவட்டத்தில் உள்ள கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. வெள்ள பாதிப்பு பகுதிகளில் முழு வீச்சில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(202)

## நடிகர் சூர்யா வீட்டிலிருந்து அ.தி.மு.கவுக்கு மிரட்டல் போன்

சென்னை,ஜூலை15

தமிழ்த் திரைப்பட நடிகர் சூர்யாவின் வீட்டுத் தொலைபேசியிலிருந்து அ.தி.மு.க தலைமை அலுவலகத்திற்கு தொலைபேசி மூலம் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

சென்னையில் தியாகராஜநகர், பாண்டி பஜார் ஆகிய இடங்களில் ஓரிரு நாள்களில் குண்டுகள் வெடிக்கும் என்றே மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. மும்பையில் ரயில்களில் இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்பையடுத்து இந்த மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதால் தமிழகத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. தொலைபேசி மிரட்டலையடுத்து குறிப்பிட்ட இடங்களில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மிரட்டல் குறித்து அ.தி.மு.கவினர் பொலிஸாரிடம் முறையிட்டவுடன் அடுத்த ஒருமணி நேரத்தில் பொலிஸார் மர்ம நபர் பேசிய தொலைபேசி இலக்கத்தைக் கண்டு பிடித்தனர். அத்தொலைபேசி இலக்கம் நடிகர் சூர்யா மற்றும் அவரது தந்தை நடிகர் சிவகுமார் ஆகியோர் வசிக்கும் சென்னை தியாகராஜநகர் வீட்டின் தொலைபேசி என்றதும் பொலிஸார் அதிர்ச்சியடைந்தனர்.

சூர்யா வீட்டில் இருந்து தொலைபேசி மூலம் பேசிய பரபரப்பை உண்டாக்கிய மர்ம மனிதனைக் கண்டு பிடிக்கும் நடவடிக்கையை பொலிஸார் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இந்த மிரட்டல் குறித்து பொலிஸ் ஆணையாளர் லத்திகா சரண் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் ,

இந்த மிரட்டல் தொடர்பாக, நடிகர்கள் சூர்யா, சிவகுமார் மீது சந்தேகப்படவில்லை. இது குறித்து தீவிரமாக விசாரிக்கப்படும்.

தியாகராஜநகர் மற்றும் பாண்டிபஜார் ஆகிய இடங்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேம்பால ரயில் மற்றும் தர மணி உள்ளிட்ட இடங்களில் உள்ள சொப்வெயார் நிறுவனங்களிலும் பொலிஸார் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

சென்னையில் உள்ள வெளிநாட்டு தூதரக அலுவலகங்களுக்கும் பொலிஸ் கண் காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது- என்றார். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# COMPUTERIZED ACCOUNTING

Speed Batch only 30 Hours

விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன

Fees 2000

- Days :- Sat, Sun
- Time :- 4.00 - 5.30 P.M
- Only For 10 Students
- ☆ கணக்கியல் அறிவில்லாதவர்களும் இணைந்து பயிற்சி பெற முடியும்.
- ☆ பயிற்சிகள் யாவும் Qualified & Experience Lecturers மற்றும் Banking Professionals ஆல் நடாத்தப்படும்.

**C.B Computer Academy**

T.P No 021-4590291 Station Road, Kondavil



உ

ஓம் சக்தி கணபதி துணை

## உங்கள் பெயரிலே பேரதிர்ஷ்டம்

உங்கள் பெயர் மூலமே உங்களின் சகல விதமான பிரச்சினைகளையும் தீர்த்துக்கொள்ள முடியும்.

வியாபாரத்தில் அதிக இலாபம், காலாகாலத்தில் திருமணம், காலதாமதமின்றி மகப்பேறு, தீராதநோய் தீரல், குறைபாடு, பலவீனம் விலகுதல், வாழும் இல்லத்தில் நிரந்தர நிம்மதி, இன்னோரன்ன கவலைகள் தீர நிரந்தர பரிகாரம், ஆலோசனை பெறமுடியும்.

தொடர்புகளுக்கு:
0777 884163

**ரவீன் பியூரோ**

பழம் வீதி,
கோப்பாய் தெற்கு.

(51222)


உ

சிவமயம்

## கந்தபுராண படன பூர்த்தி விழா
## வள்ளியம்மை திருமணப் படிப்பு

**இடம்:** குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் திருக்கோயில்
**காலம்:** நாளை (16.07.2006) ஞாயிற்றுக்கிழமை
**நேரம்:** காலை 7 மணிக்கு ஆரம்பம்

❋ பௌராணிக வித்தகர்களும், கந்த புராணப் பற்றுறுதியாளர்களும் வருகைதந்து கந்தன் கவியமுதை மாந்திக்களிக்க வேண்டுகிறோம்.

*வாழ்க சீரடியாரெல்லாம்*

சிவசிவ

குப்பிழான். -பரிபாலனசபை.

## 60 ஆவது பிறந்ததின வாழ்த்துக்கள்



திருமதி
**கேசவன் மகேஸ்வரி**

இன்றுபோல் என்றும் இனிதே பல்லாண்டு வாழ்ந்து எமக்கு எல்லாம் வழிகாட்ட எல்லாம் வல்ல இறைவன் துணை புரிவாராக.

மீசாலை வடக்கு,
மீசாலை.

பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்
மற்றும் குடும்பத்தினர்.

(52261)

## பாராட்டு விழா

ஓய்வுபெற்ற தபால் அதிபரும் சமூக சேவையாளருமாகிய முருகேசு சண்முகம் அண்மையில் சமாதான நீதிவானாகப் பதவியேற்றதை ஒட்டி பாராட்டு விழா நாளை பிற்பகல் 4 மணிக்கு க.சுப்பிரமணியம் தலைமையில் ஆனைக்கோட்டை அ.மி.த.க.பாட சாலை மண்டபத்தில் நடைபெறும்.

ஆசியுரையை கரைப்பிரான் ஆதிவிநாயகர் ஆலய பிரதமகுரு சோ.சிவகுமாரக் குருக்களும் பாராட்டுரையை ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் வை.சந்திர ராசா, அ.மி.த.க. பாடசாலை அதிபர் சி.நாகையா, சட்டத்தரணி தியாகராசா, ஓய்வுபெற்ற உப அதிபர் க.கதிரேசு, ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் க.கணேசலிங்கம் ஆகியோரும் நிகழ்த்துவர். (100)

## திருமண மண்டபத் திறப்புவிழா

நீர்வேலி திருமுருகன் திருமண மண்டபம் மற்றும் பல்பொருள் அங்காடி ஆகியவற்றின் திறப்புவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோயில் வடக்கு வீதியில் நடைபெறவுள்ளது.

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி ஆசிரியர் சிவத்தமிழ் சொல்லழகர் ச.லலீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அருளாசிகளை இந்துக்குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ ப.மனோகரக்குருக்கள், நல்லை திருஞான சம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் ஆகியோர் நிகழ்த்துவர்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கொமர்ஷல் வங்கியின் ஸ்ரான்லி வீதிக்கிளை முகாமையாளர் ஏ.எம்.ஏ.குபேரகுலேந்திரன் கலந்து கொள்வார்.

'அருள்மணம் கமழும் திருமணச் சிறப்புக்கள்' என்னும் நூலின் வெளியீட்டு விழாவும் இந்நிகழ்வில் நடைபெறவுள்ளது. நூலின் ஆய்வுரையை சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ.துரைஎங்கரசு நிகழ்த்துவார். இந்நூலை நீர்வைமணி தொகுத்துள்ளார்.


## தேவை

- கணனி இயக்குநர்கள் (போட்டோசொப், கோரல்ரோ)
- உதவியாளர்கள்
- பயிலுநர்கள்
- விற்பனைப் பிரதிநிதிகள்
- தகுதியானவர்கள் நாளை (16.07.2006) நேரில் தொடர்பு கொள்ளவும்.

எஸ். எஸ். யசோதரன் ஆட்ஸ்,
இல. 212, கோயில் வீதி,நல்லூர்.


## ஒத்துமாறல்

பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர் வவுனியா தெற்கு வலயத்திலிருந்து யாழ்.வலயத்திற்கு ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்புகளுக்கு: 077 6041729

## INVITATION

The Director and Staff of the IBMS cordially invite our Patron, Well-wishers, Friends, Parents and Students to the Awards Ceremony celebration at the IIS City Campus Hall
# 200, Sivan Pannai Road, Jaffna
on Sunday, 16th July 2005 at 9.30 a.m.

Thanking You

Institute of Business Management Studies
# 209 Manipay Road, Jaffna
T.P. No: 021 222 8232


# ஜயோதா

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7616508 முதல் 7626093 வரை. சீட்டிழுப்பு இல. 253 திகதி 13-07-2006

வெற்றி எண்கள்

1 7 8 8 4 1 சுப்பர் எண் 06

ஜக்பொட் பரிசு ரூ. 13,350,600/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 13,350,600/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/= | 1,000,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/= | 450,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 84 | 5,000/= | 420,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 844 | 500/= | 422,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8406 | 50/= | 420,300/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 83325 | 10/= | 833,250/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/= | 45,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 85 | 1,000/= | 85,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 838 | 100/= | 83,800/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8336 | 20/= | 166,720/= |
| | | மொத்தம் | ரூ. 3,926,070/= |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 66,125/= | 529,000/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 4,455,070/=

ரூ. 66,125/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கேகாலை | 7618175-6-05 |
| அம்பாறை | 7621796-1-20 |
| கண்டி | 7621251-9-68 |
| கொழும்பு | 7623155-6-02 |
| மாத்தளை | 7620467-3-59 |
| இரத்தினபுரி | 7621555-6-02 |
| பொலன்னறுவை | 7622203-7-93 |
| நுவரேலியா | 7616524-3-35 |

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 13,584,400/-

தொடர் இல. 6712528 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2006 ஜூலை 17 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.


## கண்ணீர் அஞ்சலி

பட்டின சபை வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டு வாழ்ந்த

**அமரர் கணபதி வேலாயுதம்**
*(வேலுப்பிள்ளை)*
(வேலாயுதம் கடை உரிமையாளர், நவாலி)



மலர்வு 10-02-1937 உதிர்வு 11-07-2006

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*தேவாலய வீதி,*
*சங்கானை.*

சி.இராசலிங்கம் J.P. (அருமை அத்தான்),
திருமதி இ.விசாலாட்சி (அருமை அக்கா),
மருமக்கள், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்.

(52265)(32)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது சக உத்தியோகத்தர் வைரமுத்து தயாமோகனின் அன்புத் தந்தை

**அமரர் விசுவலிங்கம் வைரமுத்து**

*(இளைப்பாறிய பிரதம லிகிதர், சுகாதாரத் திணைக்களம்)*

அவர்கள் சிவபதமடைந்து 31ஆம் நாளான இன்று அன்னாரின் ஆத்மசாந்திக்காக நாமும் பிரார்த்திக்கின்றோம்.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை,
கோப்பாய்.

உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

(52212)

## மரண அறிவித்தல்

### கணபதி வேலாயுதம் (சங்கானை)

பட்டின சபை வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் நவாலியில் வியாபார நிறுவனம் நடத்தி வந்தவரான கணபதி வேலாயுதம் 11.07.2006 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி - பத்தினி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னையா - சிதம்பரம் தம்பதியரின் மருமகனும் தங்கரத்தினத்தின் அருமைக் கணவரும் ஜெயவதனி (ஜேர்மனி), ஜெயகிரிதரன், ஜெயநிசாந்தி, ஜெயபாஸ்கரன், ஜெயறஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் உதயகுமாரின் (ஜேர்மனி) அன்பு மாமனும் தினுசாவின் (ஜேர்மனி) அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான கந்தையா, நல்லையா மற்றும் குமாரு, விசாலாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான தங்கச்சியம்மா, நாகேஸ்வரி மற்றும் இராசலிங்கம் (ஜே.பி.), சண்முகவேல், நாகரத்தினம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(15.07.2006) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் சங்கானை கரைச்சி மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பட்டின சபை வீதி,**
**சங்கானை.**

தகவல்:
**மனைவி, மக்கள்.**

(52257)(32)


**UNIT** பிரத்தியேகப்படுத்துகின்றது

**Hardware** **Networking**

Just Rs. 1000/- Only

வேகப் பயிற்சி நெறி (பாடத்திட்டம் மாற்றமில்லாமல்)

Just Rs. 1500/- Only

வார நாட்களில்

Next Batch on 17.07.2006

இலவச பயிற்சிக் கோவை மற்றும் பல

மற்றவரிடமிருந்து வேறுபட்டு 100% செய்முறைப் பயிற்சிகளுடன்

For Complete Technology

UNIT Education
16/1, Killnar Lane,
K.K.S. Road, Jaffna.

பண்டிக்கோட்டுப் பிள்ளையார் கோவில் எதிர் ஒழுங்கை

Near Jaffna Hindu College
TP: 021-4590720 / 0713134737

Rush to Join Limited seats Only


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டுதாரி எனச் சந்தேகித்த மஞ்சுளாதேவி கிளிநொச்சியில் இன்னும் உயிருடன் இருக்கிறார்!

## பெற்றோர்கள் உறுதிப்படுத்தியமையால் புலனாய்வாளர்கள் குழப்பம்

கொழும்பு ஜூலை 15

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா மீது தற்கொலைத் தாக்குதல் நடத்தினார் எனக் கூறப்படும் பெண்ணை அடையாளம் காண்பதில் பெரும் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலை மஞ்சுளாதேவி என்ற பெண்ணே நடத்தினார் என்றும், இது தொடர்பில் மேலதிக தகவல்கள் பல கிடைத்திருக்கின்றன எனவும் இரு வாரங்களுக்கு முன்னர் கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாடு ஒன்றின்போது பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

ஆனால், பொலிஸ்மா அதிபரால் குறிப்பிடப்பட்ட இந்தப் பெண் தற்போது உயிரோடு இருக்கிறார் என்பது தெரியவந்துள்ளது. இராணுவத் தளபதி மீதானதாக்குதல் குறித்து விசாரணைகளை நடத்திவரும் விசேட புலனாய்வுக் குழுவொன்று பிரஸ்தாப யுவதி சிறு பராயத்தில் வசித்துவந்தார் எனக் கூறப்படும் அனுராதபுரத்திலுள்ள வீட்டுக்குச் சென்றனர். அங்கு நடத்திய விசாரணைகளின் போது புலனாய்வுத் துறையினருக்கு அதிர்ச்சியான பல தகவல்கள் கிடைத்துள்ளன. புலனாய்வுத்துறையினர் வைத்திருக்கும் தேசிய அடையாள அட்டையில் உள்ள படம் தமது மகளின் புகைப்படம் அல்லவென மஞ்சுளா தேவியின் பெற்றோர் தெரிவித்திருப்பதுடன் தமது மகள் தற்போது உயிரோடு இருக்கி றார் என்பதையும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

கிளிநொச்சியில் வசித்துவரும் தமது மகள் இராணுவத் தளபதி மீதான தாக்குதல் இடம்பெற்ற பின்னரும் தங்களுடன் கிளிநொச்சியிலிருந்து தொலைபேசியில் உரையாடினார் என்ற விடயத்தையும் பெற் றோர்கள் கூறியுள்ளனர்.

மஞ்சுளாதேவி என்ற யுவதி உயிருடன் இருக்கிறார் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இராணுவத் தளபதி மீதான தாக்குதல் விசாரணையில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. மஞ்சுளா தேவி என்ற பெயரில் போலி தேசிய அடையாள அட்டை தயாரிக்கப்பட்டிருக்கக்கூடு மென்று விசாரணையாளர்கள் கருதுகின்றனர்.

ஏற்கனவே இந்த சம்பவம் தொடர்பாக சிங்கள கிராம சேவகர் ஒருவர் புலனாய்வுத்துறையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். விசாரணைகள் தொடர்கின்றன.


**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

வடிவேல், மனோரமா நடித்த

இம்சை அரசன் 23ஆம் புலிகேசி

காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்

ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.

(சி-47139)

**நாதன்ஸ்** சினிமா யாழ்ப்பாணம்

ரிச்சட், மதுமிதா, நாசர் நடித்த

**நாளை**

சண்டைகள் நிறைந்த சித்திரம்

காட்சி நேரம் : 10.30, 2.30

(சி-49188)

**தேவை**

சமையல் வேலை தெரிந்த ஆள், உணவு பரிமாறுபவர் தங்கிநின்று வேலை செய்யக்கூடியவர்கள் உடன் தேவை.

தொடர்பு: T.P 0212227539


## கேள்வி அறிவித்தல்

### கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), யாழ்ப்பாணம்

01. கீழ்வரும் வேலைக்கான கேள்விகள் கட்டடங்கள் திணைக்களம் (மா), யாழ்ப்பாணம், பிரதம பொறியிலாளரினால் 01.08.2006 பிற்பகல் 3 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

| தொ. இல. | ஒப்பந்தக் குறியீட்டு இல. | ஒப்பந்த விவரம் | இக்ராட் பதிவு தரம் | கேள்விப் பிணை (ரூபா) | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | JF/DPDHS/UNICEF/05 | கிராமிய சுகாதார நிலையம் நிர்மாணித்தல் மெலிஞ்சி முனை ஊர்காவற்றுறை (மீள் கேள்வி அறிவித்தல்) | M-7 | 46,750 /= | 1000 /= |
| 02 | JF/BD/CE/JBIC/03/2006 | நிர்வாகக் கட்டடம் நிர்மாணித்தல். சுற்றயல்கூறு வைத்தியசாலை. அச்சுவேலி கட்டம் - iv | M-7 | 49,500/= | 1000/= |
| 03 | JF/BD/CE/SS/01/2006 | மாவட்ட சிறுவர் நன்னடத்தை அலுவலகம் நிர்மாணித்தல், கைதடி. (மீள் கேள்வி அறிவித்தல்) | M-7 | 62,250/= | 1000/= |

02. கேள்வி அறிவித்தல் தொடர்பில் பின்வரும் தகைமைகளை கேள்விதாரர்களும் கொண்டிருக்க வேண்டும்.
    - (i) மேற்கூறிய அட்டவணையின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட ICTAD தரத்தைக் கொண்டிருந்தல் வேண்டும்.
    - (ii) ICTAD அறிவுறுத்தலுக்கமைய மேற்படி வேலை தொடர்பில் போதிய கேள்வித் தகவை கொண்டிருத்தல் வேண்டும்.
    - (iii) முன்னைய வேலைகளில் மோசமான நேர்மையற்ற வெளிப்படுத்தல்களைக் கொண்டிருத்தல் கூடாது.
    - (iv) ஒப்பந்தகாரர் புதுப்பித்த தகவுப் புத்தகத்தை கேள்வி ஆவணங்கள் பெற முன்னர் ஒப்படைக்க வேண்டும்.
    - (v) கேள்விதாரர் (VAT) பதிவு செய்ததன் பிரதியையோ அல்லது (VAT) பதிவு செய்யப்பட்டமைக்கான கடிதத்தை ஆணையாளர், உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தால் உறுதிப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும்.
03. ஆர்வமுள்ள கேள்விதாரர் மேலதிக விவரங்களையும் கேள்வி ஆவணங்களையும் இலவசமாக அலுவலக நாள்களில் நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (மா), யாழ்ப்பாணம் பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி இலக்கம் 021 222 2632)
04. 17.07.2006 தொடக்கம் 27.07.2006 பிற்பகல் 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கேள்வித் தொகையான ரூபா 1000/= ஐ பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (மா), யாழ்ப்பாணத்தில் செலுத்தி கேள்வி ஆவணங்களை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.
05. மூடிய கேள்விகளை தலைவர், திணைக்கள கேள்விச் சபை, பிரதம பொறியிலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம்(மாகாணம்) யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 01.08.2006 பிற்பகல் 3 மணிக்கு முன்பாக அனுப்பி வைத்தல் வேண்டும். பெறப்பட்ட கேள்விகள் உடனடியாக திறக்கப்படும். இந்நேரம் கேள்விதாரரோ அல்லது அவர் சார்பில் உரித்தளிக்கப்பட்டவரோ சமுகமளிக்க முடியும்.
06. மேற்படி கேள்வி தயாரித்தல், அனுப்புதல் தொடர்பில் ஏற்படும் எந்த செலவீனங்களுக்கும் தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

குறிப்பு : வேலை தொடர் இலக்கம் 01 கேள்விதாரருக்கு VAT சம்பந்தமாக எந்தவித கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படமாட்டாது என்பதனைக் கவனத்தில் கொள்ளவும்.

*பிரத பொறியியலாளர் அலுவலகம்,*
*கட்டடங்கள் திணைக்களம் (மா),*
*கடற்கரை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(சி/50235)

*எந்திரி க.குகநேசன்*
*தலைவர், திணைக்கள கேள்விச் சபை/*
*பிரதம பொறியியலாளர்,*
*யாழ்ப்பாணம்.*

## திருமுறை முற்றோதல்

நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகை சமேத ஸ்ரீ கைலாச சுவாமி ஆலயத்தில் நால்வர் பெருமக்கள் எழுந்தருளும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மறுநாள் திங்கட்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு விசேட பூசைகள் நடைபெற்று 4ஆம் திரு முறை முற்றோதல் நடைபெறும்.

அகில இலங்கை திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் திருவாவடுதுறை ஆதீனம் வழங் கிய நால்வர் திருவுருவங்களையும் ஆலயங்கள் தோறும் எழுந்தருளச் செய்து திருமுறை முற்றோதல் நடைபெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(204)

## சிறுமி உயிரிழப்பு

விளையாடச் சென்ற சிறுமியை நீண்டநேரமாகியும் காணாததால் தேடிப் பார்த்தபோது வளவுக்கிணற்றினுள் சடலமாகக் காணப்பட்டார் எனத் தெரிவித்து 7வயதுச் சிறுமி ஒருவரின் சடலம் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

அரியாலையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் கிருஷ்ண கோபால் லக்ஷிகா (வயது 7) என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

(25)

## செயலமர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை15

வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர்களுக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த பாடசாலை மட்டச்செயற்றிட்டங்கள் தயாரித்தலுக்கான செயலமர்வு தவிர்க்க முடியாதகாரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இச்செயலமர்வு எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மதிவதனசோதி நடராசா



திருநெல்வேலி, வளாக வீதியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மதிவதனசோதி நடராசா காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை- தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்ற கந்தையா- வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும் நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராஜலட்சுமி, காலஞ்சென்ற பவளநாயகி, கௌரிதேவி, காலஞ்சென்ற சிவலிங்கநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தயாகரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சேகரன், வதனராணி(லண்டன்), நளாயினி (ஆசிரியர், யாழ்/கோண்டாவில் இராமகிருஸ்ண ம.வித்தியாலயம்), பவானி (ஜேர்மனி), பிரபாகரன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயும் வனஜா (ஜேர்மனி), சிவதாசன்(லண்டன்), கேதீஸ்ரன் (கூல் எயார், கே.கே.எஸ்), சிறீமுருகன் (ஜேர்மனி), சுஜா (நோர்வே) ஆகியோரின் மாமியும் ஜனனி, ஜனுசன், கௌசல்ஜா, கேதுஷா, தனுசன் ராமதுளசி, ராமதுஷாந்தினி, ஸ்ரீராம், வர்ணஜா, வெரேனிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2006) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*34/10 வளாக வீதி,*
*திருநெல்வேலி.*

*தகவல்:*
**கணவர், பிள்ளைகள், மருமக்கள்.**

### திருமதி கதிரித்தம்பி தங்கம்மா



அல்வாய் தெற்கைப்பிறப்பிடமாகவும் கைலாயபிள்ளையார் கோயிலடியை நிரந்தர வசிப்பிடமாகவும் 8ஆம் குறுக்குத்தெரு, வத்தளை, கொழும்பைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிரித்தம்பி தங்கம்மா நேற்று (14.07.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அல்வாய் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி ஞானிப்பிள்ளை- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் யாழ். வின்சர் தியேட்டர் முன்னாள் முகாமையாளர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கதிரித்தம்பியின் அன்பு மனைவியும் சரஸ்வதி (கனடா), பத்மாவதி (கொழும்பு), லீலாவதி (லண்டன்), திலகவதி (நல்லூர்), கலாவதி (லண்டன்), கருணாவதி (ஜேர்மனி), சற்குணானந்தன் (ஜேர்மனி), நித்தியானந்தன் (அமெரிக்கா), பாலச்சந்திரன் (லண்டன்), காலஞ்சென்ற சாந்திக்குமார், மனோகரன், சிவநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் சண்முகநாதன் (கனடா), காலஞ்சென்ற பாலசிங்கம் (கனடா), காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (லண்டன்), அருள்பிரகாசம்(லண்டன்), அருட்குமரன் (ஜேர்மனி), தியாகராஜா (நல்லூர்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.07.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் வத்தளையில் நடைபெற்று, பூதவுடல் வத்தளை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*19, கைலாசபிள்ளையார் கோயிலடி,*
*நல்லூர்.*

*தகவல்:*
(52270) **க.நித்தியானந்தன் (மகன்)**

### மூத்ததம்பி செல்லத்துரை

இணுவில் பாலாவோடையைச் சேர்ந்த மூத்ததம்பி செல்லத்துரை நேற்றுக் காலமானார்.

அன்னார் கதிர்காமதேவியின் அன்புக் கணவராவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கே.கே.எஸ் வீதி, மருதனார் மடம்.*

*தகவல்:*
**சத்தியமூர்த்தி** *(மகன்)*

### சின்னையா மருதமுத்துப்பிள்ளை

(ஓய்வு பெற்ற பொது சுகாதார வெளிக்கள உதவியாளர்)



அல்வாயைப் பிறப்பிடமாகவும் சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா மருதமுத்துப்பிள்ளை 13.07.2006 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா- சிவபாக்கியம் தம்பதியரின் இளைய மகனும் காலஞ் சென்ற முத்துக்குமாரு- செல்லப்பாக்கியம் தம்பதியரின் மருமகனும், நகேஸ்வரியின் அன்புக்கணவரும் பிரியதர்ஷினியின் (பிரசன்னா) பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற செல்லத்துரை, வீரசிங்கம் மற்றும் இராஜேஸ்வரியின் சகோதரனும், பிரதீபன் (ஆசிரியர்), ஜெகதீபன் (லண்டன்), சசிதீபா (கனடா), லவதீபன் , நவதீபன் (கனடா), ஆனந்தி, விஜயகுமார், ராஜசங்கர், சியாமிளா ஆகியோரின் சிறிய தந்தையும் கலாறஜனி, மீனா, தெய்வேந்திரம், வயிரராணி, சுஜாத்தா, மதிவதனா, சர்மி, சுலக்ஷனா, பிரபாஉதயனி, மகேந்திரகுமார் ஆகியோரின் மாமனும், சாருஜன், தனுஜன், ஹரிஸ், சௌமியா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் திலகவதி, சண்முகராசா, சின்னத்தங்கம், லீலாவதி, சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும் அவார்.

அன்னாரின் இறுதிக்கியைகள் நாளை (16.07.2006) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுதுமலை மத்தி,*
*மானிப்பாய்.*

*தகவல்:*
**குடும்பத்தினர்**
*தொ.பே: 0777110270, 0776141155*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கைப் பிரிக்கக் கோரி உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

## ஜே.வி.பியினர் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள்

கொழும்பு, ஜூலை 15

இணைந்துள்ள வடக்கு- கிழக்கு மாகாணங்களைப் பிரிக்கும்படி உத்தரவிடக் கோரி கொழும்பு உயர்நீதிமன்றத்தில் நேற்று மூன்று அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களான ஜே.வி.பியின் இரண்டு எம். பிக்கள், மற்றுமொரு முஸ்லிம் பிரமுகர் ஆகியோர் சார்பிலேயே இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ஜே.வி.பியைச் சேர்ந்த திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜயசேகர, திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எல். பி. வஸந்த மற்றும் சம்மாந்துறையைச் சேர்ந்த ஏ. எஸ். முஹமட் புஹாரி ஆகியோரின் சார்பிலேயே இந்த மனுக்கள் தாக்கல் செய் யப்பட்டன.

சட்டமா அதிபர், வடக்கு - கிழக்கு ஆளுநர்,தேர்தல் ஆணையாளர் ஆகியோர் இந்த மனுக்களில் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அவசரகாலச்சட்ட விதிகளின்கீழ் 1988 செப்டெம்பர் 2ஆம் திகதி வடக்கு- கிழக்கு இணைப்புத் தொடர்பாக அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலையும் -

வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பை மேலும் ஓராண்டுக்கு ஒத்திவைத்து கடைசியாக 2005 நவம்பர் 3 ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்த வர்த்தமானி அறிவித்தலையும்-

ரத்துச்செய்யுமாறு உத்தரவிடும்படி இந்த மனுக்களில் கோரப்பட்டுள்ளது.

(உ)

## கிளிநொச்சியில் விபத்து: சிறுமி பரிதாப மரணம்!

ஏ-9 வீதியில்- கிளிநொச்சி தொழில்நுட்ப கல்வி நிறுவகத்துக்கு முன்பாக நேற்று இடம்பெற்ற விபத்து ஒன்றில் சிக்கி சிறுமி ஒருவர் உயிரிழந்தார்.

புஸ்பரட்ணம் ஜிந்துஜா (வயது-4) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறிப்பிட்ட சிறுமி சகோதரருடன் சைக்கிளில் பயணித்துள்ளார். அவ்வேளை சைக்கிளை விலத்திச் செல்ல முற்பட்டதாகக் கூறப்படும் டிப்பர் வாகனம், சைக்கிளை மோதியதில் சைக்கிளில் பயணித்தவர்கள் கீழே விழ நேரிட்டது - என்றும் கூறப்பட்டது.

(204-405)

## உயிரிழந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

* கப்டன் பூவதனன் (கணேஸ் பிரபாகரன் - திகிலிவெட்டை, மட்டக்களப்பு)
* 2 ஆம் லெப்ரினன்ட் வீரா (மாசிலாமணி மகேஸ்வரன் - வாகனேரி, மட்டக்களப்பு)
* 2 ஆம் லெப்ரினன்ட் இளவீரன் (கந்தையா கோணேஸ் - சந்திவெளி, மட்டக்களப்பு)

இதேவேளை - நேற்றைய மோதல் சம்பவத்தில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

* ஆர்.பி.ஜி. எறிகணை செலுத்தி - 1
* ஆர்.பி.டி. எல்.எம்.ஜி.-2
* ரி-56 ரக எல்.எம்.ஜி.-2
* டொங்கான்- 1
* ஏ.கே. 47 ரக துப்பாக்கிகள் -8
* 40 மில்லிமீற்றர் எறிகணை செலுத்தி -1
* ரி- 56 ரக துப்பாக்கிகள் -8
* தொலைத்தொடர்பு சாதனம்-1
* குண்டுதுளைக்காத மேலங்கிகள் -7
* கிற்பாக் -10

(ஐ)

## 12 சடலங்களையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினரின் சடலங்களை அங்கிருந்து அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு எடுத்துச் செல்ல செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு உதவும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் தாக்குதலில் உயிரிழந்த இந்தப் படையினர் சிறப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படும் முக்கிய அணியைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்களில் நால்வர் கோப்ரல் தரத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்டத் தளபதி பிரபா தெரிவித்துள்ளார்.

தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் இராணுவத்தினர் முன்னேறி வந்து நிலைகொண்டிருந்த பகுதியை புலிகள் நேற்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்குக் காட்டினர்.

மோதல் நடந்த பிரதேசத்தையும் உயிரிழந்த இராணுவத்தினரின் சடலங்களையும் கண்காணிப்புக்குழுவினர் பார்வையிட்டனர்.

முன்னேறி வந்த பகுதியில் படையினர் பொதுமக்களின் வீடுகளில் இருந்து சிறு பொருள்களை அபகரித்துள்ளனர் என்றும் உயிரிழந்த படையினரின் சீருடைகளுக்குள் அப்பொருள்கள் காணப்பட்டன என்றும் புலிகள் கண்காணிப்புக் குழுவினரிடம் தெரிவித்தனர்.

போர்நிறுத்த உடன்படிக்கை அமுலுக்கு வந்த பின்னர் இருதரப்பினரிடையேயும் ஏற்பட்ட பெரிய மோதல் இது என்று கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் கருத்துத் வெளியிட்டன.

(ஐ-1)

## தயா மாஸ்டரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு- கிழக்கில் அரச படையினர் நாளாந்தம் புலிகளால் கொல்லப்பட்டு வரும் நிலையில், புலிகள் இயக்கத்தின் முக்கியஸ்தர்களுக்கு இவ்வாறான வசதிகள் செய்து கொடுக்கப்படுவதை வன்மையாக ஆட்சேபிப்பதாக பயங்கரவாதத்துக்கு எதிரான தேசிய இயக்கத்தின் முக்கியஸ்தர் ஒருவர் கூறினார்.

இதேவேளை-

ஆர்ப்பாட்டத்தையொட்டி நேற்று நாரஹேன்பிட்டி பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆர்ப்பாட்டக்காரர்கள் வைத்தியசாலைக்குள் நுழைவதற்குப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட போதும் பொலீஸார் அதனைத் தடுத்துவிட்டனர். சுமார் ஒரு மணிநேர ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

(ஐ)



'அப்பலோ' வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் விடுதலைப்புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்டரைக் கைதுசெய்யக் கோரி, பயங்கரவாதத்திற்கெதிரான தேசிய இயக்கம் நேற்று நாராஹேன்பிட்டியில் ஆர்ப்பாட்டம் நடத்தியபோது எடுக்கப்பட்ட படம் இது.

## புலிகள் பகுதிக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையணியைச் சேர்ந்த - படையினரே இந்த ஊடுருவல் தாக்குதலை நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் முன்னேறி வந்து நீண்டநேரம் நிலைகொண்டிருந்த படையினர் அங்கிருந்தவாறே நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் நால்வர் உயிரிழந்தனர் என்று கூறப்படுகிறது. இதனையடுத்து புலிகளின் படையணி ஒன்று அந்தப் பகுதிக்கு விரைந்துசென்று படையினர் மீது பதில் தாக்குதல் நடத்தியது என்று புலிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. அதனையடுத்து இரு தரப்பினரிடையேயும் கடும் மோதல் நடந்துள்ளது.

இந்த மோதலின்போது ஊடுருவிய படையினருக்கு உதவியாக மியாங்குளம், கரடிக்குளம், வாழைச்சேனை காகித ஆலை ஆகிய படைமுகாம்களில் இருந்து ஆட்லறி மற்றும் மோட்டார் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன என்றும் கூறப்படுகிறது.

வாகனேரியில் ஊடுருவிய படையினருடன் சுமார் ஒரு மணிநேரம் மோதல் நடந்தது என்பதை விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் உறுதி செய்தார்.

இராணுவத்தினர் மீது தாங்கள் மேற்கொண்ட பதில் தாக்குதல் குறித்துக் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அறிவிக்கப்பட் டிருப்பதாகவும் தயா மோகன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - நேற்றைய மோதலில் கொல்லப்பட்ட பன்னிரண்டு படையினரின் சடலங்களை தாங்கள் கைப்பற்றியிருக்கின்றனர் என்றும் விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இராணுவச் சீருடையுடன் பன்னிரண்டு பேரின் சடலங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன என்று புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தயாமோகன் தெரிவித்துள்ளார்.

ஊடுருவிய படையினரில் ஒருவர் புலிகளிடம் உயிருடன் சிக்கியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கோப்ரல் தர அதிகாரியான - மொனராகலையைச் சேர்ந்த - விஜயபால கருணாரட்ண (வயது-24) என்பவரே உயிருடன் புலிகளிடம் சிக்கியுள்ளார்.

இராணுவத்தினரின் அணி ஒன்றே தமது பகுதிக்குள் ஊடுருவி முன்னேறி வந்து தாக்குதல் தொடுத்தது என்று தயாமோகன் கூறினார்.

மட்டக்களப்பில் வாகனேரிப் பகுதியில் ஒரு மோதல் இடம்பெற்றதை கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் உறுதிசெய்தன. இந்தச் சம்பவத்தில் காயமடைந்த படையினர் நால்வர் அங்கிருந்து சிகிச்சைக்காக கொழும்புக்கு கொண்டுவரப்பட்டனர். என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

வாகனேரிப் பகுதியில் இடம்பெற்ற மோதலை அடுத்துப் படையினர் அப்பகுதியை நோக்கி மேற்கொண்ட ஷெல் தாக்குதல்களால் பொதுமக்கள் பலர் இடம் பெயர்ந்துள்ளனர். சம்பவம் நடந்த பகுதியில் இருந்து மக்கள் வெளியேறி பெண்டுகள் சேனை நோக்கி இடம்பெயர்ந்தனர். (ஐ-1)

## பதிலடி கொடுக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேடுதல் நடவடிக்கை ஒன்றுக்காக இராணுவத்தினர் சென்றுள்ளதாகவும் அது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி அல்ல என்றும் இராணுவத்தினர் கூறியதாக கண்காணிப்புக் குழுவினர் பதில் தந்தனர்.

எங்கள் போராளிகளைத் தாக்கி விட்டு அவர்கள் நிற்பதை மீண்டும் சுட்டிக்காட்டினோம். இருப்பினும் இராணுவத்தினர் பின்வாங்காத நிலையில் பதில் தாக்குதல் நடத்த நேரிட்டது.

தாக்குதலுக்கு முன்னராகவே மக்களை அக்கிராமத்திலிருந்து வெளியேறிச் செல்லுமாறு கேட்டுக் கொண்டோம்.

எமது ஜெயந்தன் படையணியினரும், திருப்பித் தாக்கும் அணியினரும் அப்பகுதிக்குச் சென்று பதில தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பல படையினர் கொல்லப்பட்டனர் - பலர் காயமடைந்த நிலையில் தப்பியோடிவிட்டனர்.

கொல்லப்பட்ட 12 இராணுவத்தினரது உடல்களை கைப்பற்றியுள்ளோம். இராணுவத்தைச் சேர்ந்த கோப்ரல் நிலையிலான ஒருவரை கைது செய்துள்ளோம். ரி-56, ஆர்.பி.ஜி, 40 எம்.எம்.எறிகணை செலுத்திகள் என பெருமளவு ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளோம்.

அப்பகுதி எமது முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. இராணுவத்தினரை அவர்களது பழைய நிலைக்கு திருப்பி அனுப்ப 2 மணித்தியாலம் எடுத்தது.

எங்கள் போராளிகள் சம்பவ இடத்துக்குச் சென்றபோது 75 இராணுவத்தினர் அந்த இடத்திலிருந்ததாக தெரிவித்தனர். 150-க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் வலிந்து தாக்குதலை மேற்கொள்ள ஊடுருவியிருந்தனர் என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதலுக்குப் பின்னர் கணகாணிப்புக் குழுவினரை அப்பகுதிக்கு அழைத்து எவ்வளவு தூரம் இராணுவத்தினர் ஊடுருவியிருக்கின்றனர் என்பதையும் இராணுவத்தினரது உடல்களையும் கைது செய்யப்பட்ட நபரையும் காட்டியுள்ளோம்.

இலங்கையில் இப்போது யுத்த நிறுத்தம் அமுலில் இருக்கிறதா? என்பதை சிறிலங்கா அரசாங்கத்திடம் கேட்டுத் தெரியப்படுத்துமாறும் கேட்டுள்ளோம் - என்று தெரிவித்தார் தயாமோகன்.

(ஐ)


**பத்திரிகை மடிப்பதற்கு ஆள்கள் தேவை**

* அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
* பத்திரிகை மடிப்பதில் தேர்ச்சிபெறும் வரை பயிலுநர்களுக்கு அவர்களது ஊதியத்துடன் மேலதிகமாக விசேட அலவன்ஸ் வழங்கப்படும்.

கீழ்க்காணும் விலாசத்திற்கு உடன் நேரில் வரவும்

'உதயன்'

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


**கண்ணீர் அஞ்சலி**

எமது பாடசாலையின் ஆசிரியை

நளாயினியின் அன்புத் தாய்

திருமதி மதிவதனசோதி நடராசா

அவர்களின் பிரிவையிட்டு மிகுந்த துயரடைகின்றோம்.

அன்னாரின் பிரிவுத்துயரில் பங்குகொள்வதோடு, அவரது ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.


ICT Information & Communication Technology

Grade- (10-11) UNIT-03

தரம் 10 மாணவர்களுக்கு அலகு-03 இற்கான தமிழ் மொழி மூலமான விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

Days :- Sat, Sun, Mon

C.B Computer Academy

T.P No. 021-4590291 Station Road, Kondavil.

விமானப் பயணச் சீட்டு

* முன்கூட்டிய பதிவுகளுக்கு சலுகைக் கட்டணம்
* யாழ்.கொழும்பு துரித தபால் மற்றும் ஆவண சேவை

MANOJ TOURS (PVT) LTD.

இல.32, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே.: 021 222 3916, 0777 517019, 0777 801038


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.07.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமான தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும்


வெளியீடு 15

# புலமைப்பரிசில் பரீட்சை
# மாதிரி வினாப்பத்திரம்


திரு.வே. அன்பழகன் - யாழ்ப்பாணம்.

**வினாத்தாள் - I** **நேரம்: 45 நிமிடம்**

1) சரியான முறையில் புத்தகங்களுக்குப் பக்க இலக்கமிடப்பட்டுள்ளதைத் தெரிந்து கோடிடுக.




2) மிகச் சரியான இடங்களில் மணித்தியால முள்ளு, நிமிட முள்ளு அமைந்திருக்கும் கடிகார முகத்தைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.





3) வேகமாகச் சுழலும சககரததை நிழறறிக காட்டுக.





- **கீழே காணப்படும் ஒவ்வொரு வினாவிலும் உருக்கள் வரையப்பட்டுள்ளன. கோலத்தை இனங்கண்டு அடுத்து வரவேண்டிய உருவைத் தரப்பட்டுள்ள விடைகள் நான்கில் இருந்து தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**


4)




5)




- **கீழே வட்ட வரைபுகள் இரண்டின் மூலம் காட்டப்படுவது A, B எனும் இரு தோட்டங்களில் உள்ள மரங்களின் எண்ணிக்கையாகும். A எனும் தோட்டத்திலுள்ள மொத்த மரங்களின் எண்ணிக்கை 80 ஆகும். B எனும் தோட்டத்தில் உள்ள மொத்த மரங்களின் எண்ணிக்கை 120 ஆகும்.**




6) A எனும் தோட்டத்தில் உள்ளதும், B எனும் தோட்டத்தில் இல்லாததுமான மரவகை யாது? ..........................

7) A எனும் தோட்டத்தில் உள்ள மா மரங்களை விட, B எனும் தோட்டத்தில் எத்தனை மா மரங்கள் அதிகம் உள்ளன? ..........................

- **கீழே காணப்படும் ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள ஐந்து சொற்களில் நான்கு சொற்கள் ஏதோ ஒரு விதத்தில் தொடர்புபட்டுள்ளன. அத்தகைய சொற்களில் தொடர்பற்ற ஒரு சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**


8) HIJK, NOPQ, VXWY, RSTU, CDEF
9) அதிகாலை, நாளை, இரவு, மாலை, பகல்,

- **கீழே காணப்படும் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையை இடைவெளிகளில் எழுதுக.**

10. 


இவ்வுருவில் காட்டப்படுவது வட்டவடிவான ஒரு கம்பியாகும். அவ்வட்டக் கம்பி நிலத்தில் நான்கு முறை சுழன்றால் அது பயணஞ் செய்த தூரம் எத்தனை மீற்றராக இருக்கும்? ..........................

11. என்னிடமுள்ள பணம் ரூபா 15.00 ஆகும். தம்பியிடம் உள்ள பணம் ரூபா 7.00 ஆகும். என்னிடமும் தம்பியிடமும் உள்ள பணத்தொகைகள் சமனாவதற்கு நான் தம்பியிடம் எவ்வளவைக் கொடுக்க வேண்டும்.........................

- 


**உருவப் படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு மூன்று பாத்திரங்களிலும் நீர் உண்டு. அம்மூன்று பாத்திரங்களிலுமுள்ள நீர் ஒவ்வொரு பாத்திரத் திலும் சமமாக இருப்பதற்கு A பாத்திரத்திலிருந்து B, C பாத்திரங்களுக்கு ஊற்ற வேண்டிய நீரின் அளவை** எழுதுக.

12. A பாத்திரத்திலிருந்து B பாத்திரத்திற்கு ஊற்ற வேண்டிய நீரின் அளவு யாது?.............
13. A பாத்திரத்திலிருந்து C பாத்திரத்திற்கு ஊற்ற வேண்டிய நீரின் அளவு யாது?.............
14. 

இவ்வுருவில் காணப்படுவது ஒரேயளவுள்ள சிறிய சதுரமுகிகளினாலான ஒரு திண்ம வடிவமாகும். உருவின்படி இங்குள்ள சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கை யாது? ..........................

15. B S T K N H V L

சதுரவடிவான காட்போட் அட்டைகளில் எழுதப்பட்ட ஆங்கில எழுத்துகள் மேலே காணப்படுகின்றன. முகம் பார்க்கும் கண்ணாடி ஒன்றின் மூலம் பார்க்கும்போது மாற்றமில்லாமல் (அதே முறையில்) தென்படும் ஆங்கில எழுத்துகளை மாத்திரம் எழுதுக. ..................................................


- **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் அடைப்புக்குள் தரப்பட்டுள்ள ஐந்து சொற்களையும் குறிப்பிட மிகவும் பொருத்தமான சொல் எதுவெனத் தெரிந்து கீறிடுக.**


16. [அன்னாசி / வாழை / கத்தரி / புடோல் / வேம்பு]
1. பழம்
2. மரக்கறி
3. தாவரம்
4. செடி


17. [காலை / மதியம் / அந்தி / மாலை / இரவு]
1. நாள்
2. பொழுது
3. கிழமை
4. உலகம்

**வெற்றிடத்தில் வரும் உருவினைத் தெரிந்து அதன்கீழ்க் கோடிடுக.**

18. 


19. 


20. 


21. 


- **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள நான்கு சொற் சோடிகளில் ஒன்று ஏனைய மூன்று சோடிகளிலும் இருந்து வித்தியாசமானது. அதன் கீழே கீறிடுக.**

22. 1. சூரியன் - கதிரவன் 2. புத்தகம் - நூல்
3. காலை - மாலை 4. கண் - விழி
23. 1. கழுத்து - மாலை 2. தலை - தொப்பி
3. கண் - கண்ணாடி 4. கொம்பு - மாடு

- **சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

24. என்னிடமுள்ள முத்திரைகளின் எண்ணிக்கையின் இரு மடங்கிலும் 15 கூடுதலான முத்திரைகள் எனது தங்கையிடம் இருந்தன. எனது அக்காவிடம் இருந்த முத்திரைகளின் எண்ணிக்கை எனது தங்கையிடம் இருந்த முத்திரைகளின் எண்ணிக்கையின் இரு மடங்காகும். அக்காவிடம் 90 முத்திரைகள் இருந்தன எனின், என்னிடம் உள்ள முத்திரைகள் எத்தனை?
1) 45 2) 30 3) 20 4) 15

25. நீலா 400m நீளமும் 200m அகலமும் உடைய மைதானம் ஒன்றைச் சுற்றி 2 தடவைகள் ஓடுவதற்கு 1 நிமிடமும் 20 செக்கன்களும் எடுத்தாள். நீலாவின் சாதாரண ஓட்ட வேகம் யாது?
1) 1 நிமிடத்திற்கு 30 மீற்றர் 2) ஒரு செக்கனுக்கு 30 மீற்றர்
3) 1 செக்கனுக்கு 60 மீற்றர் 4) ஒரு செக்கனுக்கு 40 மீற்றர்

26. சில வருடங்களுக்கு முன்னர் அம்மாவின் வயது எனது வயதின் 3 மடங்காகும். அப்போது எங்கள் இருவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 40 வருடங்கள் ஆகும். அம்மாவின் தற்போதைய வயது எனது வயதின் இருமடங்காகும். தற்போதைய எனது வயதையும், எனது அம்மாவின் வயதையும் முறையே காட்டும் விடை யாது?
1) 32, 64 வருடங்கள் 2) 16, 32 வருடங்கள்
3) 20, 40 வருடங்கள் 4) 12, 24 வருடங்கள்

27. அத்திவாரம் ஒன்று இடுவதற்காகக் கயிறு கட்டுவதற்கு 480 m கயிறு தேவைப்பட்டது. ரூபா 15 விலையுள்ள ஒரு கயிற்று முடிச்சில் 20 m நீளமான கயிறு உண்டு எனின், அத்திவாரத்திற்காக கயிற்றுக்கு ஏற்படும் மொத்தச் செலவு யாது?
1) ரூபா 240 2) ரூபா 360 3) ரூபா 300 4) ரூபா 340

- **பின்வரும் பகுதியை வாசித்து கீழ்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய விடையைத் தெரிந்து கீறிடுக**

அவர்கள் இருவரும் முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தனர். 'விளையாடியது போதும் வந்து புத்தகத்தை எடுத்துப் படியுங்கள்' என்று அம்மா அவர்களுக்குக் கட்டளையிட்டாள். இருவரும் முகம், கால் கழுவிக் கொண்டு வந்து படிக்கத் தொடங்கினர். இவர்களின் மூத்த பிள்ளையான நீலா தரம் 5 தமிழ்ப் பாடப் புத்தகத்திலிருந்த சில வினாக்களுக்கு விடை எழுதினாள். மற்றப் பிள்ளை புத்தகம் ஒன்றிலிருந்து ஒரு பாடத்தை மௌனமாக வாசித்துக் கொண்டிருந்தது. ஒரு சில மணி நேரத்தின் பின்னர் இரவு ஒன்பது மணிச் செய்தியைக் கேட்பதற்காக அம்மா வானொலிப் பெட்டியைத் திருகினாள். செய்தி முடிவுற்றதும் பிள்ளைகள் இருவரும் சாப்பிட்டு விட்டுத் தூக்கத்திற்குச் சென்றனர்.

28. பிள்ளைகள் முற்றத்தில் விளையாடியது, மாலை நேரத்திலாகும்.
1) சரி 2) பிழை 3) கூறமுடியாது

29. அவர்கள் இருவரும் பெண் பிள்ளைகளாவர்
1) சரி 2) பிழை 3) கூறமுடியாது

30. நீலா இந்த வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கிறாள்.
1) சரி 2) பிழை 3) கூறமுடியாது

- **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள வாக்கியங்களில் மிகச் சரியான கருத்துள்ள வாக்கியத்தின் கீழ்க் கீறிடுக.**

31. 1) இனிமையாகப் பாடிய பாலனின் குரல் வளத்தையும், திறமையாகப் பேசிய சீலனின் பேச்சாற்றலையும் எல்லோரும் பாராட்டினார்கள்
2) இனிமையாகப் பாடிய பாலனின் பேச்சாற்றலையும், இனிமையாகப் பேசிய சீலனின் குரல் வளத்தையும் எல்லோரும் பாராட்டினார்கள்.
3) திறமையாகப் பாடிய பாலனின் பேச்சாற்றலையும் இனிமையாகப் பேசிய சீலனின் குரல்வளத்தையும் எல்லோரும் பாராட்டினார்கள்

32. 1. போட்டியில் வேகமாகப் பயிற்சியில் ஈடுபட்ட முகுந்தன் அதிகமாக முதலிடம் பெற்றான்.
2. வேகமாகப் பயிற்சியில் ஈடுபட்ட முகுந்தன் போட்டியில் அதிகமாக ஓடி முதலிடம் பெற்றான்.
3. அதிகமாகப் பயிற்சியில் ஈடுபட்ட முகுந்தன் போட்டியில் ஓடி முதலிடம் பெற்றான்.

- **பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**


33. காந்தி தினமும் துவிச்சக்கர வண்டியில் பாடசாலைக்கு வருவாள். நேற்று அவள் பாடசாலைக்குத் தாமதமாக வந்தாள். அவளின் தாமதத்திற்குக் காரணமாக இருக்கக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியது எது?
1. நேற்றுப் பாடசாலைக்கு பஸ்ஸில் வந்தமை.
2. நேற்றுக்காலை அவள் தூக்கத்திலிருந்து தாமதமாக எழுந்தமை.
3. நேற்று முழுவதும் எழுந்து நடக்க முடியாத அளவு அவள் சுகவீனமுற்றிருந்தமை.

34. சென்ற வருடத்திலும் பார்க்க இந்த வருடம் விபுலானந்த வித்தியாலயத்திலும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகும். இதற்குக் காரணமாக இருக்கக் கூடியது பின்வருவனவற்றுள் எது?
1. புதிய ஆசிரியர்கள் பலர் நியமிக்கப்பட்டமை.
2. விபுலானந்தா வித்தியாலயம் அப்பிரதேசத்தில் பிரபலமான பாடசாலையாக இருந்தமை.
3. சென்ற வருடத்திலும் பார்க்க இவ்வருடம் கூடுதலான பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டமை

- **கீழே காணப்படும் ஒவ்வொரு வினாவிலும் மிகச் சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**



இவ்வுருவில் உள்ள A பெட்டியில் நீலநிற மாபிள்கள் 6 உம், சிவப்பு நிற மாபிள்கள் 3 உம், பச்சை நிற மாபிள்கள் 5 உம் உள்ளன. B பெட்டியில் நீல நிற மாபிள் ஒன்றும், பச்சை நிற மாபிள் ஒன்றும் உள்ளன.

35. B பெட்டியில் இருந்து ஒரு மாபிள் A பெட்டியில் இடப்பட்டது. அதன்படி இப்போது A பெட்டியில் உள்ள நீல நிற மாபிள்களின் எண்ணிக்கை யாது?
1) 3 2) 7 3) 6 4) கூறமுடியாது

36. இப்போது A பெட்டியில் உள்ள சிவப்பு நிற மாபிள்களின் எண்ணிக்கை யாது?
1) 4 2) 3 3) 5 4) கூறமுடியாது


37. அதன்பின் B பெட்டியில் எஞ்சிய மாபிளும் A பெட்டியில் போடப்பட்டது. இப்போது A பெட்டியில் உள்ள பச்சை நிற மாபிள்களின் எண்ணிக்கை யாது?
1) 4 2) 5 3) 6 4) கூறமுடியாது

- **ஆங்கில அரிச்சுவடியிலுள்ள ஆங்கில எழுத்துக்கள் சில ஒழுங்கு முறையாகப் பின்வரும் முறையில் எழுதப்பட்டுள்ளன.**

A, B, C, D, E, F, G, H, I, J, K, L, M, N, O, P, Q........
மேலேயுள்ள ஆங்கில எழுத்துக்களை ஒரு கோலத்தில் பயன்படுத்தி பின்வரும் வினாக்களில் எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. அந்த ஒவ்வொரு வரியிலுள்ள கோல அமைப்பிளை விளங்கிக் கொண்டு அடுத்து வரவேண்டிய ஆங்கில எழுத்துக்களை வெற்றுக் கூண்டினுள் எழுதுக.

38. A, C, F, J ☐

39. AC, BD, CE, DF ☐

40. 


உருவில் காட்டப்பட்டுள்ளவாறு பலகையினால் ஆன ஒரு சதுரமுகியாகும். இதிலிருந்து ஒரு பக்க நீளம் 1 cm உடைய சிறிய சதுரமுகிகள் எத்தனை வெட்டலாம்?

..............................................

## வினாத்தாள் - II **நேரம்: 1.15 நிமிடம்**

**01] பின்வரும் பாடலைப் படித்துக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக**

நல்ல பண்டங்களைக் கண்டறியோம் – ஒரு
நாளும் வயிறார உண்டறியோம்
அல்லும் பகலும் அலைந்திடுவோம் – பசி
ஆறவழியின்றி வாடிடுவோம்

01. இப்பாடலைப் பாடுவோர் தாம் ஏன் வாடுவதாகக்கூறுகின்றனர்? ..............................


பின்வரும் சொற்களால் கருதப்படுபனவற்றை எழுதுக
02. வயிறார ..............................
03. கண்டறியோம்..............................
04. இப்பாடலில் காணப்படும் இணைமொழியை எழுதுக.
..............................................................
05. இப்பாடலில் உள்ள பெயர் அடைமொழி எது? ..............................

பிரித்து எழுதுக.
06. உண்டறியோம் =.................+......................
07. வழியின்றி =.................+......................

ஒத்த கருத்துச் சொற்கள் தருக.
08. பண்டங்கள் =...................................
09. நாள் =...................................

எதிர்க் கருத்துச் சொற்கள்தருக.
10. நல்ல =...................................
11. பகல் =...................................

**02] கீழே காணப்படும் உருவப்படங்களின் படி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**



1. மேலுள்ள உபகரணங்களைப் பயன்படுத்துபவர் எத்தொழிலைச் செய்பவராவர்?
.........................



2. மேலுள்ள உபகரணங்களைப் பயன்படுத்துபவர் எத்தொழிலைச் செய்பவராவர்?
.........................




3. மேலுள்ள உபகரணங்களைப் பயன்படுத்துபவர் எத்தொழிலைச் செய்பவராவர்? ........................

**03] கீழே ஒவ்வொரு வினாவிலும் இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிந்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**
(செய்வார்கள், சென்றேன், செய்வேன், செய்வார், போனோம், படித்தோம்)
1. அவர் சிரமப்பட்டு வேலை..................
2. நான் நேற்று ஊருக்குச் ..................
3. நாங்கள் நேற்று பாடம்..................

**04] கீழே காணப்படும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக்குக.**
1. ஒன்று / உணவுப்பொருள்களை / குளிர்சாதனப் பெட்டி / பாதுகாக்கலாம் / நீண்டகாலம் / இருப்பதனால்
..............................................................................
2. நன்றாக / சாப்பிட வேண்டும் / நிலத்தில் / கழுவியபின் / விழுந்த பழங்களை
..............................................................................
3. பழங்களினால் / அவசியமான / கிடைக்கின்றன / காய்கறி / விற்றமின்கள் / உடலுக்கு
..............................................................................

**05] நீங்கள் அறிந்த இரு பழமொழிகள் தருக.**
1. ..............................................................................
2. ..............................................................................


**06] கீழே காணப்படும் வினாக்களுக்குரிய விடைகளை உரிய இடைவெளியில் எழுதுக.**
1. இலங்கையின் தேசிய விளையாட்டு எது?..................
2. அந்த விளையாட்டுக்குப் பயன்படுத்தும் விளையாட்டு உபகரணம் யாது?
..........................




3 . இந்த சங்கீத உபகரணத்தின் பெயர் என்ன?..............................
4 . இந்தச் சங்கீத உபகரணத்தினால் ஒலி வெளியேற என்ன செய்ய வேண்டும்? ..............................

**07] கீழே உள்ள வினாக்களுக்கான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**
1. இலங்கையின் தேசியப்பறவை யாது?..........................
2. போத்தல் ஒன்றின் மூடியைத் திறக்கப் பயன்படும் உபகரணத்தின் பெயரை எழுதுக.
..........................................
3. சிறிய பொருள் ஒன்றைப் பெரிதாக்கிப் பார்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம் ஒன்றின் பெயரை எழுதுக.
..........................................
4. தூக்குக் குண்டினைப் பயன்படுத்தும் தொழிலாளி யார்?..........................
5. தேசிய துக்கதினம் ஒன்று அனுஷ்டிக்கப்படும் போது தேசியக் கொடி எவ்வாறு பறக்க விடப்படும்? ..........................

**08] பின்வரும் வினாக்களுக்கான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

1 . 

இவ்வுருவில் நிழற்றப்பட்டிருப்பது முழு உருவின் என்ன பின்னமாகும்?
..........................

2 . 

(1). இவ்வுருவின் நிழற்றப்படாத பகுதி முழு உருவின் என்ன பின்னமாகும்?
..........................

(2). இதில் நிழற்றப்படாத பகுதியைத் தசம எண்ணாகத் தருக.
..........................

**09] சரியான விடை எழுதுக**
1) எதிர்ப்பாற் சொல் எழுதுக. கணவன் - ..........................
2) எதிர்மறைச் சொல் எழுதுக. வந்தான் - ..........................
3) பன்மைச் சொல் எழுதுக அது - ..........................
4) ஒரு வசனமாக எழுதுக
தம்பி பாடசாலைக்குச் சென்றான்
தங்கை பாடசாலைக்குச் சென்றாள்
..............................................................................

**10] சரியான விடை எழுதுக**
சலசல, அல்லும்பகலும், வட்டவட்ட, சின்னஞ்சிறிய, கண்திறத்தல், பசுமரத்தாணிபோல, அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
1) இணைமொழி எது? ..............................
2) பழமொழி எது? ..............................
3) இரட்டைக்கிளவி எது? ..............................
4) அடுக்குமொழி எது? ..............................
5) அடுக்கிடுக்குத் தொடர் எது?..............................
6) மரபுத் தொடர் எது? ..............................
7) உவமைத் தொடர் எது? ..............................


**11] ஒரு நகரத்தில் கீழ்வரும் உருக்கள் காட்டும் சமய நிலையங்கள் காணப்பட்டன. அவை ஒவ்வொன்றும் எந்த சமயத்திற்கு உரியவை என்பதை அவ்வுருக்களின் கீழேயுள்ள புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.**

1) 

(1) (2) (3) (4)

2) பின்வரும் ஒவ்வொரு சமய விழாக்களையும் கொண்டாடுபவர்கள் எந்தெந்த சமயத்தவர்கள் என்பதை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
1. ரம்ழான் .......................... 2. மகாசிவராத்திரி ..........................
3. வெசாக் .......................... 4. நத்தார் ..........................

3) கீழே ஒவ்வொரு உருக்களினாலும் காட்டப்பட்டுள்ள ஆடையலங்காரத்தின்படி அவர்கள் எந்த சமயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை அவ்வுருக்களின் கீழேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.




(1) (2) (3) (4)

.................... .................... .................... ....................

**12] பின்வரும் வினாக்களுக்கான விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**



அருகே உள்ள அட்டவணை சில நகரங்களுக்கிடையேயான தூரங்களைக் கிலோமீற்றரில் காட்டுகிறது
01. அம்பாந்தோட்டையில் இருந்து கண்டிக்கான தூரம் யாது?..........
02. எவ்விரு நகரங்களுக்கிடையில் அதிக தூரம் காணப்படுகிறது?
.............................. ..............................
03. குறைந்த தூரம் காணப்படுவது எவ்விரு நகரங்களுக்கிடையிலாகும்?
.............................. ..............................



04. ஒரு சதுர வடிவக் கடதாசியில் இருந்து ஒரு சிறிய சதுரவடிவத் துண்டு நீக்கப்பட்டுள்ளதை உருகாட்டுகிறது. அதில் நிழற்றப்பட்ட பகுதியின் சுற்றளவு யாது? ..................

05. இக்கடிகார நேரம் நள்ளிரவு நேரம் எனின் இதனை நியமநேரத்தில் எழுதுக.
..................



**(பின்பக்கம் பார்க்க....)**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org